முத்து விசய ரகுநாத சேதுபதி மீது

சொக்கநாதக் கவிராயர்

பாடிய

பணவிடு தூது

பதிப்பாசிரியர்

இரா. நிர்மலாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

அடையாறு, சென்னை - 600 020.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	—	Paṉa Viṭu Tūtu
Editor	—	R. NIRMALADEVI, M.A., Dip. in Epigraphy & Archaeology, Dip. in Manuscriptology. Research Scholar, I. I. T. S. Madras-20.
Publication Number	—	20
Language	—	Tamil
Edition	—	First
Date of Publication	—	September, 1980
Paper used	—	18 Kg. Hindustan Ptg.
Size of the book	—	21×14 cms.
Printing types used	—	10, 12, points
Number of Pages	—	XII+116
Number of Copies Printed	—	1200
Price	—	**Rs. 6. 00.**
Printers	—	Novel Art Printers, Madras-600014: Phone-82731
Binding	—	Card Board
Artist	—	Amudhone
Publisher	—	International Institute of Tamil Studies, Madras-600020.
Subject	—	A Tamil literary variety Tūtu-with its Comentary and explanations

★

1981 சனவரியில் மதுரையில் நடைபெற இருக்கும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி இந்நூலை வெளியிடுகிறோம்.

தமிழக அரசின் திட்டத்தின்படி அச்சில் வராத ஏடுகளைப் பதிப்பிக்கும் நோக்கில் 'முத்து விசய ரகுநாத சேதுபதி மீது சொக்கநாதக் கவிராயர் பாடிய பணவிடு தூது' என்ற நூல் மூன்றாவது நூலாக இந்நிறுவனத்தில் இருந்து வெளிவருகிறது.

★

முன்னுரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கடந்த ஆண்டில் இருந்து 'சுவடியியல் பயிற்சிக் கல்வி' நடத்துகின்றது. தமிழக அரசு உலகில் எல்லா பாகங்களிலும் உள்ள சுவடிகளை எவ்வாறாயினும் தருவித்து, பதிப்பித்து வெளியிட வேண்டும் என்று முயன்று கொண்டிருக்கிறது. மதுரையில் நடைபெற இருக்கும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் அச்சில் வராத பல ஏடுகளை வெளியிட வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளது. அம் முடிவின்படி இந்நூல் வெளிவருகிறது. 'முத்து விசய ரகுநாத சேதுபதி மீது சொக்கநாதக் கவிராயர் பாடிய பணவிடு தூது' என்ற சுவடியினைத் தெளிவாகவும், முறையாகவும் கற்றுப் பதிப்பித்துள்ளார் செல்வி இரா. நிர்மலாதேவி. அவர் பணியினைப் பாராட்டுகிறேன். அவர் கடந்த ஆண்டு சுவடியியல் பயிற்சி பெற்ற மாணாக்கருள் முதல் நிலையில் வெற்றி பெற்ற மாணாக்கர். அவர் இப்போது சுவடிகளை ஆயும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இந்நூல் பல புதிய வரலாற்றுச் செய்திகளையும், இலக்கிய நயங்களையும் கொண்டு அமைந்துள்ளது. அவற்றைத் தமிழ் உலகம் படித்து அறிந்து பயன் பெறும் என்று நம்புகிறேன்.

இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் சிறந்த முறையில் ஊக்கம் அளித்துவரும் நிறுவனத் தலைவர், கல்வி அமைச்சர், மாண்புமிகு செ. அரங்கநாயகம் எம்.ஏ., பி.எல்., பி.டி. அவர்கட்கு எங்கள் நன்றி என்றும் உரித்து.

இந்நூலை மிகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் உரிமையாளர், கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கு எங்களுடைய அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அடையாறு
சென்னை 20

அன்புள்ள
ச. வே. சுப்பிரமணியன்

உள்ளே

எண்	தலைப்பு	பக்க எண்
I	Introduction	VII
II	நன்றியுரை	1
III	பதிப்பாசிரியர் முகவுரை	2-5
IV	தூது-ஒரு பார்வை	6-24
V	நூலாசிரியர் வரலாறு	25-30
VI	பாட்டுடைத்தலைவன் வரலாறு	31-39
VII	நூலாராய்ச்சி	40-63
VIII	பணவிடு தூது	65-103
IX	தூது நூற்தொகுப்பு	104-107
X	சொல்லகராதி	108-114
XI	துணை நூற்பட்டியல்	115-116

Introduction

The growth and eminence of a language also lies in the mushroom growth of new literary types, in eyery period. Tūtu is also one among them. It is known as cantēcam in Sanskrit. A classical example is Mēkacantecā by Kālitācā. This form is employed in Malayalam, Telugu, Sinkalam, Bengali and Pali literatures also.

The constituent element of this tūtu is conveying the message through uyartiṇai (class of superior beings) or Aḵriṇai (class of inferior beings) from the lady love to her lover or vice versa through Kaliveṇba metre.

Tolkāppiyam says messages can be sent through heroine's confidant, mother, brahmin, hero's friend, ministrel, bardess (lady singer), youngsters, guest, actor / dancer, female dancer / actress, noble and seers. The object which carry the message is said to be ten by the Pāṭṭiyal treatises such as Swan, Peacock, Parrot, lady's maid, bush myna, cloud, cuckoo, heart, wind and bee. But the poets, apart from these employs Money, language (Tamil), deer, conversation, paddy, Tobbacco, Crow, Dress, donkey, love, flowers like Kuvaḷai (Purple Indian Water lily) champale, jasmine etc.

Selecting the object depends upon the author's fertile imagination or the object which is suitable for the hero. Though tūtu is written always praising the hero, there are few criticising also. For example Aḷakiya Ciṟṟmbala Kavirāyar composed a poem on his foe Caṭṭanātaṉ namely 'kaḷutai viṭu tūtu' and 'kukkal viṭu tūtu' which is available in the Tamil manuscripts. No. R 5192 and R 5275, in Saraswathi Mahal Library, Tanjore,

Cankam literature and Tolkappiyam speaks about tūtu in both the field Akam and Puram. But in Tamil literature Akam is much spoken, from the very growth of this literature. We can find tūtu concept in Kalampakam, Kōvai and Kuravanchi too. Now there are more than Seventy tūtu literatures.

The subject tūtu is divided into two as Akam (love theme) and Puram (objective themes apart from love). Among these many poems are under Akam. Most of the tūtu are through the object of Akriṇai. In general it is a love lyric written with the intension of conveying the message of the love from the heroine to her lover. The messenger is completely won over to fulfill his mission effectively and quickly. Again, the title of the literature is derived from the object which acts as this messenger.

The following three elements can be found in the tūtu i.e. (1) Other objects are not upto the mark to carry the communication. (2) this is the only thing that can be used and fit for the purpose, and (3) the message which is to be conveyed to the hero.

More over almost all the Akam poems conclude with an ending of asking the sender to bring the garland of the hero as a token of his acceptance.

Saint Umāpati Civāccāriyār was the pioneer in coining this type of poem in Tamil by neñcu Viṭu tūtu in which a Saiva spiritual preceptor addresses his own heart to go to his master and secure his garland as a token of his love and mercy towards human being.

Paṇa viṭu Tūtu

Paṇa viṭu tūtu printed in book form from the palm leaf manuscripts for the first time. This manuscript is available now in Dr. U.V. Cāmināta Aiyar's library, Tiruvanmiyur.

One among the five Paṇa viṭu tūtu is Muthu Vijaya Rakunāta Cētupati Paṇa viṭu tūtu writen by Palapaṭṭaṭai Cōkkanāta Kavirāyar. The other four are (1) Pullai Kumarēcar

Paṇa viṭu tūtu (2) Cinna Vaṉṉiyaṉār Pēril Paṇa Viṭu tūtu (3) Mātai Thiruveṅkatanātar Paṇa viṭu tūtu and (4) Ramēs waram Ramalinkēcar Paṇa viṭu tūtu. The first two mentioned are not yet printed.

Author

Cōkkanāta piḷḷai, Cokkanāta Kavirāyar, Cokkanāta Pulavar, and Palapaṭṭaṭaic Cōkkanātak Kavirāyar are the various names by which the author was called. His extensive works in this feild bears evidence of his contribution to Tamil literature especially in the development of Prabandas. He belongs to a cummunity which used to maintain accounts. i.e., Palapaṭṭaṭaik Kaṇakku', and he has been named after his vocation as Palapaṭṭaṭaic Cokkanāta Kavirāyar which is evident through Dr. U.V. Cāminātа Aiyar's version. Kavirāyar means well versed in literature. His father's name was Cōkkaliṅkam Piḷḷai.

We know that he was a pious saivite through his stray verses and other literary works. But his 'Aḻakar Kiḷḷai viṭu tūtu' sung on the almighty Tirumāl shows that he had no aversion to Vaishnavism.

Period

He belongs to the reign of Tirumalai Nayakar, is revealed, from the truth that there was a debate between him and Cuppiratīpa Kavirāyar who was the teacher of Vīramā Muṉivar. So it is clear that he lived in between the 17th and 18th Century. Paṭikkācū Pulavar, Parañcōti Muṉivar, Tirikūṭa Rācappa Kavirāyar, Umaṟuppulavar, Vīramā Muṉivar and Kaṭikai Muttup Pulavar also lived in the same age.

The works of the poet:

1. Patmakirinātar teṉṟal viṭu tūtu
2. Caṇpakanallūrc civaperumaṉ vaṇṭu viṭu tūtu
3. Aḻakar kiḷḷai viṭu tūtu
4. Tēvai ulā
5. Viñcaik kōvai (yet to be printed)

6. Maturai mummaṇik kōvai
7. Maturai yamaka antāti.
8. Nārasiṅkaṉ vaḷamaṭal
9. Karantaik kōvai and
10. Karantai varukkak kōvai were also of the works by the same author. Apart from this he has composed 75 stray verses also. He has written special foreward (Ciṟappuppāyiram) to parañcōti muṉivar's Thiruviḷaiyataṟ purāṇam.

His works deal not only with Lord Civā but also about kings, ministers, philanthropist and well to do. Apart from vijaya Rakunāta cētupati he was composed a song on his minister Teyvakaṇṇi as "Viñcaik kōvai",5 lyrics on king civantāṉ Mallaip Pallavaṉ, ceṅkuṉṟaiyūrāṉ Vaḷḷaikkāḷatti, Pōcarācaṉ, Māvaik Kaṟuppaṉ and Kaṇṇivāṭi Zamintār Naraciṅka Nāyar.

Hero

The hero of this particular poem is called Muttu Vijaya Rakunāta cētupati. He is the successor of kiḷavaṉ Cēnatipati. He reigned over the Rāmanātapuram camastan alias Maṟavar cīmai. These facts are known from the historical and literary evidences.

Mutu vijaya Rakunātā cētupati is noted for his generosity and philanthrophy. This tūtu work on him gives us the qualities of him and his people, customs, manners and habits. A work named 'Tēvai ula' depicts his, several services to the Rameswaram Temple. He has also created a lake called 'Rakunātā camutram' for the sake of water supply. He has converted Raja Ciṅka Maṅkalam, ōriyūr, Aṟantāṅki Tiruppattūr, Kamuti and pāmpan into sea ports.

Sewell mentions 1720 was the last reignal year of Vijaya Rakunāta cētupati and some manual says 1725 was the last year of his life. With in the 10 years rule, he had devoted his life to do things notable and so the birth of this tūtu is supposed to be between 1710 and 1715 as revealed from the historical events of the hero.

Structure

This particular work gives us the details about the heroine's maid who sends message on behalf of the heroine. This claims a new picture in literature. Another important and inevitable point is that the object 'Money' (paṇam) has gained the description of 'Tacāṅkam' (Ten parts of a king i.e. Mountain, River, Country, Capital, Elephant, House, Flag, Drum, Command and Garland.) where as in other poems it is sung only towards the hero.

This literature starts with Vināyakar Vaṇakkam in Nērisai Veṇpā, continued by 369 couplets in Kaliveṇpā. It includes three main sections.

They are 1) Description about money.
2) Tamiḻ and greatness of the hero.
3) Matter to be conveyed to the hero.

Major portion i.e. 231 stanzas of this talks about money. 130 stanzas about the heroic deeds of the hero and lesser 8 stanzas speaks about the news to be communicated.

Some Notable hints

Money is spoken prior to God-Siva, Visnu and Bramna. The importance and role of money in the human life are clearly pointed out. There are 36 terms by which money is called-such as Poṉ, Tātu, Attam, Āṭakam, ikai, Veṟukkai, Vēṅkai, Cātarūpam, Kalyāṇam, Ēmam, Mā, Nitāṉam, Ari, Māṭu, Mōkaram, Campaṅki, Caṇāṉ Kācu, Taṅkakkācu, Cantamiḻkkācu, Peruṅ Kācu, Karuverumai Nākku, Peruṉkiṟṟu, Caṉṉakkiṟṟu, Varākaṉ Maṭai, Veṭṭu, Nāṇayam, Kōḻiviḻuṅkal, Naṇṭukkāl, Ūṇaiyam, Uḷḷāṉ, Kiḻānellikkoṭṭai, cillaṟai Maṭṭam and Kambaṭṭam.

Literature in general reflects the life of man. This depicts especially to denote Muthu Vijaya Rakuṉāta Cētupati's heroic deeds and benevolence. The hero has been praised as,

1. Karuṭat tuvacattilē vicaiyum
   Vaitta Rekuṉātaṉ (294)
2. Muttāra Naṟuntāraṉ Muttu Rekuṉātaṉ (328)

3. Tēvai Nati Pōlu Muttu Rēkunātaṉ and (329)
4. Muṟaiyoḻuki Niṟkkumeṅkaḷ Muthu Rekuṉātaṉ (330)

It also says about the king's (hero's) genius, species, tribe, religion, bravery, bounty, reign, jurisdiction, configuration and kinship. He wanted to uphold his kith and kin showing great affection towards them and led them in a righteous way by appointing them in important administrative posts (positions).

The author also mentions many place names inside Tamil nadu in sevaral places (Line No, 82, 83, 91-94, 242, 260, 291 292 and 312) such as Maturai, Koṅku, Tiruvēṭakam, Viñcai, Pasumpon etc.

From the stanzas 83-90 it is known that small provices were ruled by some other persons.

The metaphor and simile, and quotations found in between make the study easy to understandable. The style is also very pleasent so as to make the reading interesting.

In toto it is satisfactory that the objects for which it was written, as explained to some extent atleast have been attained. The charm in the description about the money and the names and uses given all fills the readers with great interest. This work is to be reckoned as the quint essence of all tūtu literature and also can be regarded as a sumptuous feast to the mind.

நன்றியுரை

மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களால் 'சுவடியியல்' என்ற கல்வி தொடங்குவிக்கப்பட்டது.

அழிந்து போய்க் கொண்டிருக்கின்ற சுவடிகளைப் பாதுகாக்கவும், முறைப்படி படியெடுக்கவும், இதுவரை வெளிஉலகம் அறியாது உள்ள சுவடிகளைப் பதிப்பிப்பதன் மூலம் அறிமுகப் படுத்தவும் அரசால் இக்கல்வி ஆரம்பிக்கப் பெற்றது.

இக்கல்வியின் இறுதிக் கட்டமாக உள்ள தேர்வுடன் இணைத்து, இதுவரை 'பதிப்பிக்கப் பெறாத ஒரு சுவடியைப் பதிப்புக்குக் கொண்டு வரல்' — என்ற முறைப்படி, முத்து விசய ரகுநாத சேதுபதி என்பவர் மீது பாடப்பட்ட சொக்கநாத கவிராயரின் சுவடி நூலாக வெளி வருவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இத்தகு ஒரு நல்வாய்ப்பளித்த எமது உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலைச் செம்மைப் படுத்துவதில் பேருதவி புரிந்தவரும், டாக்டர் உ. வே சாமிநாதையர் நூலகத்தின் கௌரவப் பாதுகாவலரும், எமது ஆசிரியப் பெருந்தகையுமான திரு மு. கோ. இராமன் அவர்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

மூலத்தைப் பன்முறை என்னுடன் படித்துதவி, 'இது இன்ன பொருளுடையது' 'இதன் பொருள் இது அல்ல' எனப் பலவாறாக, விளக்கிக் கூறிப் பல திசைகளில் சிந்திக்கச் செய்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத் தமிழ் வித்துவான் திரு. பாலசாரநாதன் அவர்களுக்கும், சில நாணயங்களுக்குச் சிறந்த முறையில் விளக்கம் தந்த 'நா. மார்க்சீய காந்தி' – கல்வெட்டாய்வாளர் (தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை) அவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன்.

பதிப்பாசிரியர் முகவுரை

ஓலையைப் பொறுத்த அளவில் நான் ஓர் ஏழை! அதாவது ஓலையை வாசிக்கும் அறிவுத் திறனில் ஏழை! ஏட்டுச் சுவடிகளில் உள்ள எழுத்துகளைப் படிக்கும் முறையை முன்னரே அறிந்திருப்பினும் பாடல்களைச் சீர் தளை பிழையாது பிரித்துப் படிக்கும் முறையை அறிந்தது இல்லை.

'புலவர்களே பா அமைதிப்படி வரிவரியாக எழுதாது, நீளமாக ஒரே வரியில் சீர் எதுவும் பிரிக்காது எழுதியுள்ள போது, நாம் ஏன் அவற்றைப் பிரித்துக் கொண்டு, வரி அமைப்புக் கொடுத்து எழுத வேண்டும்? வலிந்து காரியம் செய்தல் போல் தோற்றுகிறதே!' எனத் தொடக்கத்தில் எண்ணியதுண்டு. ஆனால் சீர் பிரித்து எழுதுதலால் எத்தனை நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை அனுபவ முறையில் கண்டபோது வியப்படைந்தேன்.

என்ன பாவான் அமைந்தது எனக் கண்டறிந்து, அப்பாவினுக்கு ஏற்பச் சீர், தளை பிழையாது பிரித்து எழுதும் பொழுது, ஓலை சிதைவு பட்டுள்ள இடங்களிலும் என்ன எழுத்துகள் இருக்க இயலும் என்பதனைச் சரியாக அனுமானிக்க இயலுகின்றது.

சான்றாக, இப்பணவிடு தூதின் 254 ஆம் கண்ணியில் உள்ள ''விதுவழிந்து புத்தமுதம் வீழ்ந்து'' என்ற வரியில் 'வீழ்ந்து' என்பதில் உள்ள 'வீ' எனும் எழுத்து 'பீ' யா? 'மீ' யா? 'டீ' யா? அல்லது இவ்வெழுத்தே கிடையாதா? எழுதி அடிக்கப்பட்டுள்ளதா? எனப் பலவாறாக எண்ண இடம் தருவதாக அமைந்துள்ளது.

யாப்பு முறைப்படி சீர் பிரித்துத் தளை சிதையாமல் உள்ளதா? எனப் பார்க்காது உள்ளதை உள்ளவாறே படி எடுக்கின்ற ஒருவர், இவ்வெழுத்தைத்[1] தான் கருதியவாறு எப்படியும் எழுதிவிடலாம்.

---

1. வீ-மீ, பீ, டீ எனக் கருதல் போல, ா - ர, ற எனவும் கருதலாம்.

   க-ச, த என்றும்,

   ம-ட, ப என்றும் கொள்வர்.

(தமிழில் ஓர் எழுத்து மாறினும் பொருள் எப்படி மாறும் என்பது நாம் அறியாததா? 'தோழி' என்பதைக் 'கோழி' என எழுதினால் எப்படி இருக்கும்?) 'இவ்வெழுத்தே கிடையாது; எழுதி அடிக்கப் பட்டு விட்டது எனக் கருதி அதனை விட்டு விட்டு, 'ழ்ந்து' என்ப வைகளைப் புள்ளிகளற்ற காரணத்தால் (ஓலையில் புள்ளி இருக் காது) 'முந்து' என எழுதிவிடவும் வாய்ப்பு உள்ளது. ஆனால் யாப் பினைப் புரிந்து கொண்டு 'பா' வினை அறிந்து கொண்டு சீர், தளை சிதையாமல் படி எடுக்கின்ற ஒருவர்,

'விதுவொழிந்து புத்தமுதம்' வீழ்ந்து என, இது 'பொழிப்பு மோனை' அமைய வந்துள்ளது என்பதைப் புரிந்து கொண்டு 'வி' என முதற் சீரில் வந்துள்ளதால் மூன்றாம் சீரில் உள்ள இதுவும் அதன் இன எழுத்தாக இருக்க வேண்டும்; அப்பொழுதே சீர், தளை, ஓசை கெடாது அமைகின்றது என அறிந்து கொண்டு, புலவரின் உண்மையான உள்ளக் கருத்தை உணர்ந்து கொண்டு தன் கருத்துக்குத் தோன்றியபடி எழுதாமல் உண்மையாக உள்ளது எதுவோ அதனை அவ்வாறாகப் படி எடுக்க முடிகின்றது.

இது ஒரு சிறு சான்றே! இதுபோல் இன்னும் எத்தனை எத் தனையோ நற்பயன்கள் சீர், தளை, ஓசை கெடாது பார்த்து எழு துதலால் விளைகின்றது.

பணவிடு தூதின் ஓலை அமைப்பும், எழுத்தமைப்பும்

இவ்வேடு 15 அங்குல நீளமும் 1¼ அங்குல அகலமும் கொண்ட தாக உள்ளது. எட்டு ஓலைகளையும், பதினைந்து பக்கங்களையும் உடைய இதன் ஒவ்வொரு பக்கமும் 12 முதல் 15 வரை வரிகள் உள்ளன.

எழுத்துகள் மிக நுண்ணியவைகளாக உள்ளன. நான்கு புள்ளிகளை நெருக்கமாக இட்டால் எவ்வளவு இடத்தை அவை அடைக்குமோ, அதே அளவு இடத்திலேயே ஒவ்வொரு எழுத்தும் உள்ளது.

எழுதப்பட்டுள்ள முறை

1. ஒற்றுகளுக்குப் புள்ளி கிடையாது.

சான்று:- வாாதைத (75ஆம் கண்ணி) என எழுதப்பட்டிருக் கும். இதனை,

வாரத்தை
வாராததை
வார்த்தை என மூன்று சொற்களாகவும் பிரிக்கலாம்.

(வார்த்தை என்பதே உண்மையாக உள்ள சொல்.)

2. குறில், நெடில் வேறுபாடு அறிய ஒற்றை, இரட்டைக் கொம்புகள் பயன்படுத்தப் பட்டிருப்பதில்லை.

சான்று:— 192ஆம் கண்ணி
நொய (நோய்), பொற பெய (போற்பேய்)

3. வரியோ, சொல்லோ 'இடையில் விட்டுப் போய்விடின் '+' என்ற குறியிட்டு அதன் கீழே 'வரிப்பிளப்பில்' (இரு வரிகளுக்கிடையே உள்ள இடம்) அவை எழுதப்பட்டுள்ளன. ஓர் எழுத்து மட்டும் எனில் இக்குறி இன்றிக் கீழே எழுதப்பட்டுள்ளன.

4. எழுத்தினை அடித்துவிட்டு,வேறு எழுத்தினை எழுதுவதாக இருப்பின், எழுத்தாணியாலேயே அவை கீறப்பட்டுச் சிதைக்கப் பட்டுள்ளன. ஆனால் சில இடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவையா? தேவையில்லாதவையா? என மயக்கம் தரு மாறும் கீறல்கள் அமைந்துள்ளன.

இவ்வோலையில் செய்த ஒழுங்குகள்;

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒருவரால் எழுதப்படுகின்ற சுவடி, (இச் சுவடியே ஆசிரியர் சொல்ல மாணவர் எழுதியதாகவும் இருக்கலாம். பல காலகட்டங்களில், பல இடங்களில், பலரால் படி எடுக்கப்படும் பொழுது பல பிழைகள் கலந்து விடுகின்றன.

காலச் சூழல்,
இடச் சூழல்,
எண்ணச் சூழல் என்ற இது போன்ற சூழல்களின் காரணமாகவும்

படி எடுபபோரின் கவனக் குறைவு,
அறிவுத் தெளிவின்மை,

பொறுமையின்மை ஆகியவை காரணமாகவும், இவை போன்ற இன்னும் பல காரணங்களினால் புகுந்து விட்ட பிழைகளை அகற்றி மூல ஆசிரியரின் உண்மையான கருத்தை அறிதல் அவசியமாகிறது.

அ. பிழை நீக்கல்

திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரியிலிருந்த 'தாயவலந்தீர்த்த கவிராயர்' என்பவரது வீட்டினின்று கிடைத்த சுவடியைப் பயன்படுத்தது. மூலச் சுவடி அன்று. படியே! எழுத்துகள் மிகச் சிறியவையாயினும் தெளிவாக உள்ளன. மிகு பழமையானதாகவும் உள்ளது,

ழ — ள ஆக எழுதல்:— எவ்வாறு பேசினரோ அதன் படியே எழுதியுள்ளனர். வழங்குவித்து என்பது வளங்கிவித்து[2] (1) எனவும்

தொழிலவர்க்கு என்பது தொளிலவர்க்கு (2) எனவும் இவ்வாறு பல இடங்களில் எழுதப்பட்டுள்ளது.

ள— ழ ஆகவும் எழுதப்பட்டுள்ளது.

பண்டளித்து என்பது பண்டழித்து (2) எனவும், அளித்து என்பது அழித்து (6) எனவும் இவ்வாறு ள—ழ எழுத்துப் பிழைகள் பல இடங்களில் உள்ளன. இவை போன்று,

ர—ற ஆகவும், தளசற்த்தர் (43)
ற—ர ஆகவும்,
உவமையி(லே) (20)— லே எழுதப்படாது விடப்பட்டும் ஒற்று வேண்டிய இடத்தில் போடாமல்

சான்று: —'வேளம்பர் காடகமா' (26) வேண்டாத இடத்தில் போடப்பட்டும் உள்ளன.

சான்று: — கண்ணில்லாமற்ப் பார்த்து' (42) 'கை கை தேய்ந்து'(216) என இருமுறை உள்ளதனை நீக்கல் என இவ்வாறு உள்ள பிழைகளை நீக்கியுள்ளேன்.

ஆ. கலிவெண்பாவிற்கு ஏற்பச் சீர்தளை பிரித்து எழுதியுள்ளேன்.

இ. உட்தலைப்புக்கள் கொடுத்துள்ளேன்.

ஈ. [3]பொருள் விளங்கும் பொருட்டு சந்தி பிரித்து எழுதியுள்ளேன்.

இவை தவிரப் படியில் உள்ளதை உள்ளவாறு எழுதியுள்ளேன்.

[4]சிதைந்துள்ள இடங்களில் உள்ள சில சீர்களை நிரப்பாது விட்டுள்ளேன். எனது அறிவுக்குறைபாடே இதற்குக் காரணம்.

[5]சிதைந்துள்ள சில எழுத்துக்களை ஆசிரியர் துணையுடன் நிரப்பியும் உள்ளேன்.

ஓலையில் சில பகுதிகள் புரியவில்லை. ஆகவே அவை பற்றி விரிவான குறிப்புக் கொடுக்க இயலவில்லை.

அவை:— 119 முதல் 121 வரை உள்ள தர்க்கக் கருத்துக்கள் ஆகும்.

---

2. கண்ணி எண்களைக் குறிக்கும்.
3. 24, 37, 38, 43, 45, 51,, 64, 76,135,136 ஆகிய கண்ணிகள்.
4. 120, 121 ஆகிய கண்ணிகள்.
5. 77,86, 253, 263, 286 அடைப்புள்ள பகுதிகள் சிதைந்திருந்தன. நிரப்பியவர் எமது ஆசிரியப் பெருந்தகை திரு. மு. கோ. இராமன் அவர்கள்.

தூது-ஒரு பார்வை

இலக்கிய வரலாற்று ஏடுகளை எடுத்துப்பார்க்கும் பொழுது, காலத்துக்குக் காலம் தமிழன்னை அணிந்து வந்த இலக்கிய அணிகலன்களையும், அவற்றின் தனிப்பட்ட அழகு அமைதிகளையும் தெளிவாக அறிய முடிகிறது. இவ்வகையில் நோக்கும் பொழுது பிற்காலத்தில் தமிழன்னையின் பொன்னணிக்குப் பின்னணியாய்த் திகழ்ந்தவை பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கிய வகைகள் என்பதை உணர முடிகிறது.

முதல் இலக்கணத்தில் தூது

தமிழில் கிடைத்த முதல் இலக்கணம் எனப்படும் தொல்காப்பியத்தில் தூதுக்குரிய இலக்கணத்துடன், தூது பற்றிய பிற செய்திகளும் விரவிக் கிடக்கின்றன.

தொடர்நிலைச் செய்யுட்குரியனவாகச் சொல்லப்பட்ட [1]'வனப்பு' என்ற இனத்துள் தூது அடங்கும்.

புறப்பொருள் தொடர்பான தூது

அகத்திணை இயலில் உள்ள பாலை என்னும் பிரிதற் பொருண்மை பற்றிய,

[2] "ஓதல் பகையே தூதிவை பிரிவே" என்ற சூத்திரத்தினால் தூது மூவகைப் பிரிவினுள் ஒன்று என்பதும்,

[3] "அவற்றுள்
ஓதலுந் தூதும் உயர்ந்தோர் மேன"

---

1. "விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"
தொல்காப்பியம்— பொருளதிகாரம் சூத்திரம் 55.
2. தொல்காப்பியம் — அகத்திணையியல் சூத்திரம் 25
3. தொல்காப்பியம் — அகத்திணையியல் சூத்திரம் 26

எனவரும் அடுத்த சூத்திரத்தால் தூதிற்பிரிவு அரசர் அந்தணர்க்கு உரியது என்பதும் பெறப்படுகின்றது.

அகப்பொருளில் தூது

கற்புக் காலத்தில் தோழி முதலாகக் கண்டோர் ஈறாக உள்ள பதினான்கு வாயில்கள் தலைவர் - தலைவியரிடைத் தூது செல்லுதல் உண்டு என்பது[4] தொல்காப்பிய கற்பியல் சூத்திரம் 52 ஆல் புலனாகின்றது.

தூதனுப்பும் பொருளாக மேற்கூறிய உயர்திணைகளன்றி அஃறிணைப் பொருள்களும் அமைவது உண்டு என்பது,

"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்"
—தொல் பொருள் சூத்திரம் 2

என்பதால் தெரியவருகிறது.

அஃறிணைப் பொருள்கள் ஒருவர் கூறுவனவற்றை அறிந்து, அவற்றிற்கேற்றபடி நடக்கும் உணர்வு அற்றவையாயினும், அவற்றை முன்னிலைப்படுத்தி உரைப்பதை ஒரு மரபாகக் கவிஞர்கள் கையாண்டிருக்கின்றனர். தொல்காப்பியரும் வழுவமைதியாக இதனை ஏற்றுக்கொண்டு இலக்கணம் செப்பியுள்ளார்.

அத்துடன் காம மயக்கத்தால் அஃறிணையை முன்னிலைப் படுத்தும் இக் கூற்றுக்களைத் [5]தூது முனிவின்மை எனும் மெய்ப் பாட்டுள் அடக்கிக் கூறியுள்ளார். இவ்வாறு தூதுவிடும் போக்கு களவுக் காலத்தில் தலைவி மாட்டு மட்டுமே நிகழும் என்று வரையறையையும் சுட்டிக்காட்டுகின்றார்.

தூது அனுப்பப்படும் அஃறிணைப் பொருள்கள் தம்மிடம் திரும்பி வந்து செய்தி சொல்லா ஆயினும், தம் 'உள வெளிப்பா

---

4. "தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணர் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"

5. "முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்"
தொல் மெய்ப். 23.

டுரைத்தல்' என்ற வேறு காரணம் பற்றி இவ்வாறு தூதுவிடலால், தலைவியின் உண்மையான குறிப்பு வேறு எனக் கொண்டு, இதனைக் 'குறிப்புரை' எனும் சொல்லிலக்கணத்தின் பாற்படுத்தியும் உரைத்துள்ளார்.

"வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன என்னும் குறிப்புரை யாகும்"
—தொல்காப்பியம்— எச்சவியல் சூத். 25

தொல்காப்பியர் காலத்தில் கூறப்பட்ட இவ்விலக்கணம் பிற்காலத்திலும் எடுத்துக்கூறி விளக்கப்பட்டுள்ளது.

"கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே"
—நன்னூல் சூத்திரம்58.

ஆக, தொல்காப்பியர் காலத்தில் தூது இலக்கியம் எனத் தனியாக ஓர் இலக்கிய வகை இல்லையாயினும்,

1. புறப்பொருள் சார்பாக உயர்திணையும்,
2. அகப்பொருள் தொடர்பாக உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டும் தூது செல்லல் உண்டு என்பதும்,
3. புறத்தில் அரசியல் தூதும்,
4. அகத்தில் தலைவர் - தலைவியர் விடுக்கும் தூதும்,
5. இவற்றுள் தலைவி தலைவனிடம் அஃறிணைப்பொருளைத் தூதாக அனுப்பும் காமமிக்க கழிபடர் கிளவிகளே மிகுதி என்பதும் புலனாகின்றன.

சங்க இலக்கியத்தில் தூது

புறநானூறு, அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பரிபாடல் ஆகிய சங்க இலக்கியங்களில் தூதுப் பாடல்கள் உள்ளன.

புறநானூற்றில் தூது

1. [6]கோப்பெருஞ்சோழனிடம் பிசிராந்தையார் அன்னச் சேவலையும்,

---

6. புறநானூறு 67.

2. [7]அதியமான் தன் பகைவன் தொண்டைமானிடம் ஔவை எனும் புலவரையும்,

3. [8]அரசனொருவன் பகை மன்னனிடம் சந்து செய்விக்க அந்தணர் ஒருவரையும்,

தூதாக அனுப்பினர் எனத் தெரிகிறது. இவை

"அன்ன விடு தூது"
"புலவர் விடு தூது"
"அந்தணர் விடு தூது"

எனத் தலைப்புகள் பெறாவிடினும், தூதிலக்கியப் பொருண்மையை உள்ளடக்கி இருப்பதைக் காண முடிகிறது.

இங்கு புறப்பொருள் துறையில் அஃறிணைப் பொருளும் தூதாக அமைவதைப் பார்க்கின்றோம்.

அக இலக்கியங்களில் தூது

அகப்பொருள் நூல்களில் பெரும்பாலான பாடல்கள் தலைவி காமம் மீக்கூரப் பெற்று, அஃறிணைப் பொருள்களைத் தூது சென்று வருமாறு கூறும், காமமிக்க கழிபடர் கிளவிகளாகவே அமைந்து உள்ளன.

நண்டு விடு தூது

தலைவனுடன் கூடி இருந்து, தான் முன்பு பெற்ற இன்பத்தை நினைந்து ஆற்றாமை மீதூர்ந்த நிலையில் கடற்கரையில் கண்ட ஒரு நண்டைத் தலைவனிடம் தூதனுப்பும் தலைவியை அகநானூறு படம் பிடித்துக் காட்டுகிறது.

நாரை விடு தூதுகள்

[9] "சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
... ...
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
னிழைநெகிழ் பருவரல் செப்பா தோயே"

என மருதத் தலைவனுக்குத் தலைவி நாரையைத் தூதாக விடுப்பதனை நற்றிணை புலப்படுத்துகின்றது.

---

7. புறநானூறு 95.
8. புறநானூறு 305.
9. நற்றிணை 70 —வெள்ளி வீதியார் என்ற பெண்பாற் புலவரது பாடல்

“வளைநீர் மேய்ந்து கிளைமுதற் செலீஇ
... ...
... ... கொள்ளா தென்குறை
யிற்றாங் குணர வுரைமதி
கண்டல் வேலிநுந் துறைகிழ வோர்க்கே”

என நெய்தல் நிலத் தலைவனுக்கு ஒரு தலைவி நாரையைத் தூது விடுப்பதை நற்றிணை 54 ஆம் பாடல் தெரிவிக்கின்றது.

கிளி விடு தூது

செம்பியனாரது நற்றிணை 102வது பாடல் கிளியைத் தூது விடுவதாக அமைந்து சிறந்துள்ளது.

“கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
பல்கோட் பலவின் சாரலவர் நாட்டு
நின்கிளை மருங்கிற் சேரி யாயி
னம்மலை கிழவோர்க் குரைமதி யிம்மலைக்
கானக் குறவர் மடமக
ளேனல் காவ லாயின ளெனவே.”

தினைப்புனக் காவலில் மீண்டும் அமர்ந்ததால் தலைவர் எளிதில் காணலாம் என்ற குறிப்பை இங்குப் புலப்படுத்தி இருக்கிறாள் தலைவி.

வண்டு விடு தூதுகள்

[10]நற்றிணை பாடல் எண் 277.
[11]குறுந்தொகை பாடல் எண் 392.
குறுந்தொகை பாடல்எண் 106.

[12]பரிப்பாடல் பாடல் எண் 8 36 37வரிகள் ஆகிய இவற்றில் வண்டு விடு தூதுகள் அமைந்துள்ளன. அனைத்தும் காம மிக்க கழிபடர் கிளவிகளாகித் தலைவி கூற்றாகவே அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாயுள்ளது.

---

10. “கொடியை வாழி தும்பி யிந்நோய்
படுகதில் லம்ம யானினக் குரைத்தென
வெம்மலை யருஞ்சுரம் இறந்தோர்க்
கென்னிலை யுரையாய் சென்றவண் வரவே” —
தும்பிசேர் கீரனார்.

11. “அம்ம வாழியோ வணிச்சிறைத்தும்பி” எனத்தொடங்கும் இப் பாடலும் தும்பிசேர் கீரனாராலேயே பாடப் பெற்றுள்ளது.

12. “தூதேய வண்டின் றொழுதி முரல்வவர்
காதன்மூ தூர்மதில் கம்பலைத் தன்று”

பாணன் விடு தூது

அகப்பொருளில் உயர்திணையைத் தூது விடலுக்குத் தக்க சான்றாக ஐங்குறு நூறு 140 ஆவது பாடல் அமைந்துள்ளது.

"காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென
விறைகே ழெல்வளை நீங்கிய நிலையே"

இதில் பாணன் தூதாகிச் செல்லவேண்டுங் குறிப்பினளாகிய தலைமகள் அவற்குத் தன் மெலிவு காட்டிச் சொல்வதாகக் கூற்று நிலை இடம் பெற்றுள்ளது.

நெஞ்சு விடு தூது

தலைமகன் பிரிவு நீட்டித்துழி தலைமகள் தன் நெஞ்சினைத் தூதாக அனுப்பி அது இன்னும் திரும்பி வரக் காணவில்லையே என ஏங்கித் தோழியிடம் புலம்பும் காட்சியை [13] ஐங்குறுநூறு 317ஆம் பாடல் காட்டுகிறது.

ஆக சங்க அகத்துறைப் பாடல்களில்,

1. உயர்திணை, அஃறிணை ஆகிய இருபொருட்டூதும் உண்டு என்பதும்,
2. தலைவி கூற்றுக்களே தலைவன் கூற்றினைவிட மிகுதி என்பதும்,
3. அவற்றுள்ளும் காமமிக்க கழிபடர் கிளவிகளே அதிகம் என்பதும்,
4. அவை பெரும்பான்மை களவுக் காலத்தில் பாடப்பட்டவையாக உள்ளன என்பதும்,
5. தூதுப் பொருளாக நாரை, கிளி, வண்டு என்ற இப்பொருள்களே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் தெளிவாகின்றன.

திருக்குறளும், தூதும்

ஒரு மன்னர் பிறிதொரு மன்னரிடமோ, மற்றவரிடமோ

1. பிரித்தற்காகவும்,

---

13. "சூழ்கம் வம்மோ தோழிபாழ் பட்டும்
வெபதற வெந்த பாலை வெங்காட்
டருஞ்சுர மிறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்சம் நீடிய பொருளே."

2. பேணிக்சொல்வதற்காகவும்,

3. பிற காரணங்களுக்காகவும்

ஆகிய அரசியல் தொடர்பாக விடுக்கும் தூதுவர் இலக்கணத்தையே குறள் பேசுகின்றது.

நற்குடிப் பிறந்தவனாக,
அரசன் விரும்பும் அரும் பண்பு கொண்டவனாக,
மாற்றரசனிடம் ஆராய்ந்துரைக்கும் சொல் வன்மை
(குறள் 681, 682.)

கொண்டவனாகத் தூதுவன் இருக்கவேண்டும் என்கிறார்.

'தூது, ஒரு தனி அதிகாரமாக மலர்ச்சி பெற்றுள்ள வளர்ச்சிப் போக்கு கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

சிலப்பு, மேகலையில் தூது

ஆட்சி புரியும் அரசனுக்குத் துணை செய்ய அவையில் ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் இடம் பெற்றிருந்தன என்பது [14] சிலம்பு, [15] மேகலை வரிகளால் தெரியவருகிறது.

ஐம்பெருங்குழுவில் தூதுவர் இடம் பெற்றிருந்தனர் என்பது,

[16] "அமைச்சர் புரோகிதர் சேனா பதியர்
தவாத்தொழில் தூதுவர் சாரண ரென்றிவர்
பார்த்திபர்க் கைம்பெரும் குழுவெனப் படுமே"

என்ற பகுதியால் தெரிகின்றது.

பக்தி இலக்கியங்களில் தூது

சங்க கால இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்களை அடுத்து நமக்குக் கிடைக்கும் தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் ஆகிய பக்தி நூற்களில் தூது பற்றிய செய்திகள் எந்த அளவு இடம் பெற்றுள்ளன என்பதைக் காணலாம்.

தேவாரத்தில் தூது

நாயன்மார்கள் பரம்பொருளாகிய இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்துப் பாடிய பாடல்கள் சங்க

---

14. "ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்"
—சிலம்பு-இந்திரவிழவூரெடுத்த காதை வரி 157.

15. "ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்.
வந்தொருங்கு குழீஇ" — மணிமேகலை.

16. திவாகரம் - 163 ஆவது சூத்திரம்.

இலக்கியக் காமமிக்க வழிபட்ட விளைவுகள் போன்றே அமைந்துள்ளன.

"அன்னம், அன்றில், குருகு, [17] குயில், கிளி, நாரை,
வண்டு, வாரணம் பறவை, தென்றல், சேவல், கொண்டல்"

ஆகிய அஃறிணைப் பொருள்கள் தூது சென்று வருமாறு வேண்டப் பட்டுள்ளன.

காதலும், பக்தியும் பின்னிக் கிடக்கின்ற இப் பாடல்களில் தூதுத்திண்மை மிளிரக் காணலாம்.

திருவாசகத்தில் தூது

தெய்வத் தீந்தமிழ்த் திருவாசகத்தில் உள்ள,
[18] திருக்கோத்தும்பி [19] குயிற்பத்து

எனும் பகுதிகள் வண்டு, குயிலைத் தூது விட்டமைக்குத் தக்க சான்றாக உள்ளன.

திவ்ய பிரபந்தத்தில் தூது

பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் தூதுப் பொருண்மை பொதிந்த பாடல்களைப் பாடியுள்ளனர்.

ஆண்டாள் பாசுரத்தில் மேக, குயில் விடுதூதுகள்

"வான் கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்"
"அங்குயிலே!"

என விரித்துத் தன் பக்திப் பேரன்பை அப்பரமாத்மாவிடம் தெரிவித்து வரக்கூறி விடுகிறாள்.

பெரியாழ்வார் விடுத்த தூதுகள்

ஆண்டாளை வளர்த்த தந்தையான இவ்வாழ்வார் தன் இன்னுயிர்க்குழவியாகக் கண்ணனையும் பாவித்து, அம்மணி வண்ணனைத் தன்னிடம் அழைத்து வருமாறு கூறி,

---

17. "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே"
—நாவுக்கரசர் தேவாரம் 4 ஆம் திருமுறை.

18. "சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

19. "கீதமினிய குயிலே!
ஆசுகுடையா னையானைப் புயில்காளை அம்புயிலானை வரக்கூவாய்"

[20] செம்போத்து, காக்கை, குயில், பல்லி, பைங்கிளி, கோழி ஆகிய இவற்றைத் தூது விடுவதைக் காண்கிறோம்.

இவர்கள் தவிர திருமங்கையாழ்வாரின் [21] நாரை, [22] வண்டு விடு தூதுகளையும்,

நம்மாழ்வாரின் [23] பூவை விடு தூதினையும் திவ்ய பிரபந்தத்தில் காண முடிகின்றது.

இவை தவிர இதே முறையில் பாடப்பட்ட பல பாடல்களையும் காண்கிறோம். அனைத்தும் காமமிக்க கழிபடர் கிளவிகளாக இருப்பினும் காதல், பக்தி இயைபால் பொருண்மையில் வேறுபட்டு நிற்பதைப் பார்க்கிறோம்.

காவியங்களில் தூது

சங்க இலக்கிய அகப் புறத் துறைச் சிறுகதைகள், தொடர் நிலைச் செய்யுளாகிப் பொருள் பொதிந்த பெருங்கதைகளாக வளர்ந்தபோது காவியங்கள் மலர்ந்தன.

சிறு சிறு துளியாகப் பரவிக் கிடந்த தூதும், 'சிறு துளிகள் இணைந்து பெருவெள்ளம் ஆவது போல்' காப்பிய உறுப்பில் ஒன்றாகச் சிறப்பிடம் பெற்றது.

பெருங்காப்பிய உறுப்புக்களில் தூதும் ஒன்று என்கிறது தண்டியலங்காரம். இத்தூது எனும் உறுப்பு இல்லாத காவியம் பெரும்பாலும் தமிழில் இல்லை.

காவியத்தூதும்,

1. தலைவி தலைவனிடம்,
2. தலைவன் தலைவியிடம்,
3. அரசன் தன் பகைவனிடம்

என இவ்வாறு மரபு வழிப்பட்டே அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

சீவக சிந்தாமணியில் தூது

திருத்தக்கத் தேவரின் சிந்தாமணியில் குணமாலை யாரிலம்பகம் [24] 1001ஆம் பாடலில் குணமாலை 'அசனிவேகம்'

---

20. பெரிய திருமொழி 10ஆம் பத்து.
21. "செங்கால் மடநாராய்! இன்றே சென்று"
22. "அணிமலர்மேல் மதிநுகரும் அறுகால் சிறுவண்டே"
23. "நீ அலையே! சிறுபூவாய்!"
24. "களிகொள் காமத்திற் கையற வெய்தித்தன்
கிளியைத் தூதுவிட் டாள்கிளந் தென்பவே"

என்ற மதயானையினின்றும் தன்னைக் காத்த சீவகன்பால் தான் வளர்த்த கிள்ளையைத் தூதாக அனுப்பும் செய்தியையும், அது சென்று தூது சொல்லியதையும் காண்கின்றோம்.

இங்குத் தலைவியின் காமமிக்க கழிபடர் கிளவியேயாயினும், வீட்டுப் பிள்ளைபோல் வளர்த்த கிள்ளை ஆதலின் அஃறிணையின் 'செயல்பாடு' உள்ள மாறுதலைப் பார்க்கிறோம்.

தோலாமொழித் தேவரின் சூளாமணியில் தூது

இக்காவியத்தில் திருமணப் பொருட்டாகத் தலைவன் வீட்டாரிடம் தலைவி வீட்டார் தூது விடுத்த செய்தி செப்பப் பட்டுள்ளது. 'ஒருவர் மற்றொருவரிடம் தூது' என்ற நிலைமாறி 'ஒரு வீட்டார் மற்றொரு வீட்டாரிடம் தூது' என்ற பெருகிய நிலை வேறுபாட்டைக் காண்கிறோம்.

அதற்குத் 'தூதுவிடு சருக்கம்' எனத் தூதின் பெயராலேயே சருக்கப் பெயர் அமைந்திருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

அரசியற் சருக்கத்தில் திவிட்டன் என்பவனது பகையரசனான விஞ்சைய மன்னன் அச்சுவக் கிரீவனிடம் விட்ட 'அரசியல் தூதும்' குறிக்கப்பட்டுள்ளது.

பெரிய புராணத்தில் தூது

சுந்தரருக்காக இறைவன் பரவை நாச்சியாரிடைத் தூது செல்லும் காட்சி காவியத்தில் இடம் பெற்றுள்ளது.

"பரவையார் மாளிகை நோக்கித்
தொண்டனார்தம் துயர் நீக்கத்
தூதராய் எழுந்தருள"

என்கிறார் சேக்கிழார். இங்கு தூதுப் பொருளாக இறைவனே அமைவதையும் அத்துடன் உளவெளிப்பாட்டுக்காகத் தூதுரைத்தல் என்ற போக்கு மாறித் தூதுப் பொருளால் உண்மையான பயன் விளைவதையும் பார்க்க முடிகின்றது.

வில்லிபாரதத்தில் தூது

உலூகன், சஞ்சயன், கண்ணன் ஆகிய மூவர் தூதுகள் இதில் வருகின்றன.

"உலூகன் தூதுச் சருக்கம்"
"சஞ்சயன் தூதுச் சருக்கம்"
"கண்ணன் தூதுச் சருக்கம்"

எனத் தூதுப் பொருள்களாலேயே சருக்கத் தலைப்புக்களும் அமைந்திருக்கும் வளர்ச்சி கவனிக்கத் தக்கதாய் உள்ளது.

இராமாயணத்தில் தூது

கம்பரது இக்கவினுறு காவியத்தில் அங்கதன், அனுமன் ஆகியோர் தூது செல்லும் நிகழ்ச்சிகளைக் காண்கிறோம்.

தூதுவருக்குள்ள முக்கிய குணம் அஞ்சாமை என்பதும், [25] தூதுவருக்கு எக்காரணத்தைக்கொண்டும் தீங்குசெய்தல்கூடாது என்பதும் அங்கதன், அனுமன் தூதுகளின் மூலம் தெரிய வருகின்றது.

தூது, தூதுப் பொருள், அதனிடம் வேண்டப்படும் குணம், நடத்தவேண்டிய முறை எனப் பல கோணங்களில் தூது பற்றிய 'கருத்து மரம்' கிளைவிட்டு வளர்வதைக் காண்கிறோம்.

கந்தபுராணத்தில் வீரபாகுத் தேவரைக் கந்தபிரான் தூது விடுத்த செய்தியும் பெருங்கதையில் உதயணன்,

மான்பிணை, மயிற்பேடை, பொறிவண்டு இவற்றைக் கண்டு வாசவதத்தையை நினைந்து காமத்தால் கழறும் செய்தியையும் காண்கிறோம்.

தேம்பாவணியில் தூது

வீரமாமுனிவர் 'தூதுரைப் படலத்தில்' சூசையப்பர் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகு சென்றதை விண்ணவருக்குத் தூதாகச் சென்றார் எனக் கூறுகிறார்.

"மெய்யிலார் நாட்டில் தூது விளம்ப மெய்யுயிர் விட்டேகி" என்கிறார். ஆக இங்கு உயர்திணையைத் தூதாக விடுப்பினும் திரும்ப வந்து செய்தி சொல்ல இயலாத இடத்திற்கு அனுப்பப் படுவதைக் காண்கிறோம். அத்துடன் உயிர் துறத்தலைத் 'தூதேகினார்' என நயம்பட உரைக்கும் புதுப் போக்கும் போற்றத் தக்கதாய் உள்ளது.

---

25. "......தூதரை எறிதல் என்பது
புல்லிது; பழியொடும் புணரும்"
"தூதரைக் கோறலும் துய்தன் றாமென"
—கம்பராமாயணம்.

நளவெண்பாவில் தூது

இதில் தூதுப் பொருளாக அமைந்த அன்னம் தலைவன்—தலைவியர் திருமணம் செய்து கொள்ள உற்ற கருவியாகத் திகழ்வதுடன்,

[26] தலைவனிடமிருந்து தலைவிக்கும்,

நளவெண்பா - 38.

தலைவியிடமிருந்து தலைவனுக்கும்

நளவெண்பா - 51.

என இருவரிடையேயும் தூதாகச் சென்றுதவும் காட்சியையும் காண்கிறோம்.

மனோன்மணீயத்தில் தூது

தூதால் தீமையும் நிகழும் என்பதற்குத் தக்க சான்றாக, இந்நாடகத்தில் உள்ள பலதேவன் தூது அமைந்துள்ளது.

பொதுவாக, இதுவரை கண்ட பேரிலக்கியங்கள் எனப் பேசப் பெறும் காவியங்கள், புராணங்கள், கதைகள், நாடகங்கள் இவற்றுள்,

1. தூதுப் பொருளாக உயர்திணையே மிகுதியாக உள்ளதையும்,
2. அவை செயல்படுவதையும்,
3. இதனால் காவிய வளர்ச்சியில் அவை பெரும் பங்கு பெறுவதையும்,
4. தூதுப் பொருளால் நன்மை, தீமை ஆகிய இரண்டும் ஏற்படுவதையும் காண்கிறோம்.

பிற இலக்கியங்களில் தூது

சேர, சோழ, பாண்டியர் மீது பாடப்பட்டுள்ள முத்தொள்ளாயிரத்திலு தூதுப் பொருண்மை கொண்ட பாடல்கள் பல உள்ளன.

---

26. அன்னமே! நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
உன்னவே சோரு முனக்கவளோ - டென்னை
அடைவென்றா மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்றாள் தன்பால் நயந்து''. [-நளவெண்பா - 38.]

இவற்றுள் [27]தூதுப் பொருளாகத் தோழி, நாரை, நெஞ்சம் ஆகிய உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டும் அமைவதைப் பார்க்கிறோம்.

தாயுமானவர் பாடல்களிலும் தூதுப் பொருண்மை பொதிந்துள்ள பாடல்கள் உள. இவற்றுள் தேவார, திவ்ய பிரபந்தங்கள் போல, பக்தியும் காதலும் பின்னிக் கிடப்பதைப் பார்க்கிறோம்.

இவரது 'பைங்கிளிக்கண்ணி' கிளியைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.

"அகமேவும் அண்ணலுக்கென் அல்லலெல்லாஞ் சொல்லச்
சுகமான நீபோய்ச் சுகங்கொடுவா பைங்கிளியே"

என நாயக, நாயகி பாவத்தில் பாடப்பட்டுள்ளது.

தனிப்பாடலில் தூது

தஞ்சை மாவட்டம் பட்டீசுரத்துப் பகுதியிலுள்ள 'சத்தி முற்றம்' எனும் ஊரிற்றோன்றிய புலவர் ஒருவர், தன் அன்பு மனையாளிடம் தான் இன்னமும் வறுமைப் புலியுடனும், வாடைக் குளிருடனும் போராடிக் கொண்டிருப்பதைத் தெரிவிக்குமாறு நாரையிடம் சொல்லி அனுப்புகிறார்.

தலைவன் தலைவியிடம் விடுக்கும் தூதாயினும், புறப்பொருட் சுவைபட அமைந்துள்ள புதுமையைப் பார்க்கிறோம். தனி ஒரு பாடலும் சிறந்த சிற்றிலக்கியமாக இயலும் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்[28] இப்பாடல்.

பாரதியாரின் பாடல்களிலும் கிளித்தூது போன்றவை அமைந்து சிறந்திருப்பதைக் காணலாம்.

தன்னைத் தலைவியாகப் பாவித்து முருகனிடம் கிளியைத் தூதாக அனுப்புகிறார் கவிஞர்.

"சொல்ல வல்லாயோ? — கிளியே
சொல்லநீ வல்லாயோ?
வல்வேல் முருகன் தனை — இங்கு
வந்துகலந்து மகிழ்ந்து குலாவென்று
சொல்ல வல்லாயோ?—கிளியே
சொல்லநீ வல்லாயோ?"

---

27. முத்தொள்ளாயிரம் — 32, 96, 101, 124.
28. தனிபபாடல் திரட்டு — முதற் தொகுதி பக்கம் 207

நாட்டுப் பாடல்களில் தூது

இலக்கியத்தில மட்டும் இடம்பெற்று, மக்கள் மத்தியில், அன்னார் மனத்தில் இடம பிடிக்காத, எந்த ஒரு பொருளும் உயிர் வாழ்ந்ததில்லை என்பதை வரலாறு தெளிவுறுத்துகின்றது.

தூதுக்கு மக்களின் மனத்தில், அவர்களின் வாய் மொழிப் பாடல்களில என்ன இடம் இருந்தது என்பதையும் காணும் பொழுதே தூதின்வளர்ச்சிப் போக்கில் நாம் ஒரு முழுமையைக் காண முடியும. கிராமியக் காதலருக்குத் தூதுப் பொருளாக,

காகம், சேவல், குருவி,
குளுகுளுப்பை முதலியன அமையக் காண்கிறோம்.

[29]"ஒரு ஏர நெடுப்பமில்லை ஓசந்தமூக்கு வெள்ளைநிறம்
கடையிலிருப்பார் அவரைக் கண்டால் வரச்சொல் காகம்"

என்று தன் காதலன் எவ்வாறிருப்பான் என அங்க அடையாளமும், அவன் எங்கிருப்பான் என இட அமைதியும், தெளிவாகச் சொல்லி அனுப்பும் தன்மையையும,

[30]"ஆளோடு நின்டால் அதைஅந்நேரம் சொல்லாமல்
தனியே கண்டு எந்தன் தவிப்புநிலை சொல் காகம்"

எனத் 'தக்க தருணம் உணர்ந்து சொல்' எனச் சூழல் விளக்கி உரைக்கும் அவள் கூர்மதியையும்,

[31]"உள்ளதைக் காகம் ஒளியாம சொன்னி யெண்டால்
காசி கொடுத்து நான் கருவாடு வாங்கித் தாரேன்"

என்று, தூது சொல்லி வந்தால் என்ன கிடைக்கும் எனக் கூறும் அவளின் தயாள குணத்தையும் உணர முடிகின்றது.

நாட்டுப் பாடல்களாயினும், தூது இலக்கிய அமைப்புக்குச் சிறிதும் மாறுபடாது இயல்பாக அமைந்துள்ள போக்கு பாராட்டத் தக்க ஒன்றாகும்.

இலக்கியம் காணாத, எழுத்து நவத்தை எண்ணிக் கூடப் பார்க்கா முடியாத, தோடா மொழியின் கண் காணப்படும் கவிதை யொன்று கிளிகளைத் தூதுவிடும் நிலையில் நெஞ்சைத் தொட்டு நிற்கின்றது.

29, 30, 31. ஈழத்து நாட்டார் பாடல்கள் — இ. பாலசுந்தரம்

[32]"சின்னஞ்சிறு கிளியே!
செம்பவள வாய்க்கிளியே!
தேடி அவரைக் கண்டோன்
சோகந்தான் சொல்லாயோ?"

தூது தனி ஒரு இலக்கியமாதல்

பிறந்த குழந்தை அமர்ந்து, தவழ்ந்து, நின்று, நடந்து, ஓடி என எவ்வாறு இத்தகைய பல வளர்ச்சிப் பருவங்களைக் கடக்கின்றதோ, இதுபோலவே தூதும் ஒரு சிறு கருத்தாகப் பிறந்து, பல்கிப் பெருகிப் பல கோணங்களில் வளர்ந்து, இறுதியில் தனி ஒரு இலக்கியமாக மலர்ந்துள்ளதைக் காண்கிறோம்.

முதல் தூது நூல்

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுந்த உமாபதி சிவாசாரியாரின் நெஞ்சு விடு தூதினையே அறிஞர்கள் முதல் தூது நூலாகக் குறிப்பிடுகின்றனர். இது சிவாசாரியாரது குருவான மறைஞான சம்பந்தரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளது.

தூதிலக்கணம் செப்பும் நூற்கள்

பாட்டியல் நூற்கள் பலவும் தூதிலக்கணம் பற்றிப் பேசுகின்றன.

இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்தத் திரட்டு, சிதம்பரப் பாட்டியல் போன்றன தூது இலக்கணம் பற்றிப் பேசுகின்றன.

இலக்கண விளக்கப் பாட்டியல் கூறும் தூதிலக்கணம்

"பயிறரும் கலிவெண் பாவி னாலே
யுயர்திணைப் பொருளையு மஃறிணைப் பொருளையுஞ்
சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியல் புலவர் நாட்டினர் தெரிந்தே"[33] என்கிறது.

உயர்திணைத் தூதுப் பொருளாகப் பாணன் முதலாகப் பாங்கன் ஈறாக உள்ளவர்கள் எனவும், அஃறிணைத் தூதுப் பொருளாகக் "கேளா மரபினவற்றைக் கேட்பனவாகக் கொண்டு விடுக்கும்

---

32. தமிழகப் பழங்குடி மக்கள் — பதிப்பாசிரியர். திரு. அகத்தியலிங்கம்.

அன்னம், கிளி வண்டு, மயில், குயில்
முதலானவை'' எனவும் உரையாசிரியர் விளக்கம் தருகிறார்.

பிரபந்தத் திரட்டு கூறும் இலக்கணம்

''எகினமயில் கிள்ளை யெழிலியொடு பூவை
சகிகுயினெஞ் சந்தென்றல் வண்டு — தொகைபத்தை
வேறுவே றாயபிரித்து வித்தரித்து மாலைகொண்டன்பு
ஊறிவா வென்றல் தூது''

என்கிறது.

அதாவது, 'மயில் முதலாக வண்டு ஈறாக உள்ள பத்துப் பொருட்களில் யாதாயினும் ஒன்றை விடுத்து மாலை வாங்கி வருமாறு கூறல்' என்பதாம்.

சிதம்பரப் பாட்டியல் ''இருதிணையை விடல் தூது'' — எனச் சுருக்கமாகத் தூதிலக்கணம் செப்பி விடுகின்றது.

இரத்தினச் சுருக்கம் கூறும் தூதிலக்கணம்

''இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி — நயந்தகுயில்
பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை''

எனக் கூறுகிறது.

பத்து என்ற வரையறைப் பொருத்தம்

'தூதுப் பொருள் பத்து' என்ற வரையறை பிரபந்தத்திரட்டு, இரத்தினச்சுருக்கம் இவற்றில் உரைக்கப்பட்டுள்ளமை கண்டோம்.

இப்பத்து என்ற வரையறையைத் தாண்டி, பணம், தமிழ், மான், வசனம், சவ்வாது, நெல், புகையிலை, விறலி, துகில், காக்கை, மதங்கி, பொன், கழுதை, பழைபது, அன்பு, செருப்பு முதலிய பொருள்களையும்,

குவளை, சண்பகம், பாரிசாதம், பிச்சி, இருவாட்சி முதலிய மலர்களையும் தூதுப்பொருளாகக் கொண்ட நூற்கள் உள்ளன.

இவற்றுள் ஒரே பொருளைத் தூதுப்பொருளாகக் கொண்ட பல நூற்களும் உள்ளன.

இத்துடன் பத்து என்ற வரையரைக்குள் கூறப்பட்ட அன்னம், மயில், பாங்கி, குயில், பூவை ஆகிய தூதுப் பொருள் அமைந்த நூற்கள் இல்லாததையும் காண்கிறோம்.

ஆக இவை அனைத்தையும் நோக்கும் பொழுது,

தூதுப் பொருட்கள் பத்து என்ற வரையறை எந்த அளவுக்குப் பொருத்தமுடைத்து என்பது ஆய்வுக்குரியதே!

தூது நூற்களின் பகுப்பு முறை

அ. தூது நூற்களைப் பொருளமைப்பு நோக்கில்,

1. [33] அகப்பொருள் தூது நூற்கள்

2. [34] புறப் பொருள் தூது நூற்கள் என இரண்டாகப் பகுக்கலாம்.

நமக்கு இதுவரை கிடைத்துள்ள தூது நூற்களுள் அகப் பொருள் தூது நூற்களே பழமையானவைகளாகவும், எண்ணிக் கையில் மிகுதியானவைகளாகவும் உள்ளதைக் காண்கிறோம்.

ஆ. தூது விடுத்துள்ள பொருட்களை அடிப்படையாக வைத்துப் பகுக்கும் பொழுது,

1. [35] உயர்திணைப் பொருளை விடுத்தல்.

2. [36] அஃறிணைப் பொருளை விடுத்தல் என இரு வகை யாகப் பிரிக்கலாம்.

இவற்றுள் உயர்திணையைவிட அஃறிணையைத் தூதுப் பொரு ளாக அமைத்த தூது நூற்களே பழமையானவைகளாகவும், எண்ணிக்கையில் மிகுதியானவைகளாகவும் உள்ளன.

இ. தூது விடுவோரை நோக்கித் தூது நூற்களைத்

1. [37] தலைவி விடுத்தது.

2. தலைவன் விடுத்தது

என இரண்டாகப் பகுக்கலாம்.

இவற்றுள் தலைவி விடுத்த தூதுகளே பழமை யானவை, மிகுதியானவை.

---

33. அழகர் கிள்ளை விடு தூது, ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது மதுரை சொக்க நாதர் தமிழ் விடு தூது

34. புலவர் விடு தூது, காக்கை விடு தூது

35. விறலி விடு தூது, புலவர் விடு தூது

36. வண்டு, மேகம், தமிழ் விடு தூதுக்கள்.

37. இறைவனைத் தலைவனாக வைத்து மக்களுள் சிறந் தாரைத் தலைவராக வைத்து என இரண்டாக அமையும்.

தூது நூற்களின் தனிப்பட்ட அமைப்பு முறை

கோவை, உலா, பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களில் உள்ள அமைப்பு முறைக்கும், தூதிலக்கிய அமைப்பு முறைக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது.

உலா எனின் தலைவன் உலா வர, எழுவகைப் பருவ மங்கையர் அவனைக் கண்டு காதல் கொள்ளல் என்பதும்,

பிள்ளைத் தமிழ் எனின், 'காப்பு முதலாய் உள்ள பத்து வகைப் பருவங்களையும் பற்றிக் கூறல்' என்பதும், ஆகிய இத்தகைய ஒரே அமைப்பு முறையே அனைத்து உலா, பிள்ளைத் தமிழ் நூற்களிலும் காணப்படும். கூறப்படும் செய்திகள் மாறுமே தவிர, நூலமைப்பு மாறுவதில்லை.

ஆனால், தூது நூற்களில் தூது விடும் பொருளுக்கேற்பச் செய்திகளோடு பொருளமைப்பும், நூலமைப்பும் மாற்றம் பெற்று ஒவ்வொரு தூது நூலும் ஒவ்வொரு புதுமையுடன் பொலிவதைப் பார்க்கலாம்.

ஆயினும் வேற்றுமையுள் ஒற்றுமை போல,

1. தூது செல்லப் பிற பொருட்கள் தகுந்தவை அல்ல.
2. தூது செல்ல இது ஒன்றே தகுதியானது.
3. தலைவனிடம் கூற வேண்டிய தூதுப் பொருளுரைத்தல் என்ற முப்பகுதியைப் பொதுவாக தூது நூற்களில் நாம் காணலாம்

இத்துடன் அகப்பொருள் சார்ந்த நூற்களின் இறுதியில், தன் காதலைத் தலைவன் ஏற்றுக்கொண்டான் என்பதை அறிந்து கொள்ள, 'அவனது மாலையை வாங்கிவா' எனப் பாடுதலும் பொதுவான ஒரு மரபாகக் கையாளப்பட்டுள்ளது.

தூது நூற்களின் பெயரமைதிச் சிறப்பு

பொதுவாகத் தூது நூற்கள் அனைத்தும்,
தூது விடுப்பார் பெயராலோ,

யாருக்குத் தூது விடுக்கப்படுகின்றதோ அவரது பெயராலோ வழங்காது தூது விடுக்கும் பொருளின் பெயராலேயே பெயர் பெற்றுள்ளதைக் காணலாம்.

யாப்பமைதி

"பயிறரும் கலிவெண்பாவினாலே என்ற" இலக்கண விளக்கச் சூத்திரத்தின்படி அனைத்துத் தூதிலக்கியங்களும் கலிவெண்பா வினாலேயே இயற்றப்பட்டுள்ளன.

மொழி பெயர்க்கப்பட்ட[38] மேகதூதம் போன்ற சில நூற்கள் மட்டும் ஆசிரியப்பாவால் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

பிறமொழிகளில் தூது நூற்கள்

இந்திய மொழிகள் பலவற்றிலும் தூது நூற்கள் அமைந் துள்ள சிறப்பைக் காணலாம்.

வடமொழியில் தூது நூற்களை 'ஸந்தேச காவியங்கள், என்றும் 'தூத காவியங்கள்' என்றும் அழைக்கின்றனர்.

பல சுலோகங்களாக அமையும் இக்காவியங்களுள் காலத்தால் முதன்மை பெற்றது கி. மு. 56 இல் இயற்றப்பட்ட 'காளிதாசரின்' 'மேக ஸந்தேஸமா'கும்.

இந்நூலைப் பின்பற்றிப்[39] பல ஸந்தேசங்கள் வட மொழியில் எழுந்துள்ளன.

மலையாளம், தெலுங்கு, சிங்களம், வங்காளம், பாலி ஆகிய மொழிகளிலும் தூது நூற்கள் உள்ளன.

பிற சிற்றிலக்கியங்களில் தூது

[40]கலம்பக உறுப்புகள் பதினெட்டனுள் ஒன்றாகத் தூது அமைந்து, சிற்றிலக்கிய வகையுள் அடங்கிய ஒரு சிற்றிலக்கியக் கூறாகத் திகழ்கிறது.

அந்தாதியுள்ளும் தூதுக் கூறுகள் ஆங்காங்கு சிதறிக் கிடப் பதைப் பார்க்கிறோம்.

மற்றும் கோவை, இரட்டை, மும்மணி, நான்மணி மாலை களிலும் தூதுக் கூறுகள் மலர்ந்து சிரிக்கும் அழகைக் காணலாம்.

---

38. தை. ஆ கனக சபாபதிப் பிள்ளை.

39 1. ஹம்ச சந்தேசம் — வேதாந்த தேசிகர்.
   2. கோகில சந்தேசம்—வரதாசார்யர்.
   3. சந்திர தூதம் —கிருஷ்ண சந்திரன்.
   4. மனோ தூதம் —வஜ்ஜநாதன்.

40. "ஓடுகின்ற மேகங்காள்! ஓடாத தேரில்வெறும்
கூடு வருகுதென்று கூறுங்கள் — நாடியே
நந்திச்சீ ராமனுடைய நல்நகரில் நல்நுதலைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்"
—நந்திக் கலம்பகம்—தூது உறுப்பில் உள்ள பாடல்

நூலாசிரியர் வரலாறு

இந்நூலின் ஆசிரியரான சொக்கநாத கவிராயரைப் பற்றிய முழு விவரமும் ஓரளவு கிடைக்கின்றது.

பெயர்

[1]"'சொக்கநாத கவிராயர்' என்பதே இவரது இயற்பெயர் என்பது தெரிகிறது.

'சேறைக் கவிராச பிள்ளை'

'வீரைக் கவிராச பண்டிதர்'

'செங்கோட்டைக் கவிராச பண்டாரம்'

எனும் பெயர்களை நோக்குங்கால், பண்டைக் காலத்தில் சிலருக்குக் 'கவிராசர்' என்றே இயற்பெயர் இருந்ததாகத் தெரிகிறது"

[2] 'சொக்கநாத பிள்ளை'

[3] 'பல பட்டடைச் சொக்கநாத கவிராயர்'

[4] 'சொக்கநாதப் புலவர்'

என்றும் இவர் குறிக்கப்பட்டுள்ளார். 'இவரது மரபினர்' 'பல பட்டடைக் கணக்கு' எனும் ஒருவகை உத்தியோகம் பார்த்து வந்ததால் 'பலபட்டடைச் சொக்கநாத கவிராயர்' எனப்பெயர் பெற்றார்' எனவும் [5]டாக்டர் உ. வே சாமிநாதையர் குறிப்பிடுகின்றார்.

தமிழ் நாட்டில் [6]பல சொக்கநாதப் புலவர்கள் இருந்தனராகையால் அவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட இவரைப் 'பல

---

1 வாட்போக்கி உலா—நூலாசிரியர் வரலாறு.

2 அழகர்கிள்ளை விடுதூது —டாக்டர் உ. வே.சா.பதிப்பு.

3 தேவை உலா—டாக்டர் உ. வே. சா. பதிப்பு.

4 கலைக் களஞ்சியம்—தொகுதி 5.

5 தென்றல் விடு தூது—நூலாசிரியர் வரலாறு.

6 'சொக்கநாதப்புலவர்' என ஒருவர் இருந்திருக்கிறார். கவிராயருக்கு முந்தையவர். இடைக்காலத்தைச் சேர்ந்தவர் —கலைக் களஞ்சியம்.

பட்டடை' எனும் அடைமொழி கொடுத்து வழங்கினர் எனக் 'கலைக் களஞ்சியம்' தெரிவிக்கின்றது.

பிறப்பிடம்

இப்புலவர் [7]மதுரையில் வாழ்ந்திருந்தவர் என உ. வே. சாமிநாதையர் அவர்கள் குறிப்பிட்டாலும், பிறப்பிடம் எது எனத் தெளிவாகக் கூற இயலவில்லை.

குலமும் தொழிலும்

இவர் என்ன குலத்தைச்சார்ந்தவர்என்றுகூறச் சான்றில்லை. பெயர் இறுதியில் உள்ள 'பிள்ளை' என்பது கொண்டு 'வேளாளர்' குலத்தைச் சேர்ந்தவர் எனக் கருத இடமுள்ளது.

இவரது மரபினர் வழிவழியாக மதுரை மன்னர்களிடம் பல பட்டடைக் கணக்கு (பலபட்டடை என்பது பல பண்டமுள்ள அறையாகும்) எனும் வேலையைப்பார்த்துவந்ததாகத் தெரிகிறது.

இவரது தந்தையார் 'சொக்கலிங்கம் பிள்ளை' என உ வே சாமிநாதையர் குறிப்பிடுகின்றார்.

காலம்

17-18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர்.

[8]திருமலை நாயக்கர் அரசுபுரிந்திருந்தகாலத்தில் அவருடைய அவைக்களப்புலவராக விளங்கிறார் எனச் சில அறிஞர் கூறுகின்றனர்.

சுப்ரதீபக் கவிராயருக்கும், இவருக்கும் நிகழ்ந்த [9]போட்டியின் காரணமாகப் பாடப்பட்ட பாடல்கள் (தனிப்பாடல்கள்) உள்ளமையின் திருமலை நாயக்கரது காலத்தில் வாழ்ந்திருந்த, வீரமாமுனிவருக்கு ஆசிரியராக இருந்த, சுப்ரதீபர் காலத்தில் இவரும் வாழ்ந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

திருமலை நாயக்கர் காலம் கி. பி. 1623—1659 ஆகும்.

---

7 கலைக்களஞ்சியமும் குறிப்பிடுகின்றது.

8 தனிப்பாடல் திரட்டு—முதற் பகுதி

9 'சொக்கநாத கவிராயர் சண்பகநல்லூர்ச் சிவபெருமான் மீது வண்டு விடுதூது எனும் நூல் பாடி அரங்கேற்றச், 'சண்பக மலரில் வண்டு படியாது' எனச் சுப்பிரதீபக் கவிராயர் வாதிட, நாமகளைவணங்கி இவர் வண்டு படியச் செய்தார் என்பர்'
—தனிப்பாடல் திரட்டு தொகுதி 1 பக்கம் 279

சமயம்

[10] இவரது குல சமயமாகத் திகழ்ந்தது சைவம் எனத் தெரிகிறது.

1 'பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது'

2 'சண்பக நல்லூர்ச் சிவபிரான் மீது வண்டு விடு தூது'

3 'மதுரை யமக அந்தாதி'

4 'மதுரை மும்மணிக்கோவை'

ஆகிய பல சைவநூற்களையும், சிவனைப் பற்றிப் பாடிய பல தனிப்பாடல்கள் மூலமும் இவரதுசைவ சமயப் பற்று தெற்றென விளங்குகின்றது.

'திருமாலிருஞ்சோலை'த் திருமால் மீது பாடப்பட்ட 'அழகர் கிள்ளை விடுதூது' போன்ற இவரது நூற்களைநோக்கும்பொழுது சமரச நோக்கம் கொண்டவர் என்பது புலனாகிறது.

பாடிய நூற்கள்

1 பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது

2 சண்பகநல்லூர்ச் சிவபெருமான் வண்டுவிடு தூது

3 அழகர் கிள்ளை விடுதூது

4 தேவை உலா

5 விஞ்சைக் கோவை (அச்சாகவில்லை)

6 மதுரை யமக அந்தாதி

7 நாரசிங்கன் வளமடல்

8 கரந்தைக்கோவை

9 கரந்தை வருக்கக்கோவை } அச்சாக வில்லை

இந்நூற்களுக்கும் இவரே ஆசிரியர் எனத் தெரியவருகின்றது.

இந்நூற்கள் தவிர 75 தனிப் பாடல்களும் பாடியுள்ளார். 'படிப்பவர்களது உள்ளத்தில் விஷயங்கள் தெளிவாகப் பதியும்படி செய்யுள் செய்வதில் வல்லவர்' என்று உ. வே. சாமிநாதையர் பாராட்டுவது கவனிக்கக் தக்கது.

விஜய ரகுநாத சேதுபதி மீது பாடப்பட்டுள்ள பணவிடு தூதினையும் சேர்த்து தூது நூற்கள் மட்டும் 4 இயற்றியுள்ளார் எனத் தெரிகிறது.

---

10 கலைக்களஞ்சியம்.

இது தவிர மதுரை மும்மணிக் கோவையிலும் 'மேகவிடு தூது பொருளமைந்த அகவல் ஒன்றும், (16 வரிகள்) பூவைவிடு தூதுப் பொருளமைந்த வெண்பா ஒன்றும் (20 வரிகள்) இயற்றியுள்ளார்.

[11]'ஒரு பொருளைத் தூது விட்டதாகச் செய்யுள் செய்வதில் இவருக்கு மிக்க விருப்பம் உண்டு' என்பது இதன் மூலம் தெரிய வருகின்றது.[12]பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்துக்குச் சிறப்புப்பாயிரமும் செய்துள்ளார்.

பாடப்பட்ட மன்னர்கள் வள்ளல்கள்

செல்வந்தர்கள் முதலானோர்

பொதுவாக இறைவனைக் குறித்தபாடல்கள் மிகுதி.

மன்னர் என்று காணும் பொழுது விஜயரகுநாத சேதுபதி மீது பாடப்பட்டுள்ள பணவிடு தூது ஒன்று கிடைக்கிறது.

இம்மன்னனது அமைச்சரனான 'தெய்வகன்னி' என்பார் மீது [13]'விஞ்சைக் கோவை' ஒன்றும் பாடியுள்ளார்.

'சிவந்தான் மல்லைப்பல்லவன்' என்றஓர் அரசரைக்குறித்து 5 பாடல்களும் (இறந்ததைப்பற்றி ஒரு பாடல்) பாடியுள்ளார்.

---

11. தேவை உலா — உ. வே. சா. முகவுரை
12. இச் சிறப்புப்பாயிரப் பாடல்'கள் பழைய ஏட்டுப் பிரதியி னின்று கிடைத்தன.

 "வரஞ்சோதி நாண்மறையால்" — எனத் தொடங்கும். 3367 பாடல் கொண்டது திருவிளையாடல் என்பது இப் பாயிரத்தால் தெரிகிறது. தற்பொழுது கிடைத்துள்ளது 3363 மட்டுமே!
13. விஞ்சைக் கோவை கேட்ட 8-ஆம் நாள் கோவைத் தலைவன் தெய்வ கன்னி இறக்க, சுப்ரதீபக் கவிராயர் அது குறித்துப் பாடிய தனிப்பாடல் ஒன்று:—

 "தேவைரகுநாதன் மெச்சும் தெய்வகன்னி மீதினிலே
 கோவையென்று பில்லிவைத்துக் கொன்றாயே —
 பாவியுன்றன்
 இட்டடைச் சொல் யார்பொறுப்பார் ஏண்டா மடையபல
 பட்டடைச்சொக் காமுழுவம் பா"

 —தனிப்பாடல் திரட்டு
 பகுதி 1 பக்கம் 308.

இவ்வரசன் பரிசாகப் புலவர்களுக்குத் தோள் வரை தொங்கும் இரட்டைக் கடுக்கனை அளிப்பது குறித்து, இவனைத் தவிர வேறு எப்புலவரிடமும் சென்று தலையைஆட்டிப் பாடினால் அவரைத் தண்டிப்பது போல் கன்னத்தில் அடிக்கும் ஆதலான் இப் பரிசே அளிக்கிறானோ? என்ற பொருள் அமையப் பாடியுள்ளார்.'

இவரது பணவிடு தூதில் பொய்ப்புலவர் பணத்துக்காக இரட்டைக் கடுக்கன் ஆசையப் பாடுகின்றனர் என இதே கருத்தைக் கூறியிருப்பது [14](கண்ணி எண் 136) ஒப்பு நோக்கத் தக்கதாய் உள்ளது.

[15]செங்குன்றையூரன், [16]வல்லைக் காளத்தி, [17]போசராசன் எனும் வள்ளல்களைக் குறித்தும்.

[18]மாலைக் கறுப்பன் என்ற ஒரு செல்வந்தனைக் குறித்தும்,

கன்னிவாடி ஜமீன்தார் நரசிங்க நாயகர்என்பவரைக் குறித்தும் பாடல்கள் செய்துள்ளார்.

சமகாலப் புலவர்கள்

இவரது காலத்தில் வாழ்ந்த புலவர்களாக.

1 சுப்பிரதீபக் கவிராயர்
2 படிக்காசுத் தம்பிரான்
3 பரஞ்சோதி முனிவர்
4 தாயுமானவர்
5 திரிகூட ராசப்பக் கவிராயர்
6 உமறுப் புலவர்
7 வீரமா முனிவர்
8 கடிகை முத்துப் புலவர்

ஆகியோர்களைக் குறிக்கலாம்.

1. சுப்ரதீபக் கவிராயர்

இருவரும் பகைமை நோக்குடன் பாடிக் கொண்ட பாடல்கள் தக்க சான்றாக அமைகின்றன ஆனால் சொக்கநாத கவிராயருக்கு

14 ''இரட்டைக் கடுக்க னிலங்கவ தானப்
பிரட்டைத் தலையாட்டிப் பேசி''

15 தனிப்பாடல் திரட்டு—பகுதி 1 — பாடல் எண் 785

16 தனிப்பாடல் திரட்டு—பகுதி 1 — பாடல் எண் 787

17 தனிப்பாடல்திரட்டு—பகுதி 1— பாடல்எண் 772,801

18 தனிப்பாடல் திரட்டு—பகுதி 1 — பாடல் எண் 777

முன்பே சுப்ரதீபக் கவிராயர் மறைந்து போயிருக்கிறார் என்பது அவர் இறப்பின் போது சொக்கநாத கவிராயர் பாடிய[19] தனிப் பாடல் ஒன்றால் தெரிய வருகின்றது.

படிக்காசுப் புலவர்

[20]இராமநாதபுரம் சேதுபதிகளின் அவைக்களப் புலவராக இவர் இருந்திருக்கின்றார். இவரது காலம் கி. பி. 1682—1723 எனத் தெரிகிறது. இவரது சொந்த ஊர் 'தென் களந்தை' என அறிய வருகிறது.

இவர் பாடலைச் சிறப்பித்துச் சொக்கநாத கவிராயர் [21]ஒரு பாடல் இயற்றியுள்ளார்.

பரஞ்சோதி முனிவர்

இவரது திருவிளையாடற் புராணத்திற்குச் சொக்கநாத கவிராயர் சிறப்புப்பாயிரம் செய்துள்ளமை நோக்க இருவரும் ஒரே காலத்தவர் என்பது புலனாகின்றது.

திரிகூட ராசப்பக் கவிராயர், உமறுப் புலவர், வீரமாமுனிவர், கடிகை முத்துப் புலவர் ஆகியோர் திருமலை நாயக்கர் காலத்தவர்கள். சுப்ரதீபக் கவிராயர் இம்மன்னர் காலத்தவர். சுப்ரதீபக் கவிராயருக்கும், இவருக்கும் உள்ள போட்டி குறித்த பாடல்கள் நோக்க, மேற்கூறிய அனைத்துப் புலவர்களும் சொக்கநாத கவிராயரின் சமகாலப் புலவர்கள் என்பது தெளிவாகிறது. தாயுமானவர் விஜயரங்க சொக்கநாதனின் (மதுரை நாயக்கர்) கி பி. 1706-1732 அவைக் கணக்கராய் இருந்தவர். இம்மன்னர் இரகுநாத சேதுபதியின் சம காலத்தவர். ஆக இப்புலவரும் சொக்கநாத கவிராயரின் காலத்தில் வாழ்ந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

---

19 தனிப்பாடல்திரட்டு—1 — பாடல் எண் 798

20 தனிப்பாடல் தொகுதி 1 பக்கம் 248

21 தனிப்பாடல் தொகுதி 1 — பாடல் எண் 784

பாட்டுடைத் தலைவன் வரலாறு

இப்பண விடு தூதின் பாட்டுடைத் தலைவன் முத்து விசய ரகுநாத சேதுபதி என்பது ஓலை முகப்பில் எழுதப்பட்டுள்ள [1]குறிப்பு மூலம் தெரிய வருகின்றது.

சேதுபதிகள்

ஸ்ரீ இராமபிரானால் அமைக்கப்பட்ட 'சேது' அணைக்குக் காவலாக நியமிக்கப்பட்டவர்களே இச் சேதுபதிகள் என்பது இராமாயண காலச் செய்தி!

இதிகாச கால முதற்கொண்டு சீரும், சிறப்புடனும் விளங்கி வந்த இச்சேதுபதி மரபினர்,

சோழர், பாண்டியர் என்ற இரு பெரு வேந்தர்க்கும் போர்த் துணையாய் நின்றுதவி,

[2]'சோழ மண்டலப் பிரதிஷ்டாபகன்'

'பாண்டிய மண்டலஸ்தாபனாசாரியன்' என்ற பட்டப் பெயர் சூடி வந்துள்ளனர்.

பாண்டியர் வீழ்ச்சிக்குப் பின்னர் நாயக்கர் வமிசம் மேலோங்கி, மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய போது, நாயக்கரின் கீழ் நின்று இச்சேதுபதிகள் ஆட்சி புரிந்தனர். ராணி மங்கம்மாள் காலத்தில் (1689—1706) அவளது படை எடுப்பை முறியடித்து வெற்றிக் கொடி நாட்டிய பின் காலம் காலமாக இருந்த அடிமைத் தளையை அறுத்தெறிந்து சுதந்திர நாடாக மறவர் சீமையை மலரவைக்கிறார் கிழவன் சேதுபதி.

---

1. "முத்து விசய ரகுநாத பிள்ளை மீது சொக்கநாதன் கவிராயர் பாடின பணவிடு தூது"
2. சேது நாடும் தமிழும் — ரா.ராகவையங்கார்.

முத்துவிசய ரகுநாத சேதுபதி

முழுவுரிமை பெற்ற மன்னராக ஆட்சி புரிந்த கிழவன் சேது பதியினை அடுத்து ஆட்சிக்கு வந்தவர் இப்பாட்டுடைத் தலைவ ரான விசய ரகுநாத சேதுபதி. கிழவன் சேதுபதியின்,

வடுகநாத தேவர், விசயரகுநாத தேவர் என்ற இரு புதல்வர் களுள் இரண்டாமவரான [3]இளைய மகனுரே விசய ரகுநாத சேதுபதி என்றும்,

[4]கிழவன் சேதுபதிக்கு ஆண்வாரிசு கிடையாது என்றும், மரு மகனுரே இம்முத்து விசய ரகுநாத சேதுபதி. என்றும், வரலாற்றா சிரியர்களுக்குள் கருத்து மாறுபாடு காணப்படுகின்றது.

மகனா?,மருமகனா? என்ற உறவு முறையில் கருத்து மாறுபாடு இருந்தாலும் கிழவன் சேதுபதியினை அடுத்து 1710-இல் ஆட்சிக்கு வந்தவர் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை.

தாய் தந்தை

இந் நூலின் மூலம் இச் சேதுபதியின் தாயார் பெயர் பற்றிய செய்தி அறியக் கூடவில்லையாயினும்.

[5]''சேதுபதி யென்றுநர சென்மமெடுத் தாய்கமல
மாதுபதிக் குன்னையன்றி வாயாதே —நீதிபதி
நீயே விசயரகு நாத நினையீன்ற
தாயே யருட்கோ சலை"—என்ற சொக்கம்பட்டிஜமீன்தார் பெரிய சின்னணைஞ்சாத் தேவரால் ஆதரிக்கப்பட்ட 'பொன் னம்பலம் பிள்ளை'பாடல் மூலம் இச் சேதுபதியின் தாயின் பெயர் 'கோசலை' என்பது தெரிய வருகிறது.

---

3. வடுகநாத தேவர், விசயரகுநாத தேவர் ஆகிய இரு வரும் கிழவன் சேதுபதியின் தாலிகட்டிய மனைவிக்குப் பிறந்தவர்கள்.

—மதுரைநாயக்கர் வரலாறு. பக்கம் 345

4. Vijaya Ragunatha Thevar, a nephew of Kilavan Sethupaihi was crowned as Sethupathi.

—A History of the Maravas — Page. 51

5. வடகரையென்ற சொக்கம்பட்டி பாளையப்பட்டு சரித்திரம்.

இந்நூலின் 284, 309 கண்ணிகளின் மூலம் இச் சேதுபதியின் தந்தையின் பெயர் தெய்வகன்னி என்பது தெரிய வருகின்றது.

இவரது தந்தை 'கதம்ப தேவர்' என [6]இராமநாதபுரம் அரசாங்க ஏடு அறிவிக்கின்றது

ஆட்சிமுறை

[7]விசய ரகுநாத சேதுபதியின் இயற்பெயர் உடையதேவர் என்பதும், விஜய தசமி அன்று முடி சூடிக் கொண்டு விஜய ரகுநாத சேதுபதி ஆனார் என்றும் தெரிகிறது. இவருக்கு மக்களின் பேராதரவு இருந்தது. கிழவன் சேதுபதியின் பட்டத்தரசி அல்லாதவளுக்குப் பிறந்தவரும், அடுத்தபடியாக ஆட்சிக்கு வர வேண்டியவர் எனக் கிழவன் சேதுபதியால் சிபாரிசு செய்யப் பட்டவரும் ஆகிய பவானி சங்கரனுக்கும், இவருக்கும்பகைமையின் காரணமாய் அடிக்கடி போரும் நடைபெற்று வந்தது. ஆயினும் நாட்டு மக்களின் நல்லாதரவு இவர் பக்கம் இருந்ததால் பவானி சங்கரனால் யாதும் செய்ய முடியாது இருந்தது.

இவர் ஆட்சி ஏற்றவுடன் தமது ஆட்சிக்கு உள்ளடங்கிய பகுதிகளை, பல பாளையங்களாகப் பிரித்து பாளையக்காரர்கள் அனைவரையும் தனக்குக் கீழ், முறைப்படி கப்பம் கட்டி வரச் செய்து நிர்வாகத் திறமையுடன் ஆட்சி செய்தார் எனத் தெரிகிறது.

அரச அமைச்சரவையிலும், படை அமைப்பிலும் அரசரது நெருங்கிய உறவினர்களே அங்கம் வகித்து வந்தனர். தெய்வ கன்னி என்ற இவரது மருமகன் அரசியலில் ஒரு முக்கிய பதவியில் இருந்திருக்கிறார்.

'தெரிவார் தமிழ்முத்துத் தெய்வகன்னி யென்ன
யிருவோரு நன்மருகரென்ன'—என்ற இந்நூலின் 315ஆம் கண்ணி மூலம் தெய்வகன்னி என்பவர் இவரது மருமகன் என்பது தெரிகிறது.

---

6. "Thiru Udaya Thevar alias Vijaya Ragunatha Sethupathi; (1710-1725) son of Kadamba Thevar and a Nephew of Kilavan"
7. "Thiru Udaya Devar was crowned on Vijayadasami and this might account for the Vijaya prefix in his alias."

—The Sethupathies of Ramnad

ஒரு சிறு படகு வரி விதித்தார் என்பதற்காகச் சேதுபதி இவருக்கு மரண தண்டனை அளித்ததை[8] வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

இத்தெய்வகன்னி மீது இந்நூலாசிரியரான பலபட்டடைச் சொக்கநாத கவிராயர் விஞ்சைக் கோவை என்ற ஒரு நூல் பாடியுள்ளார். இக்கோவையை அரங்கேற்றிய எட்டாம் நாள் இத் தெய்வகன்னி அகால மரணம் எய்தியதை இப்புலவரின் சமகாலத்தவரான சுப்பிரதீபக் கவிராயர்[9] தனிப்பாடல் கீழ்க் கண்டவாறு உரைக்கின்றது.

"தேவைரகு நாதன்மெச்சும் தெய்வகன்னி மீதினிலே
கோவையென்று பில்லிவைத்துக் கொன்றாயே-பாவியுன்றன்
இட்டடைச்சொல் யார்பொறுப்பார் ஏண்டா மடையபல
பட்டடைச்சொக் காமுழுவம் பா"

---

8. "இவ்விசய ரகுநாத சேதுபதி (1710-1720) இராமேசுவரம் கோயிலில் உள்ளப் பற்று மிக்கவர். இராமேசுவரத்துக்குச் செல்லும் யாத்திரீகர்கள் பாம்பனைக் கடக்கப் படகில் செல்லும் போது, அவர்களுக்கு ஒரு சிறு படகு வரி விதித் தார் என்பதற்காகத் தன் மருமகனையே கொல்லுமாறு ஆணையிட்டவர்"

—இராமநாதபுர மாவட்டம்—சோமலெ.

"He appointed his son-in-law as the Officer-in-charge of pilgrim welfare. The son-in-law levied an unauthorised pilgrim tax and constructed a good road between Pamban and Rameswaram after removing the sand hills that had grown between the two places. The Sethupathi was enraged when he learnt of the unauthorised levy. He sent for his son-in-law to cruel death. The two daughters performed Sati, and their memory is to-day preserved in the two Choultries the "Akkal Matam" and the 'Thangathchi Matam'**

9. தனிப்பாடல் திரட்டு பகுதி 1. சுப்ரதீபக்கவிராயர். முதல் பாடல்.

** constructed many years later over their over ashes, between Pamban and Rameswaram
—The Sethupathis of Ramnad Page-47.

இத்தெய்வ கன்னியே அரசரது அமைச்சராக இருந்தார் என்றும், ஸ்ரீ இராஜராஜேச்வரி பலிபீடங் கொண்டு வந்து சேர்த்து அரசுக்குப் பெருமை சேர்த்தார் என்றும் [10] மற்றொரு பாடல் கூறுகின்றது.

"கலியாண சோமணல் லேலன வாருகர்த் தாக்கண்மெச்சும்
சலியா மதிமந் திரிதெய்வ கன்னிதன் தந்திரத்தால்
நலியா நிராயவே லூர்புகுந் தேயன்றி ராத்திரியே
பலிபீடங் கொண்டுவந் தான்சேது வாசல் பலக்கவென்றே"

அம்பலவாணன் என்பவர் இச் சேதுபதியின் மைத்துனன் என்பது இந்நூலின் 313 ஆம் கண்ணியால் தெரிய வருகின்றது.

இவர் இராமேசுவரர் கோயிலில் திருப்பணி செய்த செய்தியைத் தேவையுலா கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றது.

—"சீராமர்

மெய்யம் பலமாக வீற்றிருப்பார்க் கேற்றபணி
செய்யம் பலவாண தேசிகனும்"

திருஞான பூபாலன் என்பவர் சேதுபதியின் தந்தைக்கு மாதுலன் (தாய்மாமன்) என 310 ஆம் கண்ணி குறிப்பிடுகின்றது

"நட்டூரிற் சோமேசர் கோவிநல
மானதனை நகத்தார் செய்து
மட்டுருங் குழலுமையா
ளுலகுடைய நாயகியை வகுத்தங்கேற்றிக
கட்டூரன் கிளைவாழச் சேதுபதி
ரகுநாதன் கருணை வாழ
நெட்டூருங் காணியுங் கொண்டா
னிறைஞானச் சேது ராயன்"

என்ற இப்பாடல் மூலம் இவர் நெட்டூர் கைப்பற்றிய செய்தி தெரிய வருகின்றது. நெட்டூர் என்பது விஞ்சைப் பகுதியாகும். பகைவர் வசம் இருந்த இதனை இசசேதுராயன் மீட்டிருக்கவேண்டும். இவ் வெற்றி குறித்தே சேதுபதியை இந்நூலாசிரியர்,

"செஞ்சொற் றமிழைத் தெளிந்துரைக்கச் சீர்படைத்த
விஞ்சைப் பதியான்"—260 ஆம் கண்ணி.

எனச் சிறப்பித்துப் பாடக் காண்கிறோம்.

---

10. பெருந்தொகை 1935—1936.

இச்செய்தி சேதுநாட்டுத் திருக்கானப்பேர்த் தலத்தையும், நெட்டூர்த் தலத்தையும் திருப்பணி செய்தது குறித்து மற்றொரு [11]பாடல் செப்புகின்றது.

அரசுச் சின்னங்கள்

இந்நூலின் 237—277 ஆம் கண்ணிகளின் மூலம் சேதுபதியின் தசாங்கம் குறிக்கப்படுகின்றது. இதன் மூலம் சேதுபதிக்குரிய அரசுச் சின்னங்கள் தெரிய வருகின்றன.

குவளை மலர் மாலை, மேழி, மும்முரசு போன்றவை சின்னங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவரது பணிகள்

இவர் பேரில் இதே புலவரால் பாடப் பெற்ற தேவையுலா என்ற நூல் மூலம் இராமேசுவரம் கோவிலுக்கு இவர் செய்த பல திருப்பணிகள் பற்றிய செய்திகள் தெரிய வருகின்றன. 1710 முதல் 1720 வரை உள்ள மிகக் குறைந்த 10 ஆண்டுகளே செய்த ஆட்சி ஆயினும், இந்த ஆண்டுகள் முழுவதும் பவானி சங்கரனுடன் இடைவிடாத போர்த் தொல்லையும் இருந்து வந்தாலும், ஆழமாகப் பதிந்து கிடந்த அளவற்ற பக்தி மூலம் பல கோயில் திருப்பணிகளையும் இவரால் செய்ய முடிந்தது.

[12]உத்சவ காலத்தில் மூர்த்தி எழுந்தருள ஒரு மண்டபமும்.

[13]உத்சவமூர்த்தி ஊர்வலம் செல்ல ஒரு திருத்தேரும்,

---

11. ‘‘தருக்கொளும் விண்பொழில் சூழுந்
திருக்கானை எனு மூலத்தலத்தைக் கண்டு
வெருக்கொளும் காடானவை யெல்லாம்
வேரறவே வெட்டிச் செய்ய
தெருக்களு மாடமுங் கூடகோபுரமுந்
தூபி திருமதிளுஞ் செய்து
திருக்குளமுங் கரைகண்டான் மந்திரியாந்
திருஞானச் சேதிராயன்’’

12. காபாலிக் கென்றுகட்டு வித்த ரகுநாத
பூபாலன் மண்டபத்திற் போந்திருந்து
—தேவையுலா 63ஆம்கண்ணி

13. ‘‘மாதுபதியுமவன் மாமகுடமும் போலுஞ்
சேதுபதி வைத்ததிருத் தேரேறி’’
—தேவையுலா—103ஆம் கண்ணி.

[14]இராமநாதருக்கு அணி மிகு ஒரு திருவாடையும் செய்தளித்தார் எனத் தெரிய வருகிறது.

[15]இராமநாதர் மீது அளவற்ற பக்தி பூண்டவராக இவர் இருந்திருக்கின்றார். இக்கோயிலுக்கு இவர் செய்த பல திருப்பணிகளுடன் செய்த தான தருமங்களும், அளித்த இறையிலி நிலங்களும் இதற்குச் சான்றாகின்றன.

[16]இத்தகைய கோயில் திருப்பணிகள் தவிர நீர்ப்பாசன வசதியின் பொருட்டு மக்களுக்காக 'ரகுநாத சமுத்திரம்' எனும் ஒரு பெரிய ஏரியை உருவாக்கியதாகவும் தெரிகிறது,

இவர் ராஜ சிங்க மங்கலம், ஓரியூர், அறந்தாங்கி, திருப்பத்தூர் கமுதி, பாம்பன் ஆகியவற்றை வலுவாய்ந்த துறைமுக நகரங்களாக்கியும் இருக்கிறார்.

இச்சேதுபதியின் சமகாலத்தவர்கள்

(1) விஜயரங்க சொக்கநாத நாயக்கர் (1702 - 1732)

இச்சேதுபதி ஆட்சிக் காலத்தில் இந்நாயக்கர் மதுரையை ஆண்டு வந்தார். நாயக்க வமிசத்தின் இறுதி மன்னராக நாயக்கர் வீழ்ச்சிக் காலத்தில் இருந்த காலகட்டமாகும் இது.

---

14. "தென்னன் விசய ரகுநாத சேதுபதி
கன்ன னிருள்பொற் கலைபுனைந்து"
—தேவையுலா,—67 ஆம் கண்ணி.

15. "His acts of piety and charity too very many. He endowed the KothanJaramaswami temple in Ramnad liberally. He added to the buildings in the Rameswaram Temple. He was a great devotee of the Lord of Rameswaram, and everyday worshipped at the Rameswaram shrine. For covering the distance from Ramnad to Rameswaram quickly he set up a system of Horse relays."

16. **Ragunatha Cavvery** : "From Iluppoor, the Gundu river winds east wardly for 6 miles and passes by Mandalamanickam and flowing south-easternly 2½ miles, turns due south of Kamudi, running between the Fort and the town. On the east of the town the river is obstructed by a large and massive dam and the course of the river was diverted towards the east by Ragunatha Setupathi. The river assumes the name of Ragunatha Cauvery from Kamudi and finally empites itself in the Kalary Lake.

The Ragunatha Cauvery feeds a chain of 65 tank in the Mudukulattur Taluk"
—Gazetteer of India - Ramnad Dist. Page-32.

(2) சிவகங்கை கன்றுமேய்த்த உதயதேவர்

[17] சிவகங்கையை ஆண்ட இம்மன்னர் தன் மகனான சசிவாண தேவருக்கு இச் சேதுபதியின் மகளை மணம் முடித்துக் கொண்டார் என்று தெரிகின்றது.

இவர்களைத் தவிர சிவந்நான் மல்லைப் பல்லவன், வல்லை நகர்க் காளத்தி, செங்குன்றையூர்த் தலைவன், மாவைக் கறுப்பன், போரூராளன் ஆறை அழகப்ப முதலியார், சொக்கம் பட்டி ஜமீன்தார் பெரியசாமி சின்னனைஞ்சாத்தேவர், கன்னிவாடி ஜமீன்தார் நரசிங்க நாயகர் ஆகியோரும் இச்சேதுபதியின் சம காலத்தவர்கள் என்பது இந்நூலாசிரியராலேயே பாடப்பட்ட, இவர் களைப் பற்றிய தனிப்பாடல்களும் நூல்களும், சான்றாக நின்று தெரிவிக்கின்றன.

மறைவு

இச் சேதுபதியின் மறைவுக் காலம் குறித்துப் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன.

[18] 1720-இல் கொள்ளை நோயால் இறந்தார் எனவும், 1725-இல் மறைந்தார் எனவும் கூறுகின்றனர்.

நூல் எழுந்த காலம்

இச்சேதுபதி மீது இந்தப் புலவரால் பாடப்பட்ட தேவைஉலா மூலம் இராமேச்சுவரம் கோயிலில் இவர் செய்த பல திருப்பணிகள் பற்றிய செய்தி விளக்கமாகக் கூறப்படுகின்றது. இந்நூலுள் அது பற்றிய எக்குறிப்பும் காணப்படவில்லை.

---

17. "Nalakottai Udaya Devar got the daughter of the Sethupathi married to his son Sasivarna Devar. This was the beginning of what lateron developed into the Sivaganagai Samastanam."

18. "When the Sethupathi was about to return to this Capital, epidemic of virulent nature broke out in the camp and the King was affected. It took a heavy tool of lives. The king was taken to Ramnad only to breath his last in 1720"— A History of the Maravas.
—Dr. S. Kadirvel P. 56

Sewell mentions 1720 as the last regional year of Vijaya Ragunatha Devar while the Manual makes 1725 the last year of the Sethupathi.

எனவே 1710 –1720-க்குள் அடங்கிய 10 ஆண்டுகளில் இறுதிக் கால கட்டத்தில் திருப்பணி நடைபெற்று தேவைஉலா அதன் பின் பாடப் பெற்றிருக்க வேண்டும் என உய்த்துணர வழி உள்ளது. அவ்வாறிருப்பின் இந்நூல் இவர் ஆட்சியின் முற்பகுதியில் அதாவது 1710 —1715க்குள் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன் இச் சேதுபதியின் மருமகனும் முக்கிய அமைச்சருமாக இருந்த தெய்வ கன்னி பற்றியும் தேவை உலா எக்குறிப்பும் தரவில்லை. இந்நூலோ தெய்வகன்னி பற்றிய செய்திகளைச் சிறப்பாகத் தருகிறது. எனவே தெய்வ கன்னி உயிருடன் இருந்த இச்சேதுபதியின் முந்தைய ஆட்சி ஆண்டுகளிலேயே இந்நூல் இவர் மீது பாடப்பட்டிருக்கக் கூடும் என உணரலாம்.

நூலாராய்ச்சி

சொக்கநாத கவிராயரின் பணவிடுதூது - ஓர் ஆய்வு

பலபட்டடைச் சொக்கநாத கவிராயர் என்பவரால் எழுதப் பட்ட விஜய ரகுநாத சேதுபதியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இப்பண விடு தூது தவிர,

1. [1] புல்லைக் குமரேசர் பணவிடு தூது
2. [2] சின்ன வன்னியனார் பேரில் பணவிடு தூது
3. மாதைத் திருவேங்கடேசர் பணவிடு தூது
4. இராமேசுரம் இராமலிங்கேசர் பணவிடு தூது.

என நான்கு பணவிடு தூதுக்கள் உள்ளன. இவற்றில் முன்னிரண்டும் இன்னமும் அச்சேறப் பெறாதவை.

ஈங்கு சொக்கநாத கவிராயரது பண விடு தூது பற்றி மட்டும் காணலாம்.

நூல், நூலாசிரியர், பாட்டுடைத் தலைவன்

ஏட்டின் முகப்பில்,

"முத்து விசைய ரெகுநாத பிள்ளை பேரிற் சொக்கநாதன் கவிராயன் எழுதின பணவிடு தூது" என்றும்,

"ஆழ்வார் திருநகரி தாயவலந் தீர்த்த கவிராயர்வர்சன் வீட்டுப் புஸ்தகம் கருடாயநம" - என

எழுதப்பட்டுள்ள குறிப்புகள் மூலமும்,

இந்நூல் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 'ஆழ்வார் திருநகரி' என்ற ஊரில் உள்ள 'தாயவலந்தீர்த்த கவிராயர்' என்ப வரது வீட்டிலிருந்து கிடைத்தது என்பதும்,

இந்நூலின் பாட்டுடைத் தலைவரது பெயர் விஜயரகுநாத பிள்ளை என்பதும் புலனாகின்றது.

1, 2 மூலச் சுவடி எண் - 233, 234 டாக்டர் உ. வே. சா. நூல் நிலையம்.

பாட்டுடைத் தலைவரது பெயரும், பிற செய்திகளும் நூலினுள்ளும் பல இடங்களில் அகச் சான்றாக அமைந்து கிடப்பதைக் காண்கிறோம்.

நூல் எழுந்த காலம்

இந்நூல் எழுந்த காலத்தைக் கணிக்க நூலாசிரியர், பாட்டுடைத் தலைவன் ஆகியோரது புறவரலாறுகளும், நூலினுள் உள்ள சில அகச்சான்றுகளும் துணையாக நிற்கின்றன.

தூதிலக்கணமும் பணவிடு தூதும்

யாப்பமைதி :— இலக்கண விளக்கச் சூத்திரத்தின் படி பஃறொடைக் கலிவெண்பாவினாலே] இப்பணவிடு தூது கலிவெண் பாட்டாலேயே இயற்றப் பெற்றுள்ளது.

தூதுப் பொருளின் திணை

உயர்திணை, அஃறிணை எனும் இரண்டனுள் அஃறிணை யான பணம் தூதுப் பொருளாக அமைந்துள்ளது.

தூதுப் பொருள்

பணம் தூதுப் பொருளாகலாம் என்பது தூது பற்றிய இலக் கணத்தில் கூறப்படாவிடினும்,

"செந்தமிழைச் செம்பொன்னைச் சேர்ப்பினவை தாஞ்செல்லா
பந்தமுறக் கொடுபோம் பாலவே"

— என்ற [3] கச்சியப்ப முனிவர் வாக்கால் பணமும் தூது விடுப்பதற்குரியதே என்பதை உணரலாம்.

நூலின் பொருளமைதி

1. அகப்பொருள்
2. புறப்பொருள் என்ற இரு தூது வகையுள் இது அகப்பொருள் சார்ந்த தூதாக உள்ளது.

தூது விடுப்பவரில் உள்ள புதுமை

"அவரகத்து மன்னவா தூதுரைத்து வா" - கண்ணி 369 என்பதனால் தூது சொல்லி அனுப்புபவள் பெண் என்பது தெரிய வருகின்றது.

3. ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது - கண்ணி 504

ஆனால் தலைவன், தலைவி விடுக்கும் தூதுகள் என்ற இரண்டனுள், இது தலைவி விடுக்கும் தூது என்று கொள்ள இடமில்லை.

'தூது சொல்லி வா' என்ற தூதுப் பொருள் அமைந்த 362 முதல் 369 வரை உள்ள 8 கண்ணிகளை நோக்கின் தலைவி தானே நேரடியாகத் தூதுப் பொருளை அனுப்பியதாகத் தெரியவில்லை.

''கெஞ்சத்
துடர்ந்தென் மனைபுகுந்த தோகைக்குத் தூது
நடந்தனையோ ரெல்லாரு நைந்தார்''

என்ற 363-ஆவது கண்ணியை நோக்க, தொடர்ந்து தோழியின் மனை புகுந்த தோகை தலைவியாகவும், தலைவிக்காக இதற்கு முன் தூது சென்றவரது முயற்சிகளெல்லாம் பலிக்கவில்லை.

'ஆனால் பணமே! நீ சலவை முக்காடு நீக்கி முகங்காட்டி நின்றவுடன், அக்காரக்கட்டி உரைத்தாற் போல் உன்னுடன் கனிந்து உரையாடுவார். ஆகவே நீ தூது முயற்சியில் வெற்றி பெறுவாய்! சென்று தூதுரைத்து வா' எனத் தலைவி பொருட்டுத் தோழி ஒருத்தி தூதனுப்புவதாக அமைந்துள்ள புதுமைப் போக்கை காண்கின்றோம். இது பிற பணவிடு தூதுகளிலும், வேறு தூது இலக்கியங்களிலும் காணப்பெறாத புதுமையாகும். இப்பணவிடு தூதில் உள்ள மற்றோர் புதுமை தூதுப் பொருளான பணத்திற்கும் தசாங்கம் கூறியுள்ளதாகும். பிற தூது நூற்களில் பாட்டுடைத் தலைவனுக்கு மட்டுமே தசாங்கம் கூறியுள்ளனர்.

நூலமைப்பு முறை

இத்தூது நூல் முதற்கண் நேரிசை வெண்பாவால் இயன்ற விநாயகர் வணக்கமும், கலிவெண்பாவால் அமைந்த 369 கண்ணிகளும் கொண்டதாகத் திகழ்கின்றது.

இந்நூலின் அமைப்பை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுத்து விடலாம்.

1. பணத்தைப் பற்றிய செய்திகள்
2. பாட்டுடைத் தலைவனின் சிறப்புக்கள்
3. 'தூதுரைத்து வா' என்ற தூதுச் செய்திகள்

369 கண்ணிகளில் பணத்தினைப் பற்றிய செய்திகள் மட்டும் 231 கண்ணிகளில் கூறப்பட்டுள்ளன.

எஞ்சிய 138 கண்ணிகளுள் 130 கண்ணிகளில் பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகளும், மீதி 8 கண்ணிகளில் 'தூது சொல்லி வா' என்ற தூதுச் செய்திகளும் அமைக்கப்பட்டுள்ளன. முறைவைப்பு போற்றத் தக்கதாய் உள்ளது. கூறியது கூறலை யோ, முன்பின் முரணான கருத்துக்களையோ நாம் எவ்விடத்தும் காணமுடியவில்லை.

நூலாசிரியர் நோக்கம்

கண்ணிகளின் எண்ணிக்கை வைத்துக் காணும் பொழுது, பணத்தை பற்றிய செய்திகளுக்கே மிகவும் முக்கியத்துவம் கொடுக் கப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது.

ஆனால் பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகள் பணத்தினைப் பற்றிய செய்திகளோடு ஒப்பிடும் பொழுது குறை வானவைகளாக இருப்பினும் வரலாற்றுச் செய்திகள் பல மலிந்து வரலாற்றறிஞர்களுக்கோர் பொற்களஞ்சியமாய்த் திகழ்வதையும் காண முடிகின்றது.

ஆக மொத்தத்தில் நோக்கும் பொழுது, புலவர் பணத்தின் தன்மைகளைக் கூற விரும்பியிருக்கிறார், தன் காலத்து மன்னன் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்; இதற்குத் தூது எனும் சிற்றிலக்கிய வகையை ஒரு கருவியாகக் கையாண்டிருக்கிறார் எனக் கூறல் பொருத்தமுடையதாகும்.

நூலில் உள்ள செய்திகள்

பணத்தைப் பற்றிய செய்திகள் சிறப்பாகச் சொல்லப் பட்டுள்ளன.

சிவன், விஷ்ணு, பிரம்மன் ஆகிய மூவர்க்கும் முதல்வனாகப் பணத்தைக் குறிப்பிடுவதுடன்,

உயர்திணையாக உருவகித்துப் பணத்திற்கு உறவு முறை களும், அரச பதவியும் அளித்துப் பாடப்பட்டுள்ள உருவக அமைப்புகள் நூலுக்கு அணி செய்வதுடன், மனித வாழ்க்கையில் பணம் பெறும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றன.

'மருத்துவர்கள், தர்க்கவாதிகள், பொய்ப்புலவர்கள், நிலச் சொந்தக்காரர்கள், விலை மாதர்கள், கழைக் கூத்தாடிகள், இரச வாதம் செய்பவர்கள், பேயோட்டும் மந்திரவாதிகள்' ஆகிய இவர்கள்,

'பணம் சேர்த்தல்' என்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பட்டப்பகலில் எத்தகைய இருட்டடிப்பு வேலைகளைச் செய்கிறார்கள் என்பதையும், பணம் தேட எத்தகைய குறுக்கு வழிகளை மேற்கொண்டு உள்ளதையும் இழக்கிறார்கள் என் பதையும் சுவைபடத் தொகுத்து விளக்குகிறார்.

பணத்தைக் குறிப்பிடும் சொற்கள்

இந்நூலுள் பணத்தைக் குறிப்பிடும் சொற்களாக மொத்தம் 36 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

அவையாவன

[4]10-பொன், 26-தாது, அத்தம், ஆடகம், 27 வெறுக்கை, 28-ஈகை, வேங்கை, 29-சாதரூபம், 30-கல்யாணம், ஏமம், 31-மா 32-நிதானம், 33-அரி, 34-மாடு, 78-மோகரம், சம்பாங்கி 79-சாணான் காசு, ஈடு, தங்கக்காசு, சந்தமிக்காசு, 80-பெருங்காசு, கருவெருமை நாக்கு, 81-பெருங்கீற்று, சன்னகீற்று 85-வராகன், மாடை, 98-வெட்டு, 100-நாணயம், கோழி விழுங்கல், நண்டுக்கால், ஊணையம், உள்ளான், 101-கீழா நெல்லிக்கொட்டை, சில்லறை, 102-மட்டம், 103-கம்பட்டம் போன்ற சொற்களாகும்.

இந்நாணயப் பெயர்களில் பல இன்று வழக்கொழிந்து போய் விட்டதால் அவற்றின் மதிப்போ, வடிவமோ அறிய இயலாது போனமை நம் துர்ப்பாக்கியமே ஆகும்.

அச்சாகியுள்ள 'இராமலிங்கேசர்,' 'மாதைத் திருவேங்கடேசர்' பணவிடு தூதுக்களையும் வைத்து ஒப்பு நோக்கும் பொழுது,

'கோழி விழுங்கல்' போன்றவை குற்றமுள்ள நாணயவகை என்பது தெரிகிறது. நாணயம் செய்முறையில் ஏற்படும் குற்றங்களை வைத்தே 'கோழிவிழுங்கல்' என்பதுபோல, 'நண்டுக் கால், ஊணையம், உள்ளான், கீழாநெல்லிக் கொட்டை என்ற பெயர்களும் இடப்பட்டிருக்கக் கூடும்.

'பெருங்காசு', 'பெருங்கீற்று' என்பவை அதிக மதிப்புள்ள நாணய வகை என்பதும், 'சன்னகீற்று', 'சில்லறை' என்பவை சிறு மதிப்புடைய நாணய வகை என்பதும் அவற்றின் பெயரமைதி நோக்கத் தெளிவாகின்றது.

---

4. எண்கள் கண்ணிகளைக் குறிக்கும்.

நாணயம் ஒன்று குறிக்க இவ்வாறு 36 பெயர்கள் இருந்தமை நோக்கத் தமிழின் மொழிவளப்பமும், தமிழரின் பண்பாட்டு வளர்ச்சியும் புலனாகிறது.

பணத்தைக் குறித்த இச்செய்திகள் தவிரப் பிற செய்திகளைப் பொதுவாக,

1. இலக்கியச் செய்திகள்
2. புராண இதிகாசச் செய்திகள்
3. வரலாற்றுச் செய்திகள் என மூன்று வகையாகப் பகுத்துக் கொள்ளலாம்.

நூலில் உள்ள இலக்கியச் செய்திகள்

எப்புலவனது படைப்பிலும் அவன் காலத்து, அவனுக்கு முந்தைய காலத்து இலக்கியங்களின் தாக்கம் ஏற்படாமல் போவது இல்லை.

'முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றுதல்' என்பது போலத் திருக்குறள், திவ்ய பிரபந்தத்தின் கருத்துக்களை இப்புலவரும் தன் நூலுள் எடுத்தியம்பியுள்ளதைக் காண்கிறோம்.

குறள் கருத்துகள்

1. "நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்" —மடியின்மை-605

என்ற குறள் சிறிதும் மாற்றம் பெறாது எடுத்தாளப்பட்டிருப்பதை இந்நூலின் 296 ஆம் கண்ணியில் காணலாம்.

2. '...... இறைப்பாருக்கு
ஊற்று நீர் போல்"
—என்ற 65 ஆம் கண்ணி வரிகள்
"தொட்டனைத் தூறு மணற்கேணி" — கல்வி 396

என்ற கல்வி அதிகாரக் குறள் வரியை நினைவு படுத்துவதாக உள்ளது.

திவ்ய பிரபந்தக் கருத்து

"தெருளே விளக்காய் தியானமே நெய்யா
யருளே நற்றூண்டு கோலாகப் — பொருளிடத்தி
லன்பே திரியா வாகந் தகழியாய்த்
துன்பா ருலகமெனத் தோன்று மிருள்"
என்ற 279-280 ஆம் கண்ணி வரிகள்

பூதத்தாழ்வாரின் இரண்டாந் திருவந்தாதித் திருமொழித் தொடக்கப் பாடலான,

'அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்''

என்ற பாடலை எண்ண வைப்பதாக உள்ளன.

பெரிய புராணக் கருத்து

''—தலைவளைத்து
நின்றால் மடமாதர் நிற்கவிளை நெற்கதிரை
யென்றாலும் பாரா வியல்பினான்''

என்ற 301—302 ஆம் கண்ணிச் செய்தியிலுள்ள விளைந்த நெற்கதிர் போல் (தலைகுனிந்து) உள்ள மாதர்' என்ற வரி,

பெரிய புராணம் திருநாட்டுச் சிறப்பில் 22ஆம் பாடலிலுள்ள,

''பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமிழ் கூடினார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கிமற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்''

என்ற பாடலுடன் கருத்தொப்புமை கொண்டதாய் உள்ளது.

நூலில் இடம் பெற்றுள்ள புராணச் செய்திகள்

பொதுவாகப் பிரபந்த நூற்களில் புராணத் தாக்கம் மிகுதியாக உள்ளதைப் பார்க்கிறோம். தூது இலக்கியங்களில் புராணச் செய்திகள் இடம் பெறாத தூது இல்லை எனத் துணிந்து கூறும் அளவுக்கு மலிந்து கிடப்பதைக் காண்கிறோம்.

இந்நூலுள் இடம் பெற்றுள்ள புராணச் செய்திகளை,

1. புராணச் செய்திகள்
2. புராணக் கதைகள் என இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

1. புராணச் செய்திகள்

புராண வரலாறுகள் கூறும் சில விளக்கங்களை, சில நம்பிக்கைகளை சில உருவக அமைப்புக்களைப் புராணச் செய்திகளுள் அடக்கலாம். இத்தகைய செய்திகளாக இந்நூலுள் இடம் பெற்றுள்ளவைகள்:-

1. செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி செல்வத்தின் அதிபதி[5]. (1)

2. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முச்செயலுக் குரியோர்- பிரம்மன், திருமால், சிவன்.(4) (2) (6)

3. சிவனது வாகனம் காளை. (4-5)

4. கயிலாய மலை சிவனது இருப்பிடம். (5)

5. திருமாலினது உந்திக்கமலத்தில் பிரமன் பிறந்தான். (3)

6. பரந்தாமன் பள்ளிகொள்ளுவது பாம்பணையில் என்ற கருத்து. (13)

7. மாயவனது மார்பில் இலக்குமி உள்ளாள் என்ற செய்தி.(14)

8. எவ்வினையும் தீர்க்கும் விநாயகன் கந்தபிரானுக்கு முன் பிறந்தவன். (36)

9. தாழம்பூவினை வாளாகக் கைக்கொண்டவன் மன்மதன் என்ற செய்தி. (51)

10. இளம் பிறையைத் தன் சடாமுடியில் கொண்ட பெம்மான் சிவபிரான். (55-56)

11. தேவதாரு தேவலோக மரம். எது கேட்டினும் தரக்கூடியது (318) ஆகிய இது போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

2. புராணக் கதைகள்

புராணங்களில் பேசப்படுகின்ற பல கதைகள் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

1. [6]சிவன் திரிபுரம் எரித்த செய்தி. (5)

---

5. எண்கள் கண்ணிகளைக் குறிக்கும்.

6. ''புரம் எரியச் சிலை வளைத்தான்''
''புரமூன்றும் மேவச் சிலை வளைவித்து''
சுந்தரர்தேவாரம்.

''எயின் மூன்றும் எய்த''
—சம்பந்தர் தேவாரம் திருவலிதாயம் பதிகம்—3.

2. [7]சூரபன்மனை முருகக் கடவுள் அழித்த கதை. (15)
3. [8]அர்த்த நாரீசுரரை வீட்டிலழைப்பித்து இரசவாதம் செய்த பொன்னனையாள் கதை. (26)
4. [9]பொன்னால் பூஜைசெய்த சுந்தரமூர்த்திநாயனார் கதை. (17)
5. திருமால் நரசிம்மவதாரமெடுத்து இரணியனை அழித்த கதை. (18)
6. நீதியை நிலை நிறுத்தத் தன் கைகுறைத்த பொற்கைப் பாண்டியன் கதை. (25)
7. திருமால் வராகவதாரம் எடுத்த செய்தி. (58)
8. ஆயர்பாடி மக்களைக் காக்கக் கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்த கதை. (235)
9. அகத்தியர் கடலைக் குடித்த கதை.(238)
10. அகத்தியர் விந்திய மலையின் செருக்கை அடக்கிய செய்தி.(238)
11. சம்பந்தர்—சமணர் நீர், நெருப்பில் நடத்திய ஏட்டுச் சோதனைகள்.(245)
12. ஏழு காளைகள், குவலயாபீடம் என்ற யானை இவற்றை வென்ற கண்ணன் கதை. (234)

---

7. ‘ தங்கும்பல வடிவெங்கொடு சமராடலு முருகன்
றனிவேலை விடுத்தானது தருவற்கிறைகண்டே
சங்குந்திய வேலைப்புடை தடமாமர மாகிச்
சாரக்கதிர் வேல்சென்று தடிந்திட்டது மாதோ”
—கந்தபுராணம், யுத்தகாண்டம்.
சூரன் வதைப் படலம்.

கண்ணி எண்களைக் குறிக்கும்.

8. திருவாலவரியுடையார் திருவிளையாடற் புராணத்தில் 45-ஆவது ஆடல் ‘பொன்னனையாளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல்’ என்பதாகும். ‘திருப்பூவணநாதருலா’ வும் இதுபற்றிச் செப்புகிறது ‘‘புயறவழ் மேருவென்னப் பொன்னிருங் குவையைக் கண்டாள் அயலுற வதிசயித்தாள் விடியுமு னடித்தெழுந்தே’—திருவிளையாடல்.
9. பங்குனி உத்திரத் திருநாளுக்குப் புகலூரில் செங்கல் செழும் பொன்னாகப் பெற்றது.

திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றது, திருமுதுகுன்றத்துப் பொன்னை இறையனாரால் திருவாரூர்க் குளத்தில் எடுத்தது ஆகிய செய்திகள் அடங்கும்.
—பெரியபுராணம் சுந். புராணம்.

13. [10]சிவபிரான் பிட்டுக்கு மண்சுமந்த கதை. (246)
14. பர்வதராஜன் மகளாகப் பார்வதி பிறப்பெடுத்த கதை. (284—285)

ஆகிய இது போன்ற கதைகள் இடம் பெற்றுள்ளன. பொதுவாக, திருவிளையாடற் புராணம், கந்த புராணம், பெரிய புராணம் ஆகிய புராணங்களில் இடம் பெற்றுள்ள, மக்கள் பலர் பரவலாக அறிந்திருக்கக் கூடிய எளிமையான புராணக் கதைகளே இடம் பெற்றுள்ளன.

இதிகாசச் செய்திகள்

மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசச் செய்திகளும் இந் நூலுள் இடம் பெற்றுள்ளன.

1. கண்ணபிரான் பாண்டவர் பொருட்டாகக் குருக்ஷேத்திரப் போரில் கௌரவர் நூறுபேரையும் அழித்த செய்தி (236)

2. பஞ்சபாண்டவர் ஐவருள் நான்காமவனான நகுலன் புரவிகளை நடத்துவதில் வல்லுநன் என்ற செய்தி (267) ஆகிய மகாபாரதச் செய்திகளும்,

3. 'ராஜ துறவி' எனப் போற்றப்பட்ட கனக மகாராசனைப் பற்றிய இராமாயணச் செய்தியும் (283) இடம் பெற்றுள்ளன.

நூலில் உள்ள வரலாற்றுச் செய்திகள்

இலக்கியமும், வரலாறும் என்று இணைகின்றதோ அன்றே உண்மையான, நிலைத்த ஆராய்ச்சி உருவாக்கப்பெறும். ஆனால் காண்பதற்கு நீலக்கடலும், நீள் வானமும் இணைந்து நிற்பது

---

10. சிவபிரான் வந்தியின் பொருட்டுப் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல் 'மண்சுமந்த திருவிளையாடல்' என்ற 30-வது ஆடலில்கூறப்பட்டுள்ளது.

'ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசு'' —திருவாசகம்.

''மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானை''—
—திருவெம்பாவை-8

''பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பித்தனே''
—திருக்கழுக்குன்றப் பதிகம்-2

''மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொற்றாளாகி—கல்லாடம்-41.

போலத் தோன்றும் பொய்க் காட்சியையே இவையும் நமக்கு நல்கு கின்றன. 'கானல் நீரோ' என ஐயுற்று அருகே சென்று கண்ட போது அமுதநீராக அது அமைந்தால் அடையும் மகிழ்ச்சியை இந்நூலினுள் பொதிந்து கிடக்கும் வரலாற்றுச் செய்திகள் அளித்து நிற்கின்றன.

இப்பணவிடு தூதின் வரலாற்றுச் செய்திகளைப்

1. பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகள்,

2. பொதுவான பிற வரலாற்றுச் செய்திகள் என இரண்டாகப் பிரிக்கலாம்.

பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகள்

இந்நூலினுள் பாட்டுடைத் தலைவனது,

1. பெயர் 2. இனம் 3. குலம் 4. சமயம் 5 வீரம் 6. கொடை 7. ஆட்சிமுறை 8. நாட்டெல்லை 9. உருவப் பொலிவு 10. உறவினர்கள் ஆகிய பல செய்திகள் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. பாட்டுடைத் தலைவனது வீரம், குலம், உருவப்பொலிவு போன்ற செய்திகள் திரும்பத்திரும்ப அழுத்தமாக உரைக்கப்பட்டுள்ளன.

பெயர்

1. "கருட துவசத்திலே விசையும்
வைத்த ரெகுநாதன்"[11] (294)

2. "முத்தார நறுந்தாரான் முத்துரகுநாதன்" (328)

3. "தேவை நதிபோலு முத்துரகுநாதன்" (329)

4. "முறையொழுகி நிற்குமெங்கள் முத்துரகுநாதன்" (350) என 4 இடங்களில் பாட்டுடைத் தலைவனதுபெயர் இன்னது என்பது குறிக்கப்பெற்றுள்ளன.

இனம்

"... வைத்தருளும் சேதுபதி"—(285)

என்பதனால் சேதுபதிகள் என்ற செம்பிநாட்டு மறவ, அரச வா சத்தைச் சேர்ந்தவர் என்பது புலனாகின்றது.

குலம்

"—மதியின்
மரபு மிரவி மரபு நதியின்
மரபுமொரு மரபாய் வந்தோன்"—(3 9-320)

---

11. எண்கள் கண்ணிகளைக் குறிக்கும்.

என்பதனால் 'சந்திர குலம், சூரிய குலம், கங்கை குலம் என்ற முக்குலமும் ஒருகுலமாக உதித்தவர்' என்பது தெரிகிறது.

சமயம்

"—நகராச
கன்னி யிடம்பாற் கடவுள் வலப்பாதஞ்
சென்னியின் வைத்தருஞ் சேதுபதி"—(284-285)
"—பேரறிஞர்
பாடலுக்கு நல்ல பதத்தாற் சிவனாடு
மாடலுக்குச் சிந்தையென்னு மம்பலத்தான்"—(306—307)

என்ற வரிகளான் இம்மன்னர் சைவசமயத்தைச் சார்ந்தவராக இருந்தார் என்பது தெரிகிறது.

சைவ சமயத்தைக் கைக் கொண்டவராக இருப்பினும் பிற சமயங்களை வெறுத்து ஒதுக்காது சமயப் பொதுமையை மேற் கொண்டிருந்தார் என்பதும் தெரியவருகிறது.

"கங்கைகுலத் தோனறிவுங் கர்த்தவிசு வாசமுமாந்
தங்கள் குல வித்தை தனைவளர்த்தோன்" (327)

என்பதனால் தன் நாட்டில் தன் காலத்தில் கிறித்தவ சமயத்துக் கும் நல்லாதரவு நல்கினார் என்பது தெரிகிறது.

இறுதிக் காலத்தில் கிறித்தவ சமயத்துக்குப் போதிய ஆதரவு அளிக்கவில்லை என்பதனையும் வரலாற்று ஏடுகள் எடுத்துரைக் கின்றன.

[18]கிறித்தவருக்கு நல்கிய கொடைகளை நிறுத்தியதோடல் லாமல் அவர்களுக்கு நன்கொடையாக நல்கிய நிலங்களை அந்தணர் பெயர்களுக்கு மாற்றி அளித்தார் என்பதும் தெரிகிறது.

---

12. "Bhavani Sankara (Rival of Vijaya Ragunatha) tried to win over the christians by pointing out the unsympathetic attitude of the Sethupathi towards the Christians"
— A History of the Maravas—P. 52.
Dr. S. Kadhirvel.

13. The Sethupathi confiscated lands belonging to the Catholic churches in Oriyur, Tiruvanai, and Puliyal in the year 1721"
—(List of Copper-plate grants of Ramnaad Samasthanam, Ramnad and Settlement Register, Ramanad, 1861.)

ஆக, இந்நூல் இயற்றப்பட்டது சேதுபதி கிறித்தவருக்கு ஆதரவு நல்கிய அவரது ஆட்சியின் முற்பகுதியில், அதாவது கி.பி. 1721-க்கு முன் என்பதும் தெளிவாகின்றது.

வீரம்

"—வீரஞ்
சுமந்து மனம்வருந்தத் தோண்மீது வெற்றி
யமர்ந்திருந்து போர்கேட் டடர்"—என்ற 298 ஆம் கண்ணி முதலாக "சிலைவளைக்கும் போர்வீர சிங்கம்" என்ற 301ஆம் கண்ணி வரையிலும் இவரது வீரமும், இவற்றுடன் தசாங்கங் களுள்ள புரவி, யானை பற்றிய கண்ணிகளாலும் (263—273)

"—ணெறியில்
வருத்து மவர்க்கு மதிப்பி லவர்க்கு
முருத்திர னொத்த வொருத்தன்"

என்ற 324ஆம் கண்ணியாலும் 'வீரமகனார் இவர்' என்பது புலனாகின்றது.

கொடை

இல்லை என வந்தோருக்கு இல்லை எனாது வழங்கும் வள்ளன்மை படைத்தவராகவும் இச்சேதுபதி திகழ்ந்தார் என்பது

"—னித்த
மனமகிழ்ந்து மிக்க வரிசை யுதவத்
தினமகிழ்ந்து வீறு செலுத்தும்"

என்ற 295 ஆம் கண்ணியாலும்,

வாரம், பொறையுடைமை வள்ளன்மை வேளாண்மை
பேரன்பும் பெற்ற பிரதானி"

என்ற 297 ஆம் கண்ணியாலும்,
இவரது கொடைத் தன்மை தெரிய வருகின்றது.

ஆட்சி முறை

நீதி நெறி தவறாமல் முறையான ஆட்சி செய்து வந்தார் என்பது "—யுகத்தைக்
கடர்து மனுவைக் கடவாமற் செங்கோல்
படர்ந்துவருந் தேவைப் பதியான்" — (292)

என்பதாலும்,

"பொய்யைத் துரத்திப் புவியில்செங் கோல்செலுத்த
மெய்யைத் தலைநிறுத்தும் வேளாளன்" — (237)

என்பதாலும் தெளிவாகின்றது.

பகைவர்களை வென்று அடக்கி மன்னர் மன்னராக அன்னாரிடம் கப்பம் பெற்று நல்லாட்சி நடத்தினார் என்பது (329—333) ஆம் கண்ணிகளால் தெரிய வருகின்றது.

தன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைப் பல [14]பாளையங்களாகப் பிரித்து அப்பாளையக்காரர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகையைக் கப்பமாகப் பெற்றுச் சிறப்பாக நிர்வாகம் செய்தார் என்பதை வரலாற்று நூற்களும் வலியுறுத்துகின்றன. இதனையே புலவர்,

"—அன்போடு
கப்பமிடும் ஒன்னாருங் கப்பமிட்டுத் தன் சீமைக்
கொப்பமிடக் காத்திருக்கு மொன்னாரும்" — (332)

எனக் குறிப்பிடுகின்றார்.

நாட்டெல்லை

"—குமரி
வடக்கு வடபாலிற் றெற்குங் குணபாற்
குடங்குங் குடபாற் குணக்குங்—கிடக்குஞ்
செகத்தைப் புரந்து செலுத்தி — "(289-291)

என மரபுப்படி தமிழக எல்லை முழுக்கக் கூறியுள்ளதால் வரலாற்று ரீதியாக இவரது நாட்டுப் பரப்பை இந்நூல் மூலம் நாம் அறிய இயலவில்லை.

அகில லோகத்துக்கும் அதிபர் என வரும்,

" — இங்கிரண்டு
மண்டலங்க ளும்புயங்க மண்டலங்க ளுந்தியங்கு
விண்டலங்க ளுஞ்சுமந்து மென்றெழும்பு — கொண்ட
கொண்டல்"

என்ற 326ஆம் கண்ணியாலும் நாட்டெல்லையை நாம் தெரிந்து கொள்ள இயலவில்லை.

---

14. "He (Vijaya Ragunatha) divided the Kingdom into Twenty-two-military divisions (Palayams) Placing each under a Chief (Pālayagār) who rendered service instead of paying tribute"

— A History of the Maravas Page-52.

"He divided the Ramnad Kingdom into eight revenue districts and 72 military divisions. He appointed feudal Chieftains over the military divisions.

இவருக்கு முன்னர் ஆண்ட கிழவன் சேதுபதியின் ஆட்சிக் குட்பட்டிருந்த இராமநாதபுரத்து மாவட்டத்தைச் சார்ந்த அனைத்துப் பகுதிகளையும் இவரும் ஆண்டார் என வரலாற்றறிஞர் கருத்துக்களையே நாமும் ஏற்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

ஏனெனில் இவர் ஆட்சிக் காலத்தில் எந்த ஒரு சிறுபகுதியையும் பகைவரிடம் இழந்ததாக உள்ள செய்தியினை வரலாற்று நூற்களில் காண முடியவில்லை.

உருவப் பொலிவு

இந்நூலுள் சேதுபதியின் தோற்றப் பொலிவு பல இடங்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

மன்மதன், முருகன், சுடரோன் — (306, 322, 333) ஆகியோருடன் உவமிக்கப் பெற்றிருப்பதுடன்,

இவர்முக மண்டலம் கண்டு 'தூயமதியும் தேயும்' என்றும்(317)
மேனிச் சுடரொளி கண்டு ஆதித்தன் கடலுள் அமிழ்ந்தான் எனவும் (316)

கூறும் கூற்றுக்கள் மிகைப்படுத்தப்பட்டவை, கவிநயத்துக்காக உரைக்கப்பட்டவை எனினும், நன்னிறமும், உருவ அழகும், கவர்ச்சியான தோற்றமும் கொண்டவராக இச்சேதுபதிகள் இருந்திருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றன.

உறவினர்கள்

283ஆம் கண்ணியிலும், 309 முதல் 315வரை உள்ள கண்ணிகளிலும் சேதுபதியின் உறவினர்கள் யாவர் என்ற செய்திகள், அவர்களின் பெயர்களுடன் தெளிவாக உரைக்கப் பெற்றுள்ளன.

1. 'தெய்வ கன்னி' என்பவர் இவரது தந்தை என்ற செய்தி 284, 309 ஆகிய இரு கண்ணிகளில் சுட்டப்பட்டுள்ளது.
2. திருஞானபூபாலன் என்பவரது தந்தைக்கு இவர் மாமன். —(310)
3. திருவுடையான், பூவிச்கினியான் என்ற இருவரும் இவரது சிற்றப்பாக்கள். (311)
4. தெய்வ கன்னிப் பூபாலன் என்பவருக்கு இவர் மைத்துனர். (312)
5. அம்பலவாணன் என்பவர் இவருக்கு மைத்துனன்.

6. சிவபுரனாதன் என்பவர் இவரது தம்பி.

7. தமிழ் முத்து, தெய்வகன்னி என்னும் இருவர் இவரது மருமகன்கள்

என்ற பல செய்திகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

இவர்களுள் தெய்வகன்னி, திருஞானபூபாலன், அம்பல வாணன் ஆகியோர் பற்றிப் [15]பிற இலக்கிய, வரலாற்றுச்சான்று களும் கிடைத்துள்ளன.

மருமகன் தெய்வகன்னி

தெய்வ கன்னி என்ற ஒருவர் இவரது மருமகனாகவும், அமைச்சராகவும் இருந்தார் என்பதை இலக்கியம், வரலாறு ஆகிய இருவகை நூற்களும் எடுத்தியம்புகின்றன.

இந்நூலாசிரியரான பலபட்டடைச் சொக்கநாதப் புலவரே இத் தெய்வகன்னி மீது விஞ்சைக் கோவை என்ற நூல் ஒன்றும் இயற்றியுள்ளார்.

பிற வரலாற்றுச் செய்திகள்

இந்நூலுள் உள்ள பிற வரலாற்றுச் செய்திகளை,

1. ஊர்ப் பெயர்கள்

2 ஆட்சியாளர் பெயர்கள், என இரண்டாகப் பிரித்துக் காணலாம்.

ஊர்ப் பெயர்கள்

[16] 83, 88ஆம் கண்ணிகளிலும், [17] 91 முதல் 94 வரை உள்ள கண்ணிகளிலும், மற்றும் [18] 242, [19] 260, [20] 291, [21] 292, [22] 312

15. விளக்கக் குறிப்புக்களைப் பாட்டுடைத் தலைவன் வரலாற்றில் பார்க்கலாம்.
16. பவளக்காடு, திம்மி, அரியலூர், கூடலூர், இக்கேரி, காவேரிப்பாக்கம், சன்னகிரி, சனனகிரி சமுக்கை, சென்னபட்டினம்.
17. கொங்கு, மதுரை, கொழும்பு, திருவாங்கோடு, திருநெல் வேலி, தஞ்சாவூர், திருவையாறு, செஞ்சி, உடையார் பாளையம், உழுநதூர், செய்யாறு, அரியலூர், தென்காசி, தூத்துக்குடி, துறையூர், கண்டிக்கோட்டை, தாராசுரம், பந்தளம்.
18. திருவேடகம்
19. விஞ்சை
20. பசும்பொன்
21. தேவை
22. தேவூர்

ஆகிய கண்ணிகளிலும் ஆக மொத்தம் 11 கண்ணிகளில் தமிழக ஊர்ப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் உள்ள பெரும்பாலான ஊர்கள் இன்றும் உள்ளவையே! சில ஊர்களின் இலக்கியப் பெயர்கள் இந்நூலுள் சுட்டப்பட்டுள்ளன.

சான்று

[23]நெட்டூர் என்பது விஞ்சை என்றும்,

இராமேஸ்வரம் என்பது தேவை என்றும் உள்ளதைக் குறிப்பிடலாம். கூடலூர்[24] என இரு ஊர்கள் உள்ளன.

கூடலூர்

விஷ்ணு ஸ்தலம். இன்று பெருமாள் கோயில் என அழைக்கப்படுகிறது. பாபநாசம் வட்டத்தில் உள்ளது.

மற்றொரு கூடலூர் சோழவள நாட்டில் கெடில நதி, உப்பனாறு கலக்கும் இடத்தில் உள்ளது.

[25]இக்கேரி

மைசூர் நாட்டின் மேல் பகுதியில் இருந்த நாடாகும்.

இக்கேரி நாயக்கர்கள் என்பவர்கள் கி. பி. 15ஆம் நூற்றாண்டு முதல் [26]17ஆம் நூற்றாண்டு வரை இதனை ஆண்டு வந்தனர் எனத் தெரிகிறது. முதல் நாயக்க மன்னன் முதல் வேங்கடப்பன் (1589-1629) ஆவான்.

காவேரிப்பாக்கம்

பண்டு ஒவ்வொரு கடற்கரை நகரமும் இருபாகங்களை உடையதாயிருந்தது. அவற்றுள் ஒருபாகம் ஊர் என்றும், மறு பாகம் பட்டினம் என்றும் அழைக்கப்பட்டன. பூம்புகார் நகரத்தின் ஒரு பாகம் மருவூர்ப் பாக்கம், என்றும், மற்றொரு பாகம் பட்டினப் பாக்கம் என்றும் பெயர் பெற்றது. இரண்டும் சேர்ந்தது காவேரிப் பாக்கம், காவிரிப்பூம்பட்டினம் என அழைக்கப்பட்டது. இதனைச் சிலம்பு, இந்திரவிழவூரெடுத்த காதை தெளிவாகக் குறிப்பிடும்.

---

23. சேதுநாடும், தமிழும்.
24, 25. 'ஊரும், பேரும்' — ரா. பி. சேதுப்பிள்ளை.
26. கொங்கு நாடு.
27. கி. பி. 1763-இல் மைசூர் ஹைதர்அலி பெத்தனூரைக் கைப்பற்றி ஆண்டதாகத் தெரிகிறது.

திம்மி, சன்னகிரி, சமுக்கை, [28]அதிச்சம் (கிச்சம்) என எந்த ஊர்களைக் குறிப்பிடுகிறார் எனத் தெரியவில்லை. பட்சிசனனகிரி என்பது திருக்கழுக்குன்றம் ஆகலாம். கண்டிக்கோட்டை எனஇவர் குறிப்பிடுவது இலங்கையின் கண்டி ஆகலாம். ‘கந்தருவ கோட்டை’ போன்ற தமிழ்நாட்டு ஊராகவும் இருக்கலாம்.

திருவேடகம், திருவையாறு, செய்யாறு, தேவூர், [29]சென்ன பட்டினம், [30]உடையார்பாளையம், [31]தாராசுரம், [32]துறையூர் ஆகிய ஊர்களின் விளக்கங்களை ஊரும், பேரும் என்ற நூலில் காணலாம்.

இவை தவிர கொங்குநாடு, மதுரை இலங்கையின் தலை நகரான கொழும்பு, திருநெல்வேலி, தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய ஊர்களின் செய்திகள் அறிஞர் பரவலாக அறிந்ததே!

ஆட்சியாளர்களின் பெயர்கள்

[33] 83 முதல் 90 ஆம் கண்ணி வரையில் பாளையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த சில சிறுசிறு பகுதிகளை ஆட்சி செய்தவர் களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

சேருகான் என்ற ஷேர்காண் (முகம்மதியன்) தென்னாடு பங்கிட்டுத் தந்ததாக ஒரு செய்தி குறிக்கப்படுகிறது.

ராமப்பயன் என்ற இருவர் குறிக்கப்படுகின்றனர். ஒரே பெயர் கொண்ட இவர்கள் வெவ்வேறு பகுதிகளை ஆட்சி செய்து வந்திருக்கின்றனர்.

“நம்பேரு முள்ளுடைமை நாக்கொண் டெடுத்துருக்கு
மெய்பெருமான் தொண்டமான்” — (88)

என்பதால் அவர் விஜயரகுநாதத் தொண்டமானாக இருக்கலாம் என்பது தெரிய வருகின்றது.

‘அட்டாலைச் செட்டி’ என்பவரது பெயரமைதி நோக்க, அவர் எட்டு பெரும் ஆலைகளுக்கு உரிமையாளராக இருந்திருக்கக் கூடும் என உய்த்துணரலாம்.

---

28. இராமலிங்கேசர் பணவிடு தூது அதிச்சம் எனாது கிச்சம் என்கிறது — கண்ணி எண் 57.

29, 30, 31, 32 - ஊரும், பேரும் - பக்கம் 53, 78, 263, 230 பாக்கள்.

33. திம்மானாய்க்கன், சேருகான், பரதஞ் செலராயன், வெங் கிட்டராயன், ராமப்பயன், ராமச்சந்திரயன், அஞ்சயன் ராமப்பய்யன், சலபன், சாமந்தன், தொண்டமான், ராசி புத்தன், தம்பிசெட்டி, அட்டாலைச்செட்டி, அக்கா ரெட்டி, அனந்தாள்வான், தட்டாரி நாதன், சோழியன், பூச்சயன், தும்முசுகாமயன்.

[34]"மல்லையூர் தில்லை நாயக்கப் பண்டாரத்தின் குமாரன் சிற்றம்பலம் பண்டாரத்துக்கு வேழ்மாமலையான் ஸ்ரீ திருமலைப் பூச்சய நாயக்கர் குமாரரான வீரப்ப பூச்சய நாயக்கர் இரண்டு ஊர் களைச் சர்வமானியமாகக் கொடுத்து"—என கி. பி. 1647-இல் எழுதப்பட்ட ஓர் ஓலைப்பட்டயத்தின் மூலம் இந்நாயக்க வம்சவழி வந்தவரே இங்கு குறிக்கப் பெறும் பூச்சயன் என்பவர் என அறியலாம்.

'சின்ன மகிபன் குளுவ நாடகம்' என்ற நூலிலும், 'துரவள ரிந்திரன் வீரப்பூச்சய சாமி யெங்கோன்' எனப் பூச்சயன் என்ற ஒருவர் குறிக்கப்படுகிறார். இந்நூலின் காலம் கி.பி-1780—1790க்கு இடைப்பட்டதாகும். எனவே இப்பணவிடு தூதில் குறிப் பிடப் பெறும் பூச்சயன் இவருக்கு முந்தையவர் என உணரலாம்.

திம்மானாய்க்கன், பரதஞ்செலராயன், வெங்கிட்டராயன், ராமப்பயன், அஞ்சயன், ராமச்சந்திரயன், அஞ்சயன், சோழியன் தும்முசு காமயன் என்ற பெயரமைதிகளை நோக்கும் பொழுது, இவர்கள் நாயக்க வமிசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பது தெரிகிறது. விஜயநகர அழிவுக்குப் பின், மதுரை, தஞ்சை நாயக்கர்களின் செல்வாக்கு குறைந்து, மிகச்சிறு பகுதி களை அவர்கள் ஆண்டு வர, பல நாயக்க வமிசத்தார் நாலா பக்கமும் சிதறிச்சிறுசிறு பாளையப்பட்டுக்களை ஆளும் பாளையக் காரர்களாக ஆயினர் என்பது தெரிய வருகின்றது.

புலவரின் பாநலம்

பணவிடு தூதின் யாப்பு

தூது இலக்கியம் கலி வெண்பாட்டால் அமைதல் வேண்டும் என்பதற்கு ஏற்ப இப்பணவிடு தூதினையும் புலவர் கலிவெண் பாவினாலேயே யாத்துள்ளார், எவ்விடத்திலும் கலிவெண் பாட்டிற்குரிய ஓசையோ, தளையோ, தட்டாமல் சிதையாமல் அமைக்கப்பட்டுள்ள சிறப்பையும் காண்கிறோம்.

---

34. ஓலை நாயகம் "பிள்ளைத் தமிழுக்குப் பட்டயம்"— கல்வெட்டு, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையின் காலாண்டு இதழ் பக்கம் 21—26 ஆனந்த ஆண்டு, ஆடித் திங்கள்.

பணவிடு தூதிலக்கியத்தின் பண்பு

தூது நூலின் அமைப்பு எவ்வாறு இருக்குமோ அதன்படியே இந்நூலினையும் அமைந்துள்ளார். இந்நூலின் அமைப்பு முறையை முன்னரே கண்டோம்.

தலைவன் தசாங்கம்[35] கூறுவதுடன், தூதுப் பொருளான பணத்திற்கும் தசாங்கம் கூறி அமைத்துள்ள சிறப்புக்களையும் கண்டோம்.

வருணனைகள்

இந்நூலின்கண் அமைந்துள்ள வருணனைகளை,

1. செய்தி விளக்க வருணனை.
2. நாட்டு, நகர வருணனை.
3. இயற்கை வருணனை.
4. பண்பு நலன் வருணனை.

என நான்காகப் பகுக்கலாம்.

செய்தி விளக்க வருணனை

பணத்தின் செயல்பாடுகள்.	(67—77)
தர்க்க வாதிகள்.	(110—122)
சூதாடுபவர்கள்.	(123—132)
பொய்ப் புலவர்கள்.	(133—135)

மற்றும் விலைமாதர்கள், கழைக்கூத்தாடிகள், மருத்துவர்கள் (157–201) ஆகிய கண்ணிகளுள் செய்திகளை விளக்கமாகக் கூற வருணனை முறையைக் கையாண்டிருக்கின்றார்.

நாட்டு, நகர வருணனை

பாட்டுடைத் தலைவனது தசாங்கம் கூறும் பொழுது, அவன் பாண்டி நாட்டிற்குரியான் எனக்கூறும் 240 முதல் 252 வரை உள்ள கண்ணிகளில் நாட்டு வளமும், 'கிஞ்சைப்பதிக்குரியான்' எனக் கூறும் பொழுது 254 முதல் 260 வரை உள்ள கண்ணிகளில் நகர் வளமும் உரைக்கப்பட்டுள்ளன. இவை வருணனை அமைப்பில் அமைந்துள்ளமையைக் காண்கின்றோம்.

---

35. வேளாளர் மரபு, பொதியம், பொருப்பு, வேகவதி ஆறு, பாண்டி நாடு கிஞ்சைப்பதி, குவளைப் போது, கொலைக் களிறு, மேழிச் சின்னம் மும்முரசு, ஆருங் கடவாத ஆணை எனப் பத்தங்கம் கூறப் பெற்றுள்ளது.

இயற்கை வருணனைகள்

நாட்டு, நகர வளம் கூறும் பகுதிகளிலேயே இயற்கைச் செழிப்பு பற்றிச் செப்பும் பொழுது இயற்கை வருணனைகள் அமைந்துள்ளதைக் காண்கிறோம். (240—260)

பண்பு நலன் வருணனை

பாட்டுடைத் தலைவனது பண்புகள் பற்றிக் கூறும் பொழுதும், (285—335) பணத்தினை அரசனாக உருவகப் படுத்தியும், (95—109) பணத்திற்கு உறவு முறைகள் கற்பித்தும் (34—45) கூறும் இடங்களில் பண்பு நலன் வருணனைகள் இடம் பெற்றுள்ளன.

உவமைகள் உருவகங்கள்

உவமைகள் மிக எளிமையானவைகளாக உள்ளன. அதே சமயம் எளிதில் செய்திகளைத் தெளிவாக அறிந்து கொள்ளப் பயன்படுவதாகவும் உள்ளன.

1. காயிலாத் தீங்கனிபோல்' (42)
2. குடித்தவுடன் தித்திக்கும் நஞ்சுபோல் (63)
3. கத்திக்கு உறை போல (63—64)
4. கனலின் மிதித்தாற்போல் (177)
5. மாட்டையடித்தாற்போல் (178)
6. மரணத்தை உப்பாய் மதித்து (182)
7. வான்கொத்தி போல்பறந்து, மான் குட்டிபோல் தாண்டி, மீன் கொத்திபோல் ஆடி(183)
8. பூட்டிய சக்கரங்கள் போல் விரைந்து சுற்றி (184)
9. எழுந்த கழூர்த்திபோல் (209)
10. கழுவிவிட்டாற் போல் நிறங்காணார் (214)
11. வேழத்தை வாழைத் தடைபோல் மருப்பொடித்த தந்தி (234)
12. ரோமா வலியென்ன (338)
13. புன்னை யரும்பொன்று பூத்ததென்ன (342)
14. கட்டும் பவளக் கரையென்ன (343)

உருவகங்கள்

பணத்தை உயர்திணையாகக் கொண்டு வழக்காளி, சாத்திரி, பழிகாரன், குறும்பன், தூர்த்தன், கூத்தாடி, இடும்பன், திருடன்,

வம்பன், கள்ளன் எனக்கூறும் (67—76) இடங்களிலும், பணத்திற்கு உறவு முறைகள் கற்பித்துக் கூறும் இடங்களிலும் (35—40), வேந்தன் (41) மந்திரி (42), தளகர்த்தன், (43)எனும் இடங்களிலும், பாட்டுடைத் தலைவனது வீரத்தைச் சிறப்பித்து,

'விடையே முடர்த்த விடை'
'மருப் பொடித்த தந்தி' (234)

முருகு முருகன்— (322) எனக் கூறும் இடங்களிலும் உருவக அமைப்புக்களைக் காண்கின்றோம்.

பழமொழிகள்

112ஆம் கண்ணி 'பணம் உள்ள இடத்தில் குணம் இராது' என்ற பழமொழியையும், 182 ஆம் கண்ணி 'கரணந் தப்பின் மரணம்' என்ற பழமொழியையும், 358 ஆம் கண்ணியில் 'கரும்பு தின்னக்கூலி வேண்டுமா?' என்ற பழமொழியையும் பார்க்கின்றோம்.

மொழி நடை

1. இரட்டுற மொழிதல்.
2. பேச்சு வழக்குச் சொற்கள்.
3. வட சொல்லாட்சிகள்.
4. பிறமொழிச் சொற்கள்.

என்பவை அடங்கும்.

இரட்டுற மொழிதல்

தூது நூலுக்கே உரிய உயிர் நாடி போல் உள்ள இரட்டுற மொழிதலும் சொற்சிலம்பங்களும் இந்நூலுள்ளும் அமைந்து அணி சேர்த்துள்ளன.

18, 19, 22, 26, 102-105 ஆகிய கண்ணிகளில் சிலேடை நயங்களின் உச்சத்தைக் காண முடிகின்றது.

பேச்சு வழக்குச் சொற்கள்

தெட்டித்திரிதல் (102), ஆப்பிடுதல் (123) சண்டித்தனம் (150) திவசம் (174 கோப்பெல்லாம் (180) லச்சை, லாகெடுத்து (181) ஏவிச்சு (217) சாதினை (224) பச்சென்ன (255) விசுவாசம் (327) என்ற இது போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.

வடசொல்லாட்சி

இந்நூலினுள் பல வடசொற்களையும், தமிழ் வார்த்தைகளில் இடம் பெற்றுள்ள சில வடஎழுத்துக்களையும் காண முடிகின்றது.

சொன்னம் (சொர்ணம்) (116), செனிக்க (118), உபாயம்—(190) பஞ்சகதி—(265), நிமலன், சகள, நிற்கள—(27o), செயத்தம்பம்—(291), துவசம்—(294), அபயன், அனபாயன்—(293), சோதி—(316) விசுவாசம்—(327), தாரை—(348)

வஸ்த்து (55), பொக்கிஷம் (106), க்ஷயம் (193) சேஷம் (197) பாஷாணம் (203) என இவ்வாறு வடவெழுத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

பிறமொழிச் சொற்கள்

துரைத்தனம் (38) ரவிக்கை (156) போன்ற பிறமொழிச் சொற்களும் உள்ளன.

அரசியல், சமுதாய பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள்

எந்த இலக்கியமாக இருந்தாலும் அவ்வக் காலத்து மக்களின் வாழ்க்கையை அவை படம் பிடிக்காமல் போவது இல்லை.

அரசியல்

அரசனே அனைத்து அரசியல் நிர்வாகத்துக்கும் தலைமை அதிகாரியாக இருந்தான். இவனுக்கு ஆட்சி நடத்துவதில் துணைபுரிய அமைச்சர், தளபதிகள், பிரதானிமார்கள் இருந்தனர்.[36] பொதுவாக அவர்கள் மன்னனது உறவினர்களாக இருந்தனர்.[37] அரசன் நாள்தோறும் அரசவைக் கொலுவில் வீற்றிருத்தல் உண்டு.[38] நாட்டு எல்லைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மன்னது ஆணையே செல்லுவதாக இருந்தது. நாட்டுப் பரப்பு பெருமளவில் இருக்கும் பொழுது பல சிறு பகுதி களாக அவற்றைப் பிரித்து தன் ஆணைக்குட்பட்டவர்களை அங்கு நியமித்து [39] அவர்களிடமிருந்து கப்பம் வசூல் செய்தல் உண்டு என்பதும் தெரிகிறது.

சமூகம்

நல்லவை, கெட்டவை என இரண்டும் சமுதாயத்தில் இருந் திருக்கின்றது. பணத்தின் முக்கியத்துவம் பற்றி இந்நூல் குறிப் பிடுகின்றது. ஆதலால் பணம் சேர்ப்பதற்காகத் தீயார் என்னென்ன முறைகளை எல்லாம் மேற்கொள்கின்றனர்! பணம்

36. 311—315 கண்ணி வரை.
37. 350ஆம் கண்ணி வரை.
38. 304 ஆம் கண்ணி.
39. 332 ஆம் கண்ணி.

மக்களை எப்படிப் பாடாய்ப்பாடுபடுத்துகின்றது என்பனவற்றைப் புலவர் கூறவேண்டியுள்ளதால் தீச்சமுதாயம் பற்றிய ஒரு பக்கப் பார்வை இந்நூலுள் மிகுதியாக உள்ளதைப் பார்க்க முடிகின்றது.

பண்பாடு பழக்க வழக்கங்கள்

[40]தர்க்கவாதிகளுள் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கம் தரல் உண்டு, [41]மருத்துவர்கள் தக்க மருந்து தராது ஏமாற்றல் உண்டு [42]பேயோட்டுபவர்கள் பொய் மந்திரத்தைச் சாம்பலில் எழுதிக் காட்டிப் பணம் பெறல் உண்டு. பேய் பிடித்தாரைப் 'பேர் சொல்' என அடித்துப் பேயைத் துரத்தல் உண்டு. [43]ஆடுபுலி ஆட்டம். சூதாட்டம் எனப் பணம் வைத்து ஆடும் பல விளையாட்டுக்களை மக்கள் ஆடி இருந்திருக்கின்றனர், பெண்கள் மூக்கில் [44]மூக்குத்தி என்ற ஒரு அணியும், காலில் 'பாடகம்' எனும் அணியும் அணிந்திருக்கின்றனர். [45]அரசவையில் மன்னன் கொலுவிருக்கும் பொழுது விறலியர் தம் ஆடல், பாடல், வன்மை காட்டிப் பரிசு பெறல் உண்டு. [46] அரச ஆணைகள், நிலப்பத்திரங்கள், ஓலையில். எழுதப்பட்டன.

[47]கழைக் கூத்தாடிகள் பலவித வித்தைகள் காட்டி மக்களை மகிழ்வித்துத் தாங்களும் வாழ்ந்து வந்தனர்.

[48]டெண்டிருள் விலை மகளிர் குலம் என ஒன்று இருந்தது. பணமற்றவனைப் பல வழிகளில் பொய் கூறித்திருப்பி அனுப்புவர் பணம் பெறல் ஒன்றையே குறியாகக் கொண்டிருந்தனர். [49]செம்பைத் தங்கமாக மாற்றும் இரசவாதிகள் இருந்தனர். [50]பொய்ப் புலவர்கள் போல இவர்களுள்ளும் ஏமாற்றுக்காரர்கள் இருந்தனர்.

இது போன்று இன்னும் பல செய்திகள் இந்நூலுள் பொதிந்து கிடக்கின்றன.

---

40. 1?3 ஆம் கண்ணி.
41. 191—194 ஆம் கண்ணி.
42. 221—225 ஆம் கண்ணி
43. 127—13?வரையுள்ள கண்ணிகள்.
44. 340—342வரையுள்ள கண்ணிகள்.
45. 350—353வரையுள்ள கண்ணிகள்.
46. 304—137 வரையுள்ள கண்ணிகள்.
47. 175—185 வரையுள்ள கண்ணிகள்.
48. 158—175 வரையுள்ள கண்ணிகள்.
49. 20?—214 வரையுள்ள கண்ணிகள்.
50. 135—137வரையுள்ள கண்ணிகள்.

முத்து விசய ரகுநாத சேதுபதி பேரிற்
சொக்கநாதக் கவிராயர் பாடிய

பணவிடு தூது

கடவுள் வாழ்த்து

முன்னுபுகழ் விஞ்சைநகர் முத்துரெகு நாதன்மேற்
சொன்ன பணவிடு தூதுக்கே - யுன்னும்
புரக்கும்பக் கம்பக்கம் போக்காது தாக்கைங்
கரக்கும்பக் கம்பக் களிறு.

மூவா முதல்வர் மூவர்க்கும் முன்னது 1-10

1. பூமாது தன்னுருவம் பொன்னுருவ மாக்குவித்து
மாமா தெனப்பேர் வழங்குவித்துத் - தேமாலை

2. கூர்க்குந் திருமார்பக் கொண்டலுக்குப் பண்டளித்து
காக்குந் தொழிலவர்க்குக் கற்பித்தாய் - நோக்குமவன்

3. தாங்கிய வுந்தித் தடத்திலே தன்மயமாய்
ஓங்கியபொற் றாமரையொன் றுண்டாக்கி - ஆங்கே

4. புடைக்குந் திசைமுகத்துப் புத்தேளைக் காட்டிப்
படைக்குந் தொழிலைப் படைத்தாய் - விடைக்குன்றம்

உன்னும்-நினைக்கும்புரக்கும்-காக்கும்;பக்கம்-பக்ஷம் (அன்பு)

1. பூமாது - திருமகள்; தேமாலை - தேன் துளிர்க்கும் மாலை.

2. திருமார்பக்கொண்டல் - இலக்குமியை மார்பில்கொண்ட மேகம் போன்ற நிறத்தை உடைய திருமால்.

3. உந்தி - கொப்பூழ்.

4. திசை முகத்துப் புத்தேள் - பிரம்மதேவன்.

5. ஏந்து முருத்திரனா மெந்தைக்கு வெள்ளிவெற்பும்
போந்து புரமெரிக்கும் பொற்சிலையும் - ஈந்து

6. செழிக்கும் புவனமெல்லாஞ் சென்றோர் நொடியில்
அழிக்குந் தொழிலை யளித்தாய் - வழிக்கொண்டு

7. காத்துப் படைத்தழிக்கக் கைவாரா தாங்கவர்நின்று
ஏத்தும் பொழுதி லெதிர்வந்து - வாய்த்தநிதி

8. ஒன்றா லுலகமெங்கு முண்டாவ தாய்நிலைத்து
நின்றா லுலகமெங்கு நிற்பதாய்ச் - சென்று

9. மறைந்தால் மறைந்து விடுவதா யெங்கும்
நிறைந்தா யுனக்கு நிகரார் - பிறந்திறந்து

10. போவாரி னானொருத்தன் பொன்னரசே நின்கீர்த்தி
நாவா லுரைத்தல் நசையன்றோ - காவின்கீழ்

பொற்பணத்தின் நற்கீர்த்தி 11-25

11. வாழ்வானைப் பொன்னுலகில் வைத்திடாய் நீயென்றாற்
சூழ்வா னவனோ தமியனோ - சூழ்வானில்

12. வெள்ளியும் பொன்னுமின்றி வெண்மதியுஞ் செங்கதிருந்
தெள்ளிய மேருவலஞ் செய்யுமோ - பள்ளிகொள்ளப்

13. பாம்பணை யின்றியொரு பாயிலையோ மாயவனார்
தாம்பணம் வேண்டா தவரானார் - தேம்பப்

14. பெருக்குமணி மார்பனுக்குப் பேராசை யூட்டும்
உருக்கு மணியிரும்பி லுண்டோ - செருக்கினால்

---

5. வெள்ளி வெற்பு - திருக்கைலாயமலை; புரம் - திரிபுரம்;
பொற்சிலை - மேருமலை.

6. புவனம் - உலகம்.

7. வாய்த்தநிதி - சங்கநிதி, பதுமநிதி.

10. நசை - விருப்பம்.
கா - காடு, வனம்.

11. வைத்திடாய் - வைத்திடுவாய்.

13. பாம்பணை - பாம்பாகிய படுக்கை.
மாயவனார் - திருமால்.
பணம் - செல்வம்.

14. பெருக்குமணிமார்பன் - 'சியமந்தகம்' எனும் மணியை
மார்பில் கொண்ட திருமால்.
உருக்குமணி - உருக்குமணிதேவி.

15. மாவைவெட்டி விண்ணரசை வைத்தகும ரேசனுக்குத்
தேவிமா தங்கமோ செம்பாமோ - பூவணத்தில்

16. மின்னனையாள் பாகனைத்தன் வீட்டிலழைப்
பித்தவளும்
பொன்னனையா ளோவீயம் போல்வாளோ -முன்னோர்

17. தினத்திலே சுந்தரனார் செய்தசிவ பூசை
தனத்திலோ பித்தளையிற் றானோ - கனத்தநர

18. சிங்கத் துடனெதிர்ந்தோன் றேக மிரணியமோ
சங்கித்தாற் றாழுந்தார்த் தானோ - பைங்கிளியும்

19. வெல்லு முரையால் வியப்பிக்கச் சொன்னத்தைச்
சொல்லுமோ வெண்கலத்தைச் சொல்லுமோ - நல்லோர்

20. சிவனாதி யோரையெல்லாஞ் செம்பொன்னே யென்பது
உவமையிலே மேலென் றுணர்ந்தோ - அவமா

21. முகத்துதியென் றஞ்சினேன் முன்னவனே தில்லை
அகத்துதியாய் சிற்பையும் மாகாய் - மிகத்துதியோ

22. கற்றோர் புகழ்கடப்பங் காட்டிலும்நெல் வேலியினும்
பொற்றா மரையாய்ப் பொலிந்திராய் - வெற்றிமதில்

---

15. மா - மாமரம்; பூவணம் - திருப்பூவணம் (தேவாரம் பெற்ற பாண்டி நாட்டுச் சிவஸ்தலங்கள் பதினான்கனுள் ஒன்று).

16. மின்னனையாள் பாகன்-அர்த்த நாரீசுவரரான சிவ பெருமான்.
பொன்னனையாள் - திருப்பூவணத்தில் வதிந்த ஒரு தேவரடியாள்.
ஈயம் - உலோக வகையுள் ஒன்று.

17. சுந்தரனார் - சுந்தரமூர்த்தி நாயனார்; தனம் - பொருள்.

18. சிங்கம் - நரசிங்கமூர்த்தி; இரணியம் - பொன்.

19. சொன்னம் - சொர்ணம் (தங்கம்); சொன்னத்தை- சொன்னதை.

20. சிற்சபை - தில்லையிலுள்ள கனகசபை முதலாய ஐவகைச் சபையுள் ஒன்று.

22. கற்றோர் புகழ் கடப்பங்காடு - சங்கம் வளர்த்த கடம்ப வனமாகிய மதுரை.
நெல்வேலி - திருநெல்வேலி; பொற்றாமரை - இரு தீர்த்தங்களின் பெயர், (பொன், தாமரை).
பொலிந்திராய் - பொலிந்திருப்பாய்.

23. வானோர்தங் கச்சியிலே மாமையா கத்தோன்றா
யானாற் கதியை யடைவாரார் - மேனாள்

24. உடைப்படைத்த பொன்னிதனக் குன்பெ யரல்லாமல்
அடைப்படைத்தாற் கண்டுகொள லாமே- தடைப்படாக்

25. கொற்கை வழுதி குறைத்தகையே மிக்கதெனிற்
பொற்கை வளர்தல் புகழாமோ – நற்குணங்கள்

பெயரால் விழைந்த பேறு 26-34

26. ஒத்த வயித்தியருக்குத் தாது வே! புலவர்க்
கத்தமே வேளம்பர்(க்) காடகமே - கத்துகடல்

27. ஓடுவரக் கீழ்மையுள்ள மோரு வழிபோய்
வீடுவிழை வோர்க்கும் வெறுக்கையே - வாடி

28. இரக்கின்றவர்க் கெல்லா யீகையே நின்னைக்
கரக்கின்ற வர்க்குவேங் கைய்யே - புரக்கின்றோர்

29. தாக்குமுடல் நீசாதத் ரூபமுநீ யாகையாற்
காக்கப் படுவதுநீ காப்போனீ - நீக்கமற

30. வீட்டியகல் யாணமுநீ யேமமுநீ யென்பதனாற்
காட்டிய காரணனீ காரியநீ - வாட்டமறக்

---

23. கச்சி-காஞ்சி மாநகரம்; மாமை-மாமரம், பொன். காஞ்சித்தலவிருட்சம் மாமரம். கோயில்கொண்டுள்ள பிரான் ஏகாம்பரேசுவரர் ஆகும்.

24. பொன்னி - வைகை.

25. கொற்கை வழுதி-பொற்கைப்பாண்டியன் (கீரந்தை).

26. தாது — நாடி, பொன். அத்தம் - அர்த்தம் (சொற்பொருள்), அத்தம் எனும் பொன்னஞ்சிலம்பு.
வேளம்பர்-கழைக் கூத்தாடி, நகை வேழம்பர்.
ஆடகம்-ஆடுகின்ற இடம், ஒரு பொன்னின் வகை.

27. வெறுக்கை--வெறுப்பு, செல்வம்.

28. ஈகை-கொடை, பொன்; வேங்கை–புலி, பொன்.

29. சாதத்ரூபம்-சாதரூபம், சாதஉருவம் (உணவு)

30. கல்யாணம்-பணம், அட்ட மங்கலம்.
ஏமம்-பொன், இன்பம்; காரணி - காரணமாக ஆவது.

31. கண்ணப் படுமாவுங் கரணமு மாகையால்
உண்ணப் படுவதுநீ யுண்போனீ - யெண்ணியெண்ணிச்

32. சீரிட்ட நின்னைத் தெளித்து நிதானமென்று
பேரிட் டவரே பெரியோர்காண் - ஊரிற்

33. கரியபொரு ளல்லாத காந்திப் பொருளை
அரியென் பவர்வீண ரன்றோ - பெரியநெடுங்

34. கோடென்றுங் கால்வால் குளம்பென்றுங் காணாமல்
மாடென் றவர்மோழை மாடன்றோ — கூடுமுன்னே

உற்றமும் சுற்றமும் 35-40

35. விள்ளரிய மோகம் விளைத்துலகை வாட்டநீ
தள்ளரிய காமனுக்குத் தம்பியோ - விள்ளாத

36. என்ன வினைக்கு மிடர்தீர்த்த கந்தவேள்
முன்னவ னுக்குநீ மூத்தவனோ - பின்னே

37. இதாமெனச் சாதிகுல மெல்லாம்வே றாக்கப்
பிதாமகனைப் பெற்ற பிதாவோ - சதாவகற்றி

38. விந்தைத் துரைத்தனந்தால் மெத்தப் பழித்திடநீ
அந்தப் புரந்தரனுக் கத்தானோ - சிந்துரக்கன்று

---

31. மா-செல்வம், மாவு (உணவுப்பொருள்).
கரணம்-செயல்.

32. நிதானம்-பொன், மெதுவாக.

33. காந்திப்பொருள்-ஒளிமிக்க பொருள்.
அரி-பொன், கரிய நிறமுடைய திருமால்.

34. கோடு-கொம்பு; மாடு-பசு, காளை குறிக்கும் பொதுச் சொல், செல்வம்.
மோழை மாடு - கொம்பில்லாத மாடு.

35. காமன்தம்பி-சாமன், காமனுக்குப் பின் பிறந்தவன்.

36. கந்தவேள் முன்னவன் - விநாயகன்.

37. பிதாமகன் - இரணியகர்ப்பனாகிய பிரம்மதேவன்.

38. புரந்தரன்-இந்திரன்; அத்தான் - அக்காவின் கணவன்
சிந்துரக்கன்று - ஆனைமுகத்தானாகிய விநாயகப் பெருமான்.

39. ஒன்றளிக்கு மெங்க ளுமையைச் சிமையமாய்
அன்றளிக்கும் பெம்மானுக் கம்மானோ - நின்று

40. தியக்கி விடுமென்று தேர்ந்தாலும் நெஞ்சை
மயக்கிவிடு மாயன் மகனோ - வியக்கத்

அரசும், ஆட்சியும் 41-45

41. தங்கோ ரமைச்சன் றளகர்த்த னில்லாமற்
செங்கோல் செலுத்துந் திறல்வேந்தே - எங்கேயுங்

42. காயிலாத் தீங்கனிபோற் கண்ணில்லா மற்பார்த்து
வாயிலா மற்பேசு மந்திரியே – நோயிலா

43. ஆனையுந் தேரு மடற்பரியுங் காலாளின்
தானையு மில்லாத் தளகர்த்தா—தேனுங்

44. குடித்தா லினிக்கும் மதுக்கொண்டால் மயக்கும்
படித்தால் மதுரமாம் பாட்டும்—பிடித்தறிய

45. வேண்டாமற் பாராமல் வேளைக் குதவாமல்
ஆண்டவனே யானந்த மாவாயே—நீண்டவியல்

செய்கையும், சிறப்பும்46—51

46. இத்தனையுஞ் சொன்ன வெனக்குமலை யாளத்தே
புத்தனை விட்ட பொருளுரையா—மெத்த

47. மெலியவிட்டுப் பார்த்தாய்நீ மேன்மதுரை நாட்டிற்
கலியைவிட்ட தென்ன கழறாய்—வலியவிட்டு

48. உக்கிரத்தை நீமீண்டு முற்றதுபோற் றஞ்சைதனிற்
சக்கரத்தை விட்டதென்ன சாற்றுவாய்—மிக்கோர்

---

39. அளிக்கும் பெம்மான் – திருமால்.
40. மாயன் - மாயம் செய்பவன்.
42. மந்திரி - அமைச்சன்.
43. தளகர்த்தன் படைத்தளபதி.
46. மலையாளம்— போக பூமியான கேரளம்.
புத்தன்—புத்தபெருமான், ஒரு நாணய வகை
47. மேன்மதுரைநாடு இராமநாதபுரம், மதுரைக்கு மேற்கே உள்ளதால் கூறினார்.
கலி—பஞ்சம், ஒரு நாணயத்தின் பெயர்.
48. சக்கரம்—ஆக்ஞா சக்கரம், பணம்.

49. சரங்களிற்பத் தஞ்செடுத்துக் கட்டிநே ராமுன்
வரங்கொடுப்ப தென்ன வகைகாண் — துரங்கமின்றி

50. வெந்திறல் யானையின்றி மேதினியைச் சூழ்ந்தோடி
வந்திடுவ தென்ன மகிமைகாண் — அந்தகனாங்

51. கேளாச் செவியானைக் கேதகைவாள் வேந்தனென
ஆளாக்குவ தென்ன ஆண்மைகாண் — கேளாகக்

உனக்கென்று என்ன உண்டு? 52—54

52. கூட்டும் பலசீவ கோடியெல்லா முண்டிருக்க
ஊட்டுங் கடவுளுனக் கூனெங்கே — வாட்டம்

53. விடுக்கு முலகைமக மேருவாய்த் தாங்கி
எடுக்குமுனக் காதார மெங்கே — தொடுக்குமுன்னே

54. குன்றநீர் சூழ்ந்த குவலயமெல் லாமடக்கி
வென்றநீ காட்டும் விருதெங்கே — யென்றாலும்

பணத்தின் பத்து அங்கம் (தசாங்கம்) 55—59

55. மாலாக நின்னையே வஸ்துவெனக் காண்பார்க்கு
மேலா கமமெங்கே வேதமெங்கே — பாலா

56. மதியார் பசுந்தங்க மால்வரையாம் சாம்பு
நதியா விளங்கியபொன் னாடா — மதிலிலங்கை

---

49. நேராமுன் — நேர்ந்து கொள்ளாமுன்.
துரங்கம் — துரகம் (குதிரை).

50. அந்தகன் — குருடன்.
கேதகைவாள் வேந்தன் — தாழம்பூ வாள் கொண்ட மன்மதன்.

52-55 வஞ்சப் புகழ்ச்சியாகப் பழிப்பது போல் புகழப் பட்டுள்ளது.

55-56 பாலா மதியார் — இளம்பிறை சூடிய இறைவன்.
பசுந்தங்கமால்வரை — மேருமலை.
சாம்புநதி — 'சாம்புநதம்' என்ற பொன்வகை, (மேரு மலை நாவல் மரத்துப்பழச்சாறு பொன்னாக ஓடலால் சாம்பூநதம் என ஒரு வரலாறு உண்டு).
மதிலிலங்கை மாநகர் — பொன்னால் ஆன லங்காபுரி.

57. மாநகரா பொன்னி மாலையா சூழ்ந்தநெடுங்
கோநகரா செங்கைக் குதிரையா—ஊன

58. மணிக்குதிரை வாட்டியதோர் வல்விலங்கா வாரும்
குனிதர வெல்லுங் கொடியா—முனியும்

59. முரசா கடந்து முனிவருஞ்சொல் லாத
உரைசாலு மானை யொருத்தா—அரசநீ

செல்வத்தின் சீர்மை 60—66

60. செம்பி லொளித்தாற் றிரும்ப வெளிப்படாய்
வம்பி லிழுத்தாலும் வந்திடாய்—வெம்பக்

61. கருக்கி யடித்தாலுங் காந்தி குறையாய்
யுருக்கி யடித்தாலு மோடாய்—நெருக்கிப்

62. பிடித்தா லிராய்பிடிப்பு விட்டாலும் போகாய்
படித்தாற் கிரங்கப் படியாய்—குடித்தவுடன்

63. தித்திக்கு நஞ்சுபோற் சென்மித் தவரையெல்லாம்
வர்த்திக்கு மாசையால் வாதிப்பாய்—கத்திக்கு

64. உறைபோலப் பேராசை யுள்ளிருப்ப மேலே
மறைப்பர றிவை மறைப்பாய்—இறைப்பாருக்கு

65. ஊற்றுநீர் போல்வீழ்ந் துள்ளூறமென் மேலும்
மாற்றுவா ராசை வளர்த்திடுவாய்—தேற்றிக்

66. கழுத்தறுப்பார் போற்றலையைக் காட்டிரச வாதி
கொழுத்திருக்குஞ் செல்வங் குறைப்பாய்—வழுத்திருத்தி

செய்கைக்குக் கிடைத்த சிறப்புப் பட்டம் 67-76

67. ஓங்கலாந் தந்தை யுடனே மறிப்பிருந்து
வாங்கலா மென்ற வழக்காளி—தீங்கெலாங்

---

57. கோநகரம்—தலைநகரம் (இராஜதானி)

58. மணிதிரைவாட்டியதோர் வல்விலங்கு—வராகவவதார மெடுத்த திருமால்.
குனிதர வெல்லுங்கொடி—இலக்குமி.

63. சென்மித்தவர்—பிறவி எடுத்தவர்.
வர்த்தித்தல்—அபிவிருத்தி செய்தல்.

65. மென்(மேலு)—சிதைந்துள்ளது.

68. சொள்ளத் துணிந்தோன் சொலைபா தகங்களெல்லாந்
தள்ளத் துணிந்துவரு சாத்திரியே—உள்ளபடைக்

69. கட்டவிழும் போதொருவன் கால்மாட்டி லாயிரம்பேர்
பட்டுவிழப் பண்ணும் பழிகாரா—தொட்டு

70. மடியைப் பிடித்தாலு மாமாயத் தாண்டி
குடியைக் கெடுக்குங் குறும்பா—முடிய

71. விரத்தராங் கற்புடைய மெல்லியரை யாசை
துரத்த மருத்திட்ட தூர்த்தா—கரத்தேன்போற்

72. கொள்ளாமற் கைப்பென்று கொண்டவர்பாற் கையூன்றிக்
கொள்ளாம லாகெடுக்குங் கூத்தாடி—உள்ளே

73. அடங்குதலில் லாவெளியி லாயிழையார் கொங்கைக்கு
இடுங்கலையை நீக்கு மிடும்பா—முடங்கிக்

74. குவியப் படாத குறுகுறுப்புத் தீரச்
செவியைக் கடிக்குந் திருடா—கவிபோல

75. வெறுவார்த்தை யின்றி வியன்வார்த்தை கேட்டால்
மறுவார்த்தை சொல்லாத வம்பா—தறுவாய்க்கு

76. இவன்றருவா னென்றுவரு மேழை முகங் கண்டால்
கவிழ்ந்து தலையெடாக் கள்ளா—அவந்திக்

பண அரசனின் பிரதானிமார்கள் 77—81

77. குலுக்குக் குதிரை குளம்புதலை யச்சலுக்குத்
துலுக்க ரிடர வே (சித்தம்)—பெலக்கவே

78. முல்லங்கி போல முளைக்கவைத்தா லும்முளைக்கும்
பல்லங்கி மோகரஞ்சம் பங்கிதான்—தொல்லைநாள்

---

70. முடிய—முற்றும்.

71. விரத்தர் — மணமின்றி இருப்பதாக உறுதி செய்து கொண்டவர்.
மருத்து—மருந்து.

77. குதிரை—குதிரைச்சின்னம் பொறித்த நாணய வகை.
(சித்தம்)—சீர்விடப்பட்டிருந்தது ஊகித்து நிரப்பட்டது.

78. மோகரா—பத்து, பதினைந்து ரூபாய் மதிப்புள்ள ஒரு நாணயம்.

77—78 குதிரை,முல்லங்கி,மோகரா, சம்பங்கி முதலிய நாணய வகைகளையே அதன் பிரதானிகளாக்கிச் சொல்கிறார்.

79. போட்டநந்தன் றோற்காசு போல்வழங்கு சாணான்காசு
ஈட்டுதங்கக் காசுசந்த மிக்காசு—நீட்டும்

80. அரைத்தகடுக் காயற் றகடாளிட்ட பெருங்காசு
நரைத்த கருவெருமை நாக்கு—நிரைத்துத்

81. தழங்கும் பெருங்கீற்று சன்னகீற் றென்ன
வழங்கும் பிரதானி மாரும்—முழங்குபவ

வழங்கும் தலங்களும் தளகர்த்தரும் 82—85

82. ளக்காடு திம்மி யரியலூர் கூடலூர்
இக்கே ரியகாவே ரிப்பாக்கம்—மிக்கசடைச்

83. சன்னகிரி பட்சி கனன கிரிசமுக்கை
சென்னபட்டி னந்திம்மா னாய்க்கன்—றென்னாடு

84. பங்கிட்ட சேருகான் பரதஞ் செலராயன்
வெங்கிட்ட ராயன் வெறுராயன்—இங்கெட்டித்

85. தேடும் வராகனெ னுஞ் செய்யதள கர்த்தரும்பொன்
மாடையெ னுந்தம்பி மாருடனே—நாடெல்லாம்

---

79. நந்தன் தோற்காசு—கி. மு. நூற்றாண்டில் நந்தவமிசத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவன் தோல்காசு வெளியிட்டான் என வரலாறு கூறுகிறது. சாணான்காசு—தோல் நாணயமான சாணாரக்காசு; ஈட்டு தங்கக்காசு—ஈடு எனப்படும், தங்கத்தாலான காசு.

80—81 பெருங்காசு (தகடால் ஆனது எருமைநாக்கு. பெருங்கீற்று, சன்னகீற்று } நாணய வகைகள் (சான்று: சரவணப் பொருமாள் கவிராயரது பணவிடு தூது).

82. அகாவேரி—உலகறிசுட்டாக 'அ' வந்தது.

83. பட்சி சனனகிரி—திருக்கழுக்குன்றம் ஆகலாம்.

85. வராகன்—மூன்றரை ரூபாய் மதிப்புள்ளதும், பன்றி முத்திரை கொண்டதுமான ஒருவகைப் பொன் நாணயம்.

மாடை—பத்துக் குன்றி எடையுள்ள நாணய வகை.

25 "வந்த மாடை நெல்லாக்கி"

சுக்கிரநீதி

துரைமக்கள் 86-90

86. உள்ளடக்கு மே(வ வுயர்) சிநன்னாமியான்,
வெள்ளைவெள் ளாளன் விறற்கர்ணன்—பிள்ளையன்

87. ராமப்பயன் ராமச் சந்திரய னஞ்சையன்
ராமப் பயன்சலம்பன் சாமந்தன்—காமித்து

88. நம்பேரு முள்ளுடைமை நாக்கொண் டெடுத்துருக்கும்
எம்பெருமான் தொண்டமான் ராசிபுத்தன்—தம்பிசெட்டி

89. அட்டாலைச் செட்டியக்கா ரெட்டி யனந்தாள்வான்
தட்டாரி நாகன்கிச் சம்மாளுங்—கிட்டாத

90. சோழியன் பூச்சயன் றும்முசு காமயன்,
வாழிய மிக்கதுரை மக்களுஞ்—சூழுமியற்

மணியகாரர்கள் 91-94

91. கொங்கு மதுரை கொழும்புதிரு வாங்கோடு
தங்குதிரு நெல்வேலி தஞ்சாவூர்—பொங்குதிரு

92. வையாறு செஞ்சியுடை யார்பா ளையமுழுந்தூர்
செய்யா றரியலூர் தென்காசி—வெய்ய

93. கொடியதொரு காற்றுக் குடிகொண்ட தூற்றுக்
குடிதுறை யூர்கண்டிக் கோட்டை—நெடியபெயர்

94. தாரா சுரம்பந் தளமுதலா மூராளுங்
காராள ராமணிய காரரும்—போராளுங்

---

86. (வ வுயர்)—சிதைந்தது ஊகித்து நிரப்பப்பட்டது.
பிள்ளையன்—வடமலையப்ப பிள்ளையன்?

86—90 இத்துரைமக்கள்(பெருந்தனக்காரர்கள்) பெயராலேயே காசுகளும் வழங்கப்பட்டு வந்தமை தெரிகிறது.

92. உழுந்தூர்—உழுந்தூர்ப்பேட்டை.

93. கண்டிக்கோட்டை—இலங்கை நகரில் உள்ள கண்டி. (கள்ளிக்கோட்டை?).

94. பந்தளம்—சபரிமலைப் பகுதியில் உள்ள ஓர் ஊர். (கொல்லம் அருகில்).

91—94 நாணயம் வழங்கிய இடங்களை ஆண்டவர்களே மணியக்காரர்கள் எனக் கூறுகிறார்.

94. காராளர்—கொடை வள்ளல்கள்.

அரசுச் சின்னங்கள் 95-97

95. காட்டுச்சூ'லஞ்சூலங்கைக்கொண்ட வாயுதமும்
வாட்டு தனிச்சிங்க வாகனமுங்—கூட்ட

96. மிகுநாத வோசையே மேளமுந் தாளமும்
தகுநாத வெண்சங்கு சங்கு—ரகுநாதப்

97. பாரிசா வெட்டும் பருஞ்சுழி யொப்பமும்
நேரிசந் தாங்குகன நீள்மையும்—ஒருரையும்

போரிடும் தீரம் (நாணயக் குற்றம்) 98—101

98. முன்புது மின்னலுடன் மொல்லாவெட்டுங்கழிவு
மன்புதிகழ் செப்பா டலுங்கருக்கும் பொன்பூசுஞ்

99. செம்புதார்க் கட்டறுத லுந்தேய் தலுடனே
வெம்பு முடைசலும் வெட்டையும்—நம்பினால்

100. நாணயமுங் கோழி விழுங்கலு நண்டுக்கா
லூனையமு மைக்காட்டி லுள்ளானுங்—காணயமாய்க்

101. கொண்டகீ ழாநெல்லிக் கொட்டையு மெங்கும்போய்ச்
சண்டையிடுஞ் சில்லறையுந் தன்வலுவுங்—கண்டபேர்

---

95. காட்டுச் சூலம்—காட்டுகின்ற சூலம்.

96. தகுநாதம்—ஒலிக்குறிப்பு.

97. பாரிசாவெட்டும்—திசை எட்டும், திசைகளில் வழங்கும் வெட்டு (நாணயவகை).
பருஞ்சுழி ஒப்பம்—வட்ட வடிவ கேடயம், கையொப்பம்.
நேரிசம்—அம்பு (எறிபடை).

98—101. மின்னல், செப்பாடல், வெட்டு, கோழி விழுங்கல், நண்டுக்கால், உள்ளான், கீழாநெல்லிக்கொட்டை, முதலிய சில்லரை நாணய வகைகள் எவ்வாறு குற்றம் பெறும் என விளக்குகிறார்.
செப்பாடல்—கருக்கும் (கறுத்துப்போகும்)என்கிறார்.
வெட்டு—உடையும்; வெம்பும் என்கிறார்.
சில்லறை—சண்டையிடும். என்கிறார்.

100. இராஜராஜன் காசை தஞ்சைப் பகுதியில் இன்றும் 'கோழிக்காசு' என்றே அழைக்கின்றனர்.

அரண்மனை வாசமும், கொலுவிருக்கும் சிறப்பும் 102-110

102. பூரிக்க விந்தையாய்ப் போவதுவு முள்ளுறையில்
ஆருக்குந் தோன்றா வடக்கமும்—ஊருக்குள்

103. வட்டமிட்டுத் தாண்டுமொரு மட்டத்தி லேறிவந்து
செட்டிகளைத் தெட்டித் திரிவதுவுங்—கட்டழகார்

104. கம்பட்ட மென்னு மரமனையுங் காயுமுலைக்
கும்பிட்ட வுட்கொலுவின் கூடமுந்—தம்பிக்குப்

105. பாத்திரம்பொற் பெட்டி படுக்கைவீ டும்மரக்கு
முத்திரை யாம்விய முத்திரையு(ம்)—நித்திரைகொள்

106. தூங்குமஞ்சந் தூங்கு துலையந் தலையற்ற
பாங்கமைந்த தோழன் படிக்கல்லுந்—தீங்கில்லாப்

107. பொன்னா ணையக்காரர் பொக்கிஷக் காரருங்
கன்னாவுன் பட்டடைச்சிங் காதனமும்—மன்னுமெழில்

108. செய்யுமுளைத் தொண்டிகொலுச் சிங்கா ரியுமுரைகல்
ஐய்யனுண் மை சொல்லு மறிந்தோருந்—துய்ய

109. புழுகுமெழு குண்டையும் போர்த்துவரும் போர்வை
அழகுமடிச் சீலையு மாகிப்—பழகும்

110. அரசிருப்பு நட்டார்தட் டாரமெழக் கொட்டும்
முரசதிர்ப்பும் யானோ மொழிவேன்—குரைகுரைத்துச்

திரவியமும், தர்க்கவாதிகளும் 111—123

111. சள்ளிட்டுச் சண்டையிட்டுத் தர்க்கிக்குந் தர்க்கீகர்
உள்ளிட்டுக் கொண்ட வுறுதிகேள்—மெள்ளத்

---

102. மட்டம்—சிறுகுதிரை, பொன்மணியின் உறுப்புவகை.
தெட்டி—தெற்றி (தட்டி விழச் செய்தல்).

103. கம்பட்டம்—நாணயம்.

104. பத்திரம்—பாதுகாப்பு.

105. துலை—துலாக்கோல், படிக்கல்—நிறுக்க உதவும் அளவு கற்கள்.

106. கன்னா—கர்ணா.

108. துய்ய—தூய்மையான.

111. தர்க்கீகர்—தர்க்கவாதிகள்.

112. திரவியம் வேறு குணம்வேறாய்ச் செய்து
விரவும் குணாசிரியம் வேற்றுத்—திரவியமென்று

113. ஓதுவா ரந்தக் குணமொன் றிரண்டென்னுங்
கோதிலாச் சங்கைக் குணம்பொருந்தி—ஆதியிலே

114. சாற்றுங் குணாசிரியந் தானாகுந் தானாகில்
வேற்றுமைபோய்ச் சொன்னவெல்லாம்வீணாகுந்
—தேற்றமுடன்

115. ஓர்ந்துணர்ந்துசாதியுமொன் றுண்டென்று மொன்றி
லொன்று
சேர்ந்துமி ராதென்று செப்புவார்—காந்திசேர்

116. சொன்ன கடத்திலே சொன்னத் துவசாதி
என்ன வொருசாதி யிருக்கவே—மன்னுங்

117. கடத்துவ சாதியென்று கண்டால் கடத்தின்
இடத்தி லொருசாதி யெங்கே—புடத்திலிட்டுப்

118. பொற்கடகந் தன்னிலே பொன்மோ திரஞ் செனிக்கத்
திக்கிலனுத் தேனுகர திரேணுவமாய்—நிற்க

---

112. ''திரவியம் பிருதிவி, அப்பு தேயு, வாயு, ஆகாயம், காலம் திக்கு, ஆன்மா, மனம்என ஒன்பது வகைத்து. குணம்—வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமை, புகைமை, சித்திரம் எனும் வேறுபாட்டால் எழுவகைத்து. தருக்க சங்கிரக தீபிகை உரை

113. சங்கை—சமிக்ஞை (அடையாளம்).

116. சொன்னகடம்—சொர்ணகடம் (பொற்குடம்).
சொன்னத்துவசாதி—சொணத்துவசாதி (பொன்சாதி).

117. கடத்துவசாதி—குடத்துசாதி.

118. செனித்தல் — பிறத்தல்; பொற்கடகம் - பொன்னாலான வளையல்.

திரேணுவம்—புல்.

சொர்ணகடம்- சொர்ணம், கடம் இவைபற்றித் தர்க்கரீதியாக விளக்கம் தருகிறார்.

119. மரிய மகற்பரி மாணந்தானு மகதா
பரிமாண் சனக முரியவனு—பரிமா

120. மனுதர மென்னத் தனுபரிமாண சானக
மனுபரிமா ணத்தின் மகற்பரி மாணந்—

121. மகற்பரிமா னத்தின் னுபரிமா ணந்தானும்
வைத்துரையார்.................

122. சாத்திரமென் றிந்தத் தவறெல்லாங் கற்றுவயிற்று
ஆத்திரத்தால் போய்வா யடியடித்து—நாத்தெறிக்கக்

123. கூப்பிடுத லெல்லாமெங் கோமானே நீமார்பில்
ஆப்பிடுத லாற்றாம லல்லவோ— சேய்ப்படுவார்

சொத்தும் சூதாட்டமும் 124—133

124. காலெழுது கொம்பெழுது கையெழுது நாவெழுதென்று
ஓலையி லேயெழுது மோவியம்போல்—வேலும்

125. மயிலு மெனக்குகனை வாஞ்சித் தவர்போற்
பயிலு முதுகிலொரு பாலிற்—கயிலாசம்

126. பேசித் திரியுமென்று பின்னொருத்தன் பேரெழுத
வாசித்துக் காட்டி மருள் காட்டிக்—கூசாமல்

127. ஆளைக் குதிரை யடியிலே தள்ளானை
மீளக் குதிரையால் வெட்டினால்—மாளக்

128. குதிரை தனைச்சகட்டாற் குத்துடனே வந்தங்கு
அதிர இராச னழித்தால்—எதிராய்

129. இருக்குமாள் தள்ளியா லென்றுகட்டிப் போடென்று
உருக்கமாய் மேலேத் துரைத்துப்—பொருக்கொன்றச்

---

119. பரிமாணம்—அளவு.

119—121. பரிமாணம், அணு, உபரிமாணம் இவை பற்றிய தர்க்கம் இடம் பெற்றுள்ளது.

120—121 சீர்கள் விடப்பட்டுள்ளன.

123. மார்பில் ஆப்பிடுதல்—மார்பில் அகப்படுதல். தர்க்க ரீதியாக விவாதித்து வெற்றிப் பதக்கம் பெறுதலைக் குறிப்பிடுகின்றார்.

1-5. குகன்—முருகன்.

125. மருள்—மயக்கம்.

127—130 சூதாட்ட முறைகளைக் குறிப்பிடுகிறார்.

129. மேலேத்துரைத்து—மேலேற்றி உரைத்து.

130. சோடுபோட் டுச்சிவப்புச் சோடுபொருங் குங்குமத்தை
வீடுபோய்ச் சேரவென்று விட்டுவிடு—கூடாமற்

131. பச்சையை வெட்டு படுத்திடா மற்கறுப்பை
வைச்சு மறிசிவப்பை வந்துவிடு—வெச்சென்று

132. கேட்டுருட்டிக்குங்குமத்தைக் கிட்டவைத்துப் பன்னிரண்டு
போட்டு முடக்காறு போட்டுவிட்டால்—ஆட்டங்

133. கெலித்துதென்று சூது கெலிப்பித்துக் காட்டிப்
பலித்த முதுகிலொரு பாலில்—நிலைத்தெரியுங்

பொன்னும், பொய்ப் புலவரும் 134—137

134. கல்லை விரைந்தெண்ணிக் கண்டு கலந்தெறியும்
நெல்லையுங் கூட நினைந்தெண்ணி—வல்லை

135. ஒருகால் தமிழு மொருகால் வடுகும்
இருகாலி னாலு மெழுதி—வருகாது

136. இரட்டைக் கடுக்க னிலங்கவ தானப்
பிரட்டைத் தலையாட்டிப் பேசித்—திரட்டிக்

137. கொடுத்தவர்போல் தாவென்று கோவித்துக் கேட்பார்
எடுத்த தொழிற்குமுடி வெங்கே—நடுப்போலக்

நிலமும், நிதானமும் 138—144

138. கொள்ளையிட வென்று குடியிற்கை நீட்டாமல்
தள்ளி யெழுதத் தலைப்பட்டு—விள்ளாத

139. வார நிலம்வரிசை யாக வரிசைநிலம்
வார நில மாக மறைத்தெழுதி—ஆர

131—132 பச்சை, கறுப்பு, சிவப்பு, குங்குமம் —இவை சூதாட்டக் காய்களாகலாம்.

136. அவதானம்—அஷ்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம். (ஒரேசமயத்தில் எட்டு, பத்து, பதினாறு நூறு காரியங்களைச் செய்தல்.)

139. வாரநிலம்—சாகுபடிநெல் முதலியவற்றைக் 'குடிவாரம்' 'மேல்வாரம்' படி பிரிக்கும் நிலம்.
வரிசை—சீராகச் செய்த நன்கொடை.

140. விருத்தி தனைவிருத்தி யாக்கி யொழுகைத்
திருத்தித் திருத்தலுடன் சேர்த்துக்—கருத்தறிந்து

141. மானிபங்கொள் ளாத வகையிலே கொள்ளுமின
மேனுங்கொள் ளாதவகை யென்றெழுதித்—தானும்

142. பொறுப்பைக் குறைத்தடித்த போர்குறைக்கு முன்னே
அறுப்பைக் குறைத்ததற்கு முன்னே—குறிப்பாய்ப்

143. பயிரடைப்பி லேகுறைத்துப் பற்றடைப்பைத் தள்ளி
மயிர்பிளந்து பார்த்து வரைந்து—கயிறெடுத்துக்

144. கட்டிய வோலைகுளங் காலா யழித்தழித்து
வெட்டுமெழுத் தாணியுமண் வெட்டியாய்-வெட்டனக்கும்

தவறு செய்யத் தூண்டுவதும் நீயே! தண்டனை தருவதும் நீயே! 145–150

145. கோலவெட்டிலே மூத்தகொம்பைவெட்டிக் காலாக்கிக்
காலவெட்டைக் கல்வெட்டாய்க் கண்டெழுதி—
மேலவிட்டுப்

146. போகாக் குடிபோ குடியென்றுங் கொன்றாலுஞ்
சாகாக் குடிசா குடியென்றும்—நோகாது

147. எழுதி யெழுதி யூரெல்லாந் தன்காலால்
உழுதுழுது பாழாக்கு வோர்தம் —பழவெலும்பைக்

148. குத்தமுறிப் பார்பிடரிக் குத்துத் துடைக்குத்தாய்
ஒத்தபுலி யாக்கையீ யோட்டுவதாய்—வைத்து

---

140. ஒழுகு—நிலத்தின் வரலாறு குறிக்கும் கணக்கு.

141. மானிபம்—மானியம் (கிராம சமுதாயத்தாருக்குச் செய்த நன்மைக்குப் பிரதியாக விடப்பெற்ற இறையிலி நிலம்).

143. மயிர் பிளந்து பார்த்து —மயிர் இடைவெளியும் விட்டுப் போகாது அளந்து பார்த்து.

145. மூத்த கொம்பு—இரட்டைக் கொம்பு (ே).

146. போகுடி—ஊரை விட்டுப் பெயர்ந்து போனகுடி.
சாகாக்குடி—ஊரில் வாழ்கின்ற குடி.

147. பழவெலும்பு—விலாவெலும்பு

148. புலியாக்கை—புலிபோன்று வலிமை பெற்ற உடல்.

149. குறடு கவிழ்முத்தங் கொள்வதாய் வீசுஞ்
சிறடி யதிற்பொடி தித்திப்பாய் - வறடொழிந்து

150. முண்டித்துக் கொண்டவர்க்கு முன்னிருந்து வாய் பேசுஞ்
சண்டித் தனங் கொடுத்த தாயாதி—பண்டைக்

151. கடலைக் கடப்பவர்க்கோர் கற்படகு முண்டோ
உடல்தானும் வச்சிரத்தா லுண்டோ — அடல்மீன்கள்

152. வேற்புறத்துப் பல்லால் வெகுண்டு விழுங்கிவிட்டால்
ஆற்புறத்தி லோட வழிவுண்டோ — காற்புறத்துக்கு

இருக்காத இடம் உண்டோ! எடுக்காத வடிவுண்டோ! 153-157

15 . எட்டாத தீவுகள்தன் னில்லோ கடைத்தலையோ
கொட்டார மோசந்தைக் கூட்டமோ — கிட்டாத

154. ஆனை முகத்துப் புலியும் புலிமுகத்தில்
ஆனையுஞ் சிங்கமுகத் தாடரவு(ம்) — மானைப்போற்

155. காலுங் குரங்குபோற் கண்ணுங் கரடிபோல்
வாலும் படைத்து வருமரையு(ம்) — நாலு

156. முகமு மொருகாலு(ம்) மூன்றுகொம்பு மாறு
நகமும் படைத்த நரியு(ம்) — மிருவனதாம்

157. பூச்சியோ ஹூம் புழுவோவுன் மோகமென்ன
வாச்சியோ வாளோ வகுத்துரையாய் — கூச்சமறக்

---

149 குறடு — கம்மியரது பற்றுக் குறடு.
வறடொழிந்து — வறட்சியொழிந்து.

150. முண்டித்து—மொட்டையடித்து.
தாயாதி—பங்காளி (உறவினன்).

151. அடல்மீன்கள் — மீன்களில் ஒருவகை. வலிமை மிகு மீன்கள்.

152. கால் — காற்று.

153. இல்லோ — இல்லமோ.

154. ஆடரவு — படமெடுத்தாடும் பாம்பு.

155. மரை — மான்.

157. வாச்சி — வாச்சாத்து (மரம் செதுக்கப் பயன்படும் கருவி.

பணமும், பரத்தையரும் 158-171

158. கொங்கைக் குடத்தைக் குலுக்கியோ(ர்) மாவடுவைப்
பங்கிட்ட கண்ணாற் படப்பார்த்தும் — அங்கே

159. கவிழ்ந்து நிலம்பார்த்துக் காமுகர் முந்தானை
அவிழ்த்தால் ரவிக்கை யவிழ்த்துந் — துவண்டளைந்து

160. கூக்குர லிட்டுக் குழந்தையெனக் குழறி
வாய்க்கும் படிக்கு மருண்டோட — தாய்க்கிழவிக்கு

161. ஆற்றாமை சொல்லி யதரக் கனி யையுனக்கு
ஏற்றாப்போற் செய்யென் றினிதளித்துக் — கீற்றாய்

162. வெடிக்கக் கிழித்தாலு(ம்) மென்முலையைப் பின்னும்
பிடிக்கக் கொடுத்தாசை பேசி — அடிக்கக்

163. குதிக்குமணிப் பந்தாய்க் குதித்துப் பரிகாட்டி
உதிக்கு மளவு முழன்று — கதிக்குங்

164. கருவழிந்த முட்டைபோற் காயமெல்லாங் கூடாய்
மருவழிந்த பூப்போல வாடி — உருவழிந்து

165. நேசம்போற் பேச்சடக்கி நெஞ்சிற் பதைப்படக்கி
மோசம்போ லக்கிடந்து மூக்சடக்கிக் — காசும்

166. வடமுந் திகழ்முலையும் வாயிதழு மல்குல்
தடமுமவன் குத்தகையாய்ச் சாட்டித் — திடனறிந்து

167. பொல்லாத காமவலை போடப் பறிகொடுத்த
வல்லாளன் மாற்றனாள் வந்துவிட்டால் — நல்ல நாள்த்

168. தீயநாள்த் தீப்பாய்ந் தவளுக்குப் பொங்கலிடுந்
தூயநாள்க் கிட்டியநாள்த் தூரனாள் — மாய

169. வயிற்றுவலி கண்வலி காது வலிவாய்
எயிற்றுவலி தும்ம லிருமல்ப் — பயித்தியமேற்

---

163. பரி காட்டி — ஸ்பரிச உணர்வுகாட்டி (தொட்டுணர்வு).

164. மரு — மணம்.

165. மோசம்போல் — மோட்சம்போல் (முத்தி நிலை), இறந்தாற்போல், காசு — மேகலாபரணம்; வடம்—மணிசரம்.

170. கொண்டெடுக்கும் வாந்தி குடல்பிரட்டுச் சொற்பிரட்டுத்
தண்டெடுக்கு(ம்) பேய்ம்மறைப்பேய் சந்திப்பேய்
—கொண்டமருந்

171. தாலே கருப்ப மழிந்து கரிக்கட்டை
போலே விழுந்தவுடற் புண்பாடு — மேலோர்

172. வடுகன் முறைதுலுக்கன் வைப்பு மகளுக்(கு)
இடுகை வளைபோன வெக்கம் — கெடுகனவில்

173. தாய்க்கிழவி செத்த சலிப்பு மகளையவள்
பேய்க்கழுதை யென்ற பெரும்பிணக்கு — நோய்க்கிழவி

174. பாட்டனுக் குத்திவசம் பட்டுப்பிடவை தந்த
தாட்டனுக்குச் சொன்ன சனிவாரங் — கூட்டு மிந்தப்

175. பொய்யான வித்தையெல்லாம் போதிப்பது தானேன்
ஐயாவே நீயோ வயலானோ — நைய

காசும், கழைக்கூத்தாடியும் 176—185

176. எலும்பை முறித்தெண் ணையிட்டுப் பிடித்துச்
சொலும்பு(ளி) போற் போட்டுத் துவைத்துச் — சிலம்பங்

177. கதிக்க வருமுன்னே கனலின் மிதித்தாற்போற்
குதிக்கப் பருந்தாட்டங் கொண்டு—மதிக்கப்போய்ச்

---

170. மறைப்பேய் — பிரம்ம ராக்ஷஸ் (கற்ற வேதத்தைச் சொல்லித்தராது இறந்தவன் இப்பேயாவான்).
'பார்ப்பனப்பேய்' எனக் கலிங்கத்துப்பரணி கூறும்.
"பவதி பிட்சாந்தேகியெனும் பனவப்பேய்க்கு வாரீரே'
சந்திப்பேய் — மாலை, இரவு — சந்திக்கும் நேரத்தில் பிடித்தபேய்.

167-170. பணமற்றவன் வரும்பொழுது அவனைத் தவிர்க்கும் வழி முறைகள் கூறுகிறார்.

171–174. பரத்தையர் பணமற்றவனைத் தவிர்க்கக் கூறும் பொய் வார்த்தைகள்.

174. திவசம் — சிரார்த்தம். ' எத்திவசமும் புசித்திவ் வுலகை வஞ்சிக்குந்திருடர்'' —பிரபோத 11, 5
பிடவை — புடவை (சேலை).
தாட்டன் — பெருமைக்காரன்.
சனிவாரம் — சனிகிழமை மட்டும்.

176. சிலம்பம் - கழைக்கூத்துக்கு உதவும் நீண்டகோல்

177. கதிக்க — வேகமாக.

178. சாட்டையடி மீறித் தடியடிபோல்க்கோலடியால்
மாட்டையடித் தாற்போல் வளைத்தடித்துக் — காட்டி

179. யடவுகை யீதென்றே யாடவரைச் சேரு(ம்)
தடவுகை யீதென்றுஞ் சாதித்து — இடவருத்தி

180. ஆணித் தரமா யறிந்திருக்குங் கோப்பொல்லா (ம்)
மேனித் தரமாக வேற்றிவித்து — நாணமறக்

181. கச்சைகட்டிச் சற்றெனக் கால்தவறி வீழ்ந்துவிட்டால்
லச்சைகெட்டுக் கையூன்றி லாகெடுத்து — மெச்சுங்

182. கரணப்படி றாபோற் கரணங்கள் போட்டு
மரணத்தை யு' பாய் மதித்துத் -- தரணிக்குள்

183. வான்கொத்தி போற்பறந்து மான்குட்டி போற்றாண்டி
மீன்கொத்தி போலாடி மேய்ப்பித்துத் - தான்கற்றுப்

184 பூட்டிய சக்கரங்கள் போல்விரைந்து சுற்றிவர
ஆட்டிவித்து மற்று மரங்கேற்றி — காட்டுகையில்

185. தானோடு மாட்டோ தலைநீட்டோ கைகாட்டோ
ஊனாடு வாயாடு முட்களிப்போ — தானோடித்

பாட்டும், பணமும் 186—189

186. தாளம் பறித்தடிக்குந் தத்தாமோ பாடகநீ
கேளேன் றடியெடுக்கும் கீதமோ — தோளிலிட்டு

187. மத்தளத்தைப் போயிழுத்து வாங்கித்தன் றோளிலிட்டுத்
தத்தளந்தத் தித்தமென்று தட்டுவதோ—வித்தனையும்

188. ஈதோர் பணம்வீழ்ந்து விட்டாற் புகழிக்கும்
ஆதாளி யோவெறுங்கொண் டாட்டமோ — மாதுளி

189. பெண்கூத்து மாண்கூத்து மென்று பிரமிக்கப்
பண்கூத்தோ வெல்லாம் பணக்கூத்தே — உன்கூத்

---

179. அடவுகை — அடைவ வகை (அடைகின்ற வகை).

180 கோப்பு—வகை.

182. கரணம்—தலைகீழாகப் பாய்கை.

186. தத்தாமோ— 'தத்' இசைக் குறிப்புசொல்.

187. 'தத்தளந்தத்தித்தம்' — இசைக்குறிப்புச் சொல்.

188. ஆதாளி—பேரொலி.

'மா' வும் மருத்துவமும் 190–202

190. தொழியாத சூத்தென் றுபாயமிட்டுக் கொண்டு
பழியாய் வயித்தியங்கள் பார்ப்போர் — கழிவாகச்

191. சுத்த நரம்பு துடிப்பதனை வாதமென்றும்
பித்தமென்றுஞ் சேற்பனமென்றும் பேச்சிட்டு—வித்தை
போல்

192. வாய்வழியே போகி வயிற்றுக்குள்ளே யிருந்த
நோய்வழியெல் லாமறிந்த நுண்ணியன்போற்—பேய்வழி
யாய்ப்

193. போக்கு மிருமலையும் பொல்லா க்ஷயமென்றே
பார்க்குமுக சோகையைப் பாண்டுவென்று — மூக்கு

194. வழிச்சலைப் பீனிச மென்றும் வயிற்றுக்
கழிச்சலைக் கிருணியென்றுங் கண்டு — பழிச்சொலுக்கு

195. ஏற்கத் தமிழ்ச்சொ லிதுகிரந்த மென்றுபிழை
பார்க்க வறியாரைப் பார்த்துரைத்துத் — தீக்கெடாக்

196. குட்டத்தைப் போட்டரைத்துக் கிட்டுமொரு சாற்றை
விட்டுத்
துட்டுக்கா சாய்த்திரட்டித் துண்டிட்டுக்-கெட்டிபண்ணிச்

197. சிந்தா மணியென்று சிந்தூர சேஷத்தைச்
சந்திரோ தயமென்றுந் தான்கண்டு — முந்த

198. நிறையப் பணத்தை நிறுத்து மருந்தைக்
குறைய நிறுத்துக் கொடுத்து — வெறுமருந்து

199. வேம்பெனத் தின்றுகைகால் வீங்கிவிட்டால் நீர்முள்ளிச்
சாம்பலைச் சுட்டுத் தடவென்றுஞ் — சோம்பாமல்ப்

---

191. வாதம் — உடலில் வாயு மிகுதலாகிய பிணிக்கூறு.
பித்தம் — பித்தம் எனும் பிணிக்கூறு.
செற்பனம் — சிலேட்டுமம்.

192. க்ஷயம் — காசநோய்.

193. பாண்டு — வெளுப்பு (இரத்தச் சோகையால் வரும் நோய்.)

194. பீனிசம் — மூக்கடைப்பு நோய். கிருணி — சீதபேதி.

195. கிரந்தம்—வடமொழியைத் தமிழில் எழுதப் பயன்பட்ட எழுத்து.

196. சாறு — பச்சிலைச்சாறு.

200. பையுமணிச் செம்பும் பலவுண்டை யும்பொடியும்
பொய்யு மடிப்பும் பொருள்வலையாய் — அய்யமறக்
201. கொன்றபேர் கோடிபே ராயிருப்பக் கூற்றுவன்வாய்ச்
சென்றபேர் தம்மைத் திருப்புவோம் — என்றுபேர்
202. சொல்லுவா ரங்கவரைச் சூழ்ந்தவறு மைப்பிணியை
வெல்லுவா ரார்காண் விளம்புவாய் — அல்லும்

இருஞ்செல்வமும் இரசவாதமும் 203—216

203. பகலு மரைத்தரைத்துப் பாஷாணங் கூட்டி
மிகலுங் குறைவும் விலக்கிப் — புகல்விலக்கிப்
204. பார்த்துப் பிடுங்கிவந்தபச்சிலையைக் கூட்டியொன்றாய்ச்
சேர்த்துப் பிழிந்து சிறுகுடத்தில் — வார்த்தடைத்துக்
205. காயவைத்துச் சுத்தியிலே கட்டாக விட்டரைத்துச்
சாயவைத்து நாளிலே சற்றிறக்கிப் — பாயுந்
206. தடித்தரசங் கூட்டியுயிர்ச் சங்கின் கழுத்தைப்
பிடித்திழுத்து வாயைப் பிளந்து — குடிக்கவிட்டு
207. மண்கட்டி நூறுபிடம் வைத்தெரித்துச் சுட்டெடுத்துப்
பண்கட்டுஞ் சங்கைப் படியிட்டுக் — கண்கட்டு
208. உறவைத்துச் செம்பிலே யூட்டிப் புடமிட்டு
அறவைத் துருக்கி வடித்து – நிறைவைத்த
209. தங்கத்தி லெட்டிலொன்று தான்போட்டு மட்டஞ்சேர்த்து
அங்கத்தைப் பின்னு மறவைக்க — லிங்கத்து

---

200. உண்டை — உருண்டை.
203. பாஷாணம் — மருந்துச் சரக்குகள்.
205. சுத்தி — கலுவம் (மருந்து அரைக்கும் கற்பாத்திரம்).
206. உயிர்ச்சங்கு — கடலில் வாழும் ஒரு மெல்லுடலி.
207. பிடம் — புடம் (வெய்யிலில் வைத்தல், நெருப்பில் சுடல் முதலியவற்றால் பக்குவப்படுத்தல்).
பண்கட்டும் சங்கு — இசைக்கும் சங்கு.
படியிட்டு — நூறு பலங்கொண்ட நிறையளவைப் படியாக இட்டு.
208. உறவைத்து—கிட்டவைத்து, அறவைத்து—செம்மையாகவைத்து.
நிறைவைத்த — நிறுத்து வைத்த.
209. மட்டஞ்சேர்த்து — சமமாக்கி, அங்கத்தை - உடம்பை

210. எழுந்தசமு மூர்த்திபோ லேங்கதாய் நீவந்(து)
அழுந்தநிறங் காட்டு மளவில் விழுந்திறைஞ்சிக்

211. கும்பிடுவார் கண்ணிலொற்றிக் கொள்வார் கவலைகெட
நம்பிடுவார் நீரால் நலுங்கிடுவார் - செம்பொடு

212. இருப்புமொந் தையெல்லா மேயக் குனுக்கொ(டு)
உருக்குழியெ லாமே டுருக்கு - நெருக்கியிடை

213. எல்லாமென் றுன்னை யெடுத்துவைத்துச் சுந்தியலாற்
பொல்லாதார் தட்டப் பொறுப்பரோ - மெல்ல

214. நழுவி விழுவாய் நழுவிவிட்டாற் பின்னைக்
கழுவிவிட்டாற் போல்நிறமுங் காணார் - அழுவார்

215. எடுத்துப்பேர்த் தெட்டிலொன்றி லேழிலொன்றி லென்றால்
விடுத்துப்போகா தென்று மீண்டும் - தொடுத்துரைத்துக்

216. கைதேய்ந்து மெய்தேய்ந்து கைப்பொருளுந் தேய்ந் தாலும்
பொய்தேய்ந் திடாருனது போதனைகாண் -மைதோய்ந்த

பெருஞ்செல்வமும், பேயோட்டலும்—217—227

217. வன்பே யிதென்று மனப்பேய் பிடித்தவர்பால்
தன்பேயை யேவிச் சழப்படுத்தி - முன்பே

218. இருந்தகுணம் போய்ப்புருஷ னென்றுமக னென்று
பொருந்தவறி யாமற் புலம்பி - வருந்தித்

219. தெறுதெறனப் பார்த்துச் சிரித்தழுது சற்றே
நெறுநெறெனப் பற்கடித்து நின்று - மொறுமொறுத்து

---

210. ஏங்கதாய் — ஆரவாரமுள்ளதாய்

211. நலுங்கிடுவார் — நலங்கிடுவார் சந்தனம், மஞ்சள், பூசுதல்; நீரால் நலங்கிடுதல்.

212. இருப்பு மொந்தை — இரும்பாலான பாத்திரவகை.

213. சுத்தியல் — உடைக்கப்பயன்படும் இரும்பாலான கருவி.

216. போதனை — அறிவுரை.

217. வன்பேய் - கடினத்தன்மை கொண்ட கொடிய பேய்.
ஏவிச்சு - ஏவித்து, ஏவி விட்டு.
அழப்படுத்தி - அழுமாறு செய்து.

218. பொருந்தவறியாமல் - வேறுபாடு தெரியாமல்.

220. வாய்குழறிச் சீறி வருமுன் படுத்திருந்த
தாய்குழறி யோடச் சதிபண்ணிப் - பேய்குழறத்

221. தான்போய் முறத்திலே சாம்பற் பரத்தியதிற்
பேன்போற் சிறுகப் பிடித்தெழுதி - மீன்போற்

222. பருக்க வெழுதிஒரு படத்திற் சூலம்
இருக்க நெடுங்கீற் றெழுதி - நெருக்கமாய்

223. அம்மென்றும் ரம்மென்றும் லம்மென்றும் வம்மென்றும்
அம்மென்று முள்ளே யடைத்தெழுதி - உம்பட்டுச்

224. சாடுசா டென்றுரைத்துச் சாதினையுஞ் சாத்திரமுங்
கூடும் பலமுங் குறித்துரைத்து – நீடு

225. வரம்பெடுத்துப் போக மயிரவிழ்த்து மோதிப்
பிரம்பெடுத்து மாறிப் பிடித்துத் - தரம்பிரித்துப்

226. பேரைச்சொல் லென்றடித்துப் பேசிவித்துத் தன்பேயைத்
தூரச்செல் லென்று துரத்திவித்துப் - பாரறியத்

227. தந்திரமா யிவ்வாறு தான்பிழைக்குஞ் சூதெல்லாம்
மந்திர ரூபியுந்தன் வல்லமைகாண் - இந்தவகை

உன்னால் முடியாததும் உண்டோ?—228 –231

228. ஆகிப்பித் தாகி யலக்கழித்தும் வாதித்து
மோகிப்பித் துங்கவலை மூட்டிவித்துந் - தாகந்

229. தணியத் தியாக சமுத்திரம்போ லீந்தும்
பிணித்த கலியைவெட்டிப் பேர்த்துந் – துணித்துமருள்

230. என்னையென நின்கீர்த்தி யானுரைத்து மாற்றாது
முன்னவனே கேட்டு முடியாதால் - மனைவனீ

231. ஆற்றாத் துயருண்டோ யாகையா லென்றுயரந்
தேற்றாத் துயரஞ் சிறிதுரைத்தேன் - மாற்றார்

221-2 2 பேயோட்டுபவர் மேற்கொள்ளும் மந்திர முறைகளைக் கூறுகிறார்.

223. ய, ர, ல, வ, அ - என்ற மந்திர எழுத்துக்களைக் குறிக்கிறார்.

224. சாதினை - சாதனை (செய்த தீரச்செயல்கள்).

227. ரூபி (உருவமுடையது).

229. கலி - துன்பம், தரித்திரம்.

பாட்டுடைத் தலைவன்—232—237

232. வணங்கும் பதத்தால் மலர்மடந்தை யும்பர்
வணங்கும் பதத்தால் வளர்வோன் - இணங்கும்

233. பொருப்பின் விளக்காய்ப் புகழ்விளக்கு நின்று
விருப்பின் விளக்கம் விளக்கந் - திருப்பி

234. விடையே ழடர்த்தவிடை வேழத்தை வாழைத்
தடைபோல் மருப்பொடித்த தந்தி - கொடைபோல்

235. மலையெடுத்து வெற்பு மழைதடுத்த கொண்டல்
அலையெடுத்த நீரகடலடைத்த வாழி - தலையெடுத்து

236. நூற்று வரைச்சீறி நூறி விருந்திட்டுக்
கூற்றுவரைக் காக்கும் கொலையானை – ஆற்றமற்

---

234. விடை - காளை. ஏழு காளைகளை நப்பின்னையின் பொருட்டு அடக்கிய கண்ணன் செயலைப் பாட்டுடைத் தலைவன் இரகுநாத சேதுபதிக்கு ஏற்றுவித்துக் கூறுகிறார் மன்னர்களைத் திருமாலுடன் ஒப்பிடல் இலக்கிய மரபே.

வேழம் - 'குவலயபீடம்' எனும் யானை. (கம்சனால் ஏவப்பட்ட, இதனைக் கண்ணன் அடக்கினான்).

வாழைத்தடை - வாழைத்தண்டு; தந்தி - ஆண் யானை; கொடைபோல் - குடைபோல்.

235. மலை - கோவர்த்தனகிரி; வெற்புமழை – கல்மழை; கொண்டல் - மேகத்தை ஒத்த நிறமுடைய கண்ணன். கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து, இந்திரனால் பெய்த கல்மழையைத் தடுத்து, ஆய்ர்பாடி மக்களைக் காத்த கண்ணன் செயலைப் பாட்டுடைத் தலைவனுக்கு ஏற்றிக் கூறியவாகும்.

கடலடைத்த ஆழி - சேது அணைக்காவலனாதலின் கூறினார்.

236. பாண்டவர்களுக்காகப் பாரதப்போரில் கௌரவரை அழித்த கண்ணன் செயலைச் சேதுபதிக்கு ஏற்றிக் கூறுகிறார். நூற்றுவர் - கௌரவர்; நூறி - அழித்து.

பாட்டுடைத் தலைவனது பத்து அங்கம்—237—277

237. பொய்யைத் துரத்திப் புவியில்செங் கோல்செலுத்த
மெய்யைத் தலைநிறுத்தும் வேளாளன் - கையாய்

238. அடங்கக் கடலை யடக்கிக் குடித்துத்
தடங்கிரியைப் பாதளத்திற் றள்ளி - நெடுஞ்சீர்

239. படைக்குங் குறுமுனியைப் பாலிருத்தி விண்ணிற்
புடைக்கும் பொதியப் பொருப்பான் - முடக்குநதி

240. தண்ணிற் சிறந்த தரங்கமெறி முத்துப்போய்
விண்ணிற்பதிந்த வைய்யை மீனென்ன - நண்ணும்

241. மதம்பாய் பொருப்பின் மருப்புப் பொதிந்தது
இதம்பாய் பிறையென் றியம்ப - கதம்பாய்ந்து

242. எறிகின்ற வே (ட) க மேறிப் பதிந்தங் (கு)
அறிகின்ற வட்டமதி யாகக் - குறிகுன்றி

243. மாணிக்கஞ் செங்கதிராய் மாறிப் பதிந்திருப்ப
ஆணிப்பொன் னும்பருலக தாய்விளங்கப் - பாணித்

244. தி(ரை) சேர் திவலைத் திரள்போய்த் திரண்டு
கரைசேர் சுரநதியாய்க் காண - விரைசேர்ந்து

245. பேரார் திருஞானப் பிள்ளைக் கமணருடன்
தீரா வழக்கைத் தெளித்துரைத்துப் - பாரிடம்போய்க்

246. காற்றாப் பறந்து கடலைக் குடித்தாலும்
ஆற்றா நெருப்பை யவித்தோடி - ஏற்றுவார்

247. எண்ணைக் கடந்தவெள்ள மெந்தை யொருகூடை
மண்ணைக் கடந்தோட மாட்டாமல் - பண்ணைப்

---

238. தடங்கிரி - விந்திய மலை.
239. குறுமுனி - அகத்தியர்.
240. தரங்கம் - அலை.
241. கதம்பாய்ந்து - விரைவாகப் பாய்ந்து.
242. வேடகம் - திருவேடகம் வே(ட)க - ஓலைசிதைந்துளது.
243. பாணி - நீர்.
244. சுரநதி - கங்கை.
அமணர் — சமணர்
245. திருஞானப்பிள்ளை — திருஞான சம்பந்தர்.
247. எந்தை — சிவபெருமான்,

248. பிழிந்தா ரமுதைவிட்டுப் பின்னே மதுரக்
குழம்பாற் கலந்து குழப்பி - வழிந்தெடுக்க

249. மேகக் குடத்தால் விசும்பு கவிந்ததெனப்
பாகைக் கடிந்து பரிந்தேறி - ஆகத்தின்

250. மைமைப் பிணிதீர் வளஞ்சுரந்து பார்மடந்தை
கைமைப் பிணிதீர் கலனாகி - மெய்மைசேர்

251. தீதரிக்குந் தெய்வ நதியாய்ச் சிறந்துலகை
யாதரிக்கும் வேகவதி யாற்றினான் - கோதை

252. வளர்க்குநா டென்ன வளநாடு சோணாடு
அளைக்குங்கொ டிப்புலிநா டென்ன - களைத்துயிரைக்

253. காவற் கடவுள் புறங்கொடுப்பக் காத்தெவரு
நாவி (ற் புகழ்பாண்)டி நாட்டினான் - பூவின்

254. மதுவொழிந்து பாய்ந்து வளர்சோலைக் கொம்பால்
விதுவழிந்து புத்தமுதம (வீ) ழ்ந்தும் - எதிர்கொண்டு

255. செங்கரும்பு கண்முத்தஞ் செஞ்சாலியா லுதிரப்
பைங்கரும்பாற் பைங்கமுகு பச்சென்ன - அங்கரும்புந்

256. தாழைநெடுங் கண்ணீர் தனைக்கதலி யாற்சொரிய
வாழை குலைசாய்ப்ப மஞ்சளாற் - குழுமியல்

257. மாடக் கிளிகள் மரகதத்தால் பூங்குயிலைப்
பேடைக்கிளை யென்று பின்செல்லக் - கூடி

---

250. மைமைப்பிணி — மலட்டுத்தன்மை.

251. வேகவதி ஆறு — வைகை நதி (வேகவதிக்கெதிரேற
விட்டதொரு சிற்றேடு காலநதி
நினைக்கரவா...")
—மனோன்மணியம்.

252. புலிநாடு — சோழநாடு.

253. நாவி (ற்புகழ்பாண்) டி — ஓலை சிதைந்துள்ளது.

253 காவற்கடவுள் — காத்தற்கடவுளான திருமால்.

254. விது — சந்திரன்.

255. கமுகு — பாக்குமரம்,

256. கதலி — வாழையில் ஒருவகை.

257. பேடைக்கிளி — பெண்கிளி.

258. நெருங்க மருப்பூங் குயிலை நீலமணியா
லொருங்கமருங் கிள்ளையுட னூட - மருங்கமரும்

259. வெண்டரளத் தால்வெண் குருகன்றிலை யெழுப்பிக்
கொண்டழைத்துக் காதற் குறைதீரத் - தண்டமிழோர்

260 செஞ்சொற் றமிழைத் தெளிந்துரைக்கச் சீர்படைத்த
விஞ்சைப் பதியான் வியன்பதியான் - அஞ்சலரில்

261. மன்மதன் கையம்பாய் மடவார்க் கிருவிழியாய்த்
தன்மணி மார்பில்நெடுந் தாமமாய் - நன்மை

262. திகழும்கருந் தேனுஞ் செந்தேனும் பாயப்
புகழுஞ் செழுங்குவளைப் போதான் - மகிழும்

263. விசும்பு ரவியோட்டு மென்றேரிற் பூட்டும்
பசும்புரவி (பாய்ந்துவரப்) பார்த்துங் - கெசம்போல்

264. அவதரித்தால் நன்றென் றரிபுரவி யாகச்
சவதரித்த கோலமெல்லாந் தள்ளிக் - குவலயத்திற்

265. பஞ்சகதி காட்டப் பறக்குந்தூள் வானதியைச்
செஞ்ச கதிகாட்டச் சென்றோடி - மிஞ்ச

266. நெடுங்கடலை வாட்டி நிறைக்கு நுரையாற்
கருங்கடலை வெண்கடலாய்க் காட்டி - அருங்க

267. ருடனைப் பகைக்குமர வோட மரையோட்டு
நடனப் புரவி நகுலன்-அடரும்

---

258. கிள்ளை — கிளி.
259. வெண்குருகு — வெள்ளைநாரை.
260. விஞ்சைப்பதியான் — நெட்டூர் எனும் ஊருடையான்.
'நெட்டூருங் கொண்டா னிறைஞானச் சேதிராயன்"
—சேதுநாடும். தமிழும்.
261. தாமம் — மாலை.
262 போது — மலர்.
263. ரவி — இரவி (சூரியன்).
கெசம் — கஜம் (யானை)
(பாய்ந்துவர) — சிதைந்துள்ளது.
264. சவதரித்த — ஒத்து நடந்த; குவலயம் — உலகம்.
265. பஞ்சகதி — ஐவகை நிலைகள்.
267. நகுலன் — பஞ்சபாண்டவருள் நான்காமவன்
(குதிரை சாஸ்திரத்தில் வல்லவன்).

268. விருப்பினாற் போரிட்ட மேவலருக் கெல்லாம்
மருப்பினாற் சொர்க்கம் வழங்கிப் - பொருப்பொன்று

269. வாரியை வாரி வடவை யுடனுண்டு
நீரும் கடைக்க ணெருப்புமா - ஊரி

270 னிறைப்பதென னிறைத்து நீள்சுடரை மேரு
மறைப்பதெனப் பிடுங்கி வாங்கிக் - குறைத்துத்

271. தடித்துமுரு முங்கடைவாய் தன்னி லொழுகப்
பிடித்து முகிலைப் பிளந்து - குடித்து

272. கதையா லடித்துக் கனக முகட்டை
யுதையா லிடித்து முதைப்புப்—புதையநெடுங்

273. ஆத்திரத்தாற் பாரைக் கவிழ்த்து மருப்பினாற்
கோத்தெடுந்து வைக்குங் கொலைக்களிற்றான்
—நீத்தமாய்

274. மண்ணிற்குக் காந்தம் வரிலெடுக்கு மோடம்போல்
விண்ணுக்கு ளோங்குநெடு மேழியான்—திண்ணமுறுங்

275. கல்யாண முன்றிற் கடைமுழக்காய் வாணரெனும்
வல்யாண ருக்கு மழைமுழக்காய்—வெல்ல

276. வெதிருங் கருதார்க் கிடிமுழக்க மாக
முதிருந் திறன்மும் முரசான்—விதிகளையு

277. மோருஞ் சிறுவ னொருவனைக் கூடாமற்
றாருங்கட வாத வானையான்—நீரும்

---

269. வடவை (வடவாமுகாக்கினி) (இது ஆழ்கடலினுள் உள்ளது எனப் புராணங்கள் கூறும்)

270. நீள்சுடர் — சூரியன்.

271. முகில் — மேகம்.

272. கதை — தண்டாயுதம்.
கனகமுகடு — பொற்சிகரம் (மேரு).

273. பார்—பூமி.
மருப்பு—தந்தங்கள்.

274. மேழி—கலப்பை.

275. வாணர்—பாண்டி நாட்டில் தஞ்சாக்கூர் எனும் நகரையாண்ட ஒரு தலைவன்.
வல்யாணர்—வலிய யவனர்.

277. ...—சிதைந்துள்ளது.

பாட்டுடைத் தலைவனைப் பயந்தோன் 278—284

278. நெருப்புந் தரித்த நிமலன் சகளம்
உருப்பொலியு நிற்களமு மோர்ந்து—விருப்பார்

279. தெருளே விளக்காய் தியானமே நெய்யாய்
அருளேநற் றூண்டுகோ லாகப்—பொருளிடத்தில்

280. அன்பே திரியா வாகந் தகழியாய்த்
துன்பா ருலகமெனத் தோன்றுமிருள்—பின்போய்த்

281. தெளிந்து தெளிந்து சிவன்றோன் றத் தோன்ற
விளிந்துவிளிந் தஞ்ஞானம் வீழத்—திழைந்துபர

282. மானந்த மூழ்கி யறிவுமறி யாமையும்போய்
மோனந் தனியே முனிந்துவர—வானும்

283. புவியுஞ் சனகனெனப் போகமோட் சத்தின்
சுவையின் பெருக்கிலே தோய்ந்து—தவருஞ்

284. செகராச ரும்போற்றுந் தெய்வகன்னி யென்னு(ம்)
மகராசன் பெற்ற மதலை—நகராச

சமயம், எல்லை, தலைநகர், பெயர்முதலியன 285—294

285. கன்னி யிடப்பாற் கடவுள் வலப்பாதஞ்
சென்னியின் வைத்தருளுஞ் சேதுபதி—பொன்மடந்தை

286. ஆகத்தன் மொய்ம்பி லமருஞ் செயமடந்தை
மோகத்தன் பாலத்தின் மூல (ங்)கா—லேக

---

278. நிமலன் - நிர்மலன் (களங்கமற்றவன்) சிவன்.
சகளம்—இருப்பது, உருவுடையது.
நிற்களம்—இல்லாதது, அருவமானது.
சகள நிற்களம்—இலிங்கமாகிய சிவனின் அருவுருவத் திருமேனி.
'சகளமாய் வந்ததென்று
உந்தீபற'' திருவுந்தியார்.

279. தெருள்—ஞானம், அறிவின் தெளிவு.

280. ஆகம்—மனம்.

281. சிவன்—சிவதத்துவம்

283. சனகனென—ஜனக மகாராஜனைப்போல் விருப்பு, வெறுப்பற்று.

284. செகராசர்—புவியரசர்.
மதலை—குழந்தை.

284—285. நகராச கன்னி—பருவதராஜன் மகளான பார்வதி.

285. கடவுள்—சிவபெருமான். பொன்மடந்தை—இலக்குமி.

287. வண்ணம் புனைந்த வனமுலையார் முத்துதிர்ந்துங்
கண்ணம் புனைந்து கவினிழந்தும்—எண்ணம்

288. பறிபோயும் வாடப் பவனி வருங் காமன்
அறிவோர் வடிவெடுத்த தன்னோன்—நெறிதீர்ந்(து)

289. அமரிட் டவர்தா மதிக வுயிரைக்
கமரிற் கவிழக் கவிழ்த்து—குமரி

290. வடக்கு வடபாலில் தெற்குங் குணபாற்
குடக்குங் குடபாற் குணக்குங்—கிடக்குஞ்

291. செகத்தைப் புரந்து செலுத்திப் பசும்பொன்
அகத்தைச் செயத்தம்ப நாட்டி—யுகத்தைக்

292. கடந்து மனுவைக் கடவாமற் செங்கோல்
படர்ந்துவருந் தேவைப் பதியான்—தடந்தோள்

293. அபைய னனக னனபாயன் தெய்வ
சபைய னெதிரிற் சதுரன்—உபயகுல

294. சுத்தன் கருட துவசத்திலே விசையும்
வைத்த ரெகுநாத மகிபால(ன்)—நித்த

ஈரமும், வீரமும்—295—308

295. மனமகிழ்ந்து மிக்க வரிசை யுதவத்
தினமகிழ்ந்து வீறு செலுத்தும்—கனவால்

296. "நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
(ெ)கடுநீரர் காமக் கலனென்று—உடனொழிந்து

---

288. காமன்—மன்மதன்.
289. அமர்—போர்.
290. குடக்கு—மேற்கு.
குணக்கு—கிழக்கு.
291. பசும்பொன்—இராமநாதபுர மாவட்டத்திலுள்ள ஒரு ஊர்.
292. மனு—மனுதர்ம சாஸ்திரம் (தருமநூல் பதினட்டனுள் ஒன்று).
தேவைப்பதி—இராமேசுவரம்.
293. அனகன்—அழகுள்ளவன்.
294. கருட துவசம்—கருடக்கொடி.
296. நெடுநீர்—விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யும் இயல்பு.
மறவி—செய்யுங் காரியத்தைச்செய்யாது மறந்துபோதல்.
மடி—சோம்பல்.
காமக்கலன்—விரும்பிப் பூணும் ஆபரணம்.

297. வாரம் பொறையுடைமை வள்ளன்மை வேளாண்மை
பேரன்பும் பெற்ற பிரதானி—வீரஞ்

298. சுமந்து மனம்வருந்தத் தோண்மீது வெற்றி
அமர்ந்திருந்து போர்கேட் டடரக்—குமைந்துபடத்

299. தட்டத் துருவித் தலைவிட்டுப் பாரென்று
துட்டத் (கடிவே)ல் துடிதுடிப்ப—வெட்ட

300. வடிவா ளுறையவிழ்த்து வாங்கென்று மாற்றோர்
கெடியதிர வாய்விட்டுக் கேட்(ப)—நெடிய

301. மலைவலளைத்து வந்தாலும் வாவென் றழைத்துச்
சிலைவளைக்கும் போர்வீர சிங்கந்—தலைவளைத்து

302. நின்றால் மடமாதர் நிற்கவிளை நெற்கதிரை
என்றாலும் பாரா வியல்பினான்—குன்றாத்

303. தீதையடைந் தடையார் தேயப்பொரு தாலுஞ்
சூதையும் வெட்டென்று சொல்லாதான்—பேதமற

304. மேலைக் கடவுள் விதியெழுத்தை நெற்றியைவிட்(டு)
ஓலைக்கு ளேயெழுது மொப்பத்தான்—மேலை

305. தலையென்று நின்றதரன் தரங்கந் தனையும்
அலையென் றருளா தருளான்—மலரம்புஞ்

306. சாரநிறையுந் தனிக்கரும்பு மில்லை யெனில்
மாரனு மில்லா வடிவினான்—பேரறிஞர்

---

297. வாரம்—அன்பு.
பொறை—பொறுமை.

298. அடர—வருத்த.

299. தட்டம்—தட்டு. அகலமான அமைப்புடைய கேடயம்.
(தடிவே)—சிதைந்துள்ளது.

300. கெடி—அச்சம்.

301. சிலை—வில்.

302. மடமாதர்—அழகிய பெண்டிர்.

303. சூது—சூதாட்டம்.

304. மேலைக்கடவுள் — பிரம்மன். விதியெழுத்து — தலை எழுத்து.

305. மலரம்பு—மா, அசோகு, முல்லை, குவளை, தாமரை முதலிய மலர்களால் ஆகிய மன்மதனின் மலரம்பு.

306. மாரன்—மன்மதன்.

307. பாடலுக்கு நல்ல பதத்தாற் சிவனாடு
மாடலுக்குச் சிந்தையென்னு மம்பலத்தான்—கூடல்த்

308. திருஞான சம்பந்த தேசிகன் பாதம்
பெருஞான சம்பந்தம் பெற்றான்—வருஞானங்

உறவும், உறவினரும் 309—315

309. கல்விக் கனியிற் கனிந்தூறுந் தெய்வகன்னி
செல்வக் கனிகனிந்த செந்தேறல் நல்லொழுக்கஞ்

310. சிந்தைக் கனியா திருஞான பூபாலன்
தந்தைக்குமா துலனாந் தாட்டாளன்—கொந்தவிழும்

311. போதில் திருவுடையான் பூவுக்கினி யானுந்
தாதைக்குப் பின்னுதிக்கத் தானுதித்தோன்—மூதறிவிற்

312. சென்மித்தவன் தேஹூர்த் தெய்வகன்னிப் பூபாலன்
தன்மைத் துனனாந் தலைமையான்—நன்மை

313. அருமைத் திறஞ்சேரு மம்பல வாணன்
ஒருமைத் துனனா முறவோன்—திருமொய்த்த

314. தென்னவ னான சிவபுரநாதன் றனக்கு
முன்னவ னான முதன்மையான்—மன்னித்

315. தெரிவார் தமிழ்முத்து தெய்வகன்னி யென்ன
இருவோரு நன்மருக ரென்ன—வருமொருவன்

குடிச்சிறப்பும், வடிவழகும்—316-326

316. சோதித் தன்மேனிச் சுடரொளிகண் டாழிதனில்
ஆதித்த னோடி யமிழ்ந்துவிட—நீதித்

---

307. பதம்—திருவடி.
கூடல்—மதுரையம்பதி.

310. மாதுலன்—தாய் மாமன், 'ஒரு சாரவன் மாதுலனென' —(கல்லாடம் 43.24); தாட்டாளன்—பெருமைமிக்கவன். கொந்தவமும்—கொத்தவிழும்.

311. தாதை—தந்தை.

312. தேஹூர்—நாகப்பட்டினம் வட்டத்தைச் சேர்ந்த ஒரு ஊர்.
—'ஊரும், பேரும்'—ரா. பி. சேதுப்பிள்ளை.
மைத்துனன்—தங்கையின் கணவன்.

314. முன்னவன்—முன்னால் பிறந்தவன் (அண்ணன்).
315. மருகர்—மருமக்கள் (மகளை மணந்து கொண்டவர்கள்).
316. சோதி—ஒளி, ஆதித்தன்—சூரியன்.

317. தனந்தினம் தேடுமொருத் தன்முகத்தைப் பார்த்து
தினந்தினந் தூயமதி தேயக்—கனம்பிரிபோய்

318. மேருவிலைப் பட்டுபய மேற்கொண்ட செங்கைக்குத்
தாருவிலைப் பட்டுச் சருகடையப்—போரில்

319. முதிரு மமுத முறியு மளவில்
மதுர மெதிர வசனன் — மதியின்

320. மரபு மிரவி மரபு நதியின்
மரபுமொரு மரபாய் வந்தோன் — அரவின்

321. மணியிலொரு மணியாய் வந்திவ் வுலகை
அணிபணி யென்ற வறிவன் — இனமோ(டு)

322. எறியு மயிலு மிவரு மயிலு(ம்)
முறுகி முருகு முருக — னெறியில்

323. வருத்து மவர்க்கு(ம்) மதிப்பி லவர்க்கும்
உருத்திர னொத்த வொருத்தன் — மருத்தன்

324. எடுத்த வளர்த்த வியற்கை மனத்தன்
நடுத்துலை யொத்த நலத்தன் — வடித்தெடுத்த

325. தங்கமங்க றைந்துரைந்த சந்தனங்க தம்பகுங்கு
மங்களின்தி மிர்த்துயர்ந்த மந்தரங்கள்—இங்கிரண்டு

326. மண்டலங் களும்புயங்க மண்டலங்க ளுந்தியங்கு விண்ட
லங்களுஞ் சுமந்து மென்றழும்பு—கொண்டகொண்டல்

---

317. ஒருத்தன் — ஒப்பற்றவன்.

318. தாரு—தேவதாரு (தேவலோகத்திலுள்ள கற்பகத்தரு).

319. எதிர — நிகரான.

319—320. மதியின் மரபு சந்திர குலம்.

320. இரவி மரபு — சூரிய குலம்.
நதியின் மரபு — கங்கைகுலம்.

323. நெறியில் வருத்தும் அவர் — ஆறலைக்கள்வர்.
உருத்திரன்— உக்கிரமூர்த்தியான சிவபெருமான்.
மருத்தன் — வாயு பகவான்.

324. இயற்கை மனத்தன் — அனுமன்.

326. மென்றழும்பு—விழுப்புண்பட்ட தழும்பு.

ஆட்சிச் சிறப்பும், அரசிருக்கையும் 327—350

327. கங்கைகுலத் தோனறிவுங் கர்த்தவிசு வாசமுமாந்
தங்கள் குலவித்தை தனைவளர்த்தோன்—திங்கள்

328. உறுந்தா ரகைபோ லொழியார் முத்தார
நறுந்தாரன் முத்துரகு நாத(ன்)—நிறைந்த

329. கதிபோல் மதியுதவு காட்சியால் தேவை
நதிபோலு முத்துரகு நாதன்—விதிபெற்(று)

330. உயர்ந்தோரு நற்றமரு முத்தமரும் வெற்றி
நயந்தோரும் வீரரு நல்லோரும்—வியந்தோர்க்குத்

331. தன்போ லுதவுந் தடக்கைவி தரணரும்
இன்போ லுயிரையெண் ணு வித்தகரும்—அன்போடு

332. கப்பமிடு மொன்னாருங் கப்பமிட்டுத் தன்சீமைக்கு
ஒப்பமிடக் காத்திருக்கு மொன்னாருங்—கொப்பத்து

333. வீழ்ந்தகெசம் போலடங்கி வீழ்ந்திறைஞ்சு மேவலருஞ்
சூழ்ந்த கொலுவிற் சுடரோன்போல்—தாழ்ந்தடர்

334. வெற்பெலாஞ் சூழ்ந்திருக்க வீற்றிருக்கு மேருப்போற்
பொற்பெலா மொன்றாய்ப் பொலிந்ததுபோல்-அற்புதமுஞ்

335. செங்கோன்மையுந் தேருஞ் சீருமவை யவமா
எங்கோன் மகிழ்ந்திருக்கு மெல்லைக்கண்—சங்கோடு

அரசவையில் விறலி பெற்ற விருது 336—353

336. சண்டையிட்டுப் பூகந்தனைப் போரிடுங் சமுத்திற்
கண்டையிட்ட தம்பொற் கவசமெனத்—தண்டலைக்கு

337. மஞ்சுங் குழைக்கு மலர்க்கூந்தல் காண்போருக்கு
அஞ்சுங் குழைக்கோ ரரனென் னக் — கஞ்சமுகை

---

329. தேவைநதி—வைகைநதி?

330. நயந்தோர்—விரும்பினோர்.

331. விதரணர்—கொடையாளர்.

332. கொப்பம்—யானை பிடிப்பதற்காக வெட்டும் பெருங்குழி.

336. பூகம்—கமுகு.
கண்டை—வீரக்கழல்.

338. விண்டலரு மென்று வியன்முலையைப் பார்த்திருக்கும்
வண்டொழுகு ரோமா வலியென்னத் — தண்டரள

339. மாலை முலைமேல் வயங்குவது புன்முறுவல்
காலு நிலவின் கதிரென்ன — வாலமதன்

340. வீடக மென்னுமுலை மீதிற் சரப்பணிகள்
ஆடக வெற்பினிற்பொன் னாறென்னப் — பாடகங்கள்

341. வீம்புகள் விட்டு விழுங்கல் குலுக்குடைந்த
பாம்புகள் பாதம் பணிந்தென்ன — நாம்பிறகு

342. முன்னிய மூக்கில் முத்து மூக்குத்தி சண்பகத்திற்
புன்னை யரும்பொன்று பூத்ததென்ன — மன்மதனைத்

343. தெட்டுந் தரங்குமுதத் தேனுடைந்து போகாமற்
கட்டும் பவளக் கரையென்னக் — கிட்டி

344. அருங்குறு வண்டு வளைந்தோடி யக்கூந்தன்
மருங்குறு வண்டு மலிய — நெருங்கி

345. ஒருகா லிரதி யொருகாலு மோர்பால்
இருகா லிரதிநின் றேற்ற — வருகாற்

346. புவிகைவணங் கச்சூழ்ந்த பூவையர் வெள்ளஞ்
சிவிகை யடவாய்ச் செலுத்த — கவிகை

347. மிகுத்தநிறை யென்ன விதானம் பிடிப்பத்
தொகுத்தமனைப் பொற்பூச் சொரியத்—திகைத்தெவரும்

348. விண்ணிசையுந் தாரையெல்லாம் வீழ்ந்தனவென் றேங்க நறும்
பண்ணிசையும் யாழிசையும் பாரிசையத்—தண்ணிசையுங்

349. கூந்தலா ளங்கொருத்தி கொண்டலுமின் னும்பிறையும்
ஏந்தலாற் றேவருமிங் கென்னலாய் — வேந்தர்

---

338. ரோமாவலி — கொப்பூழுக்கு மேலுள்ள மயிரொழுங்கு.
340. சரப்பணிகள் — வயிரமழுத்தின கழுத்தணி வகைகள்.
பாடகம் — காலில் அணியும் அணி (சிலம்பு).
342. மூக்குத்தி — மூக்கணி.
343. தெட்டும் — ஏமாற்றும், அபகரிக்கும்.
345. ரதி — மன்மதனின் மனைவி.
346. சிவிகை — பல்லக்கு.
348. தாரை — விண்மீன்கள்.

350. முறையொழுகி நிற்குமெங்கள் முத்துரெகு நாத
நிறைகொலுவிற் சேவித்து நின்றாள் — இறைவிருப்பங்

351. கண்டு நடித்தாள் கடவா ரணத்திலெதிர்
கொண்டுவிழு வாள்வீசிக் கொண்டுவந்தாள்
—தொண்டைக்

352. கனியமுதஞ் சிந்திடுதல் காணெனத் தேவர்
இனியமுதம் வந்திடில்வீ ணென்னத்—தொனியமுதைச்

353. சிந்தாமல்மிக்க செவியை நிறைத்தா ளழைப்ப
வந்தாள் புரிந்த வரிசைபெற்றாள்—நந்தார்

போற்றிக் கூறும் புகழ் மொழிகள் 354-361

354. மதிக்க முகிலனையாய் வானதிமீன் வைகை
நதிக்க முகிலேபாயு நாடா — கதிக்கும்

355. பிணிகொண்ட நெஞ்சம் பெறப்போ யரவின்
மணிகொண்ட செங்கை வளவா - பிணிகொண்(டு)

356. உறுத்தும் பெரும்பழிதா னொன்றுக் கெழுபது
இறுத்துட்புகழ் தேடு மெந்தாய் — மறுத்துவிடா(து)

357. அச்ச மகற்றுயருட்பசிக்கு நீசனவர்
எச்சி லுடனருந்து மெங்கோனே — மெச்சியசெஞ்

358. சாலி கொடுத்த தனத்தைக் கரும்பு தின்னக்
கூலி கொடுத்த குரிசிலே — நாலுணரும்

359. விஞ்சைநக ராநகரா வேளாளர் கையிரண்டு
மஞ்சுநிக ராகார மாய்த்தோனே — மிஞ்ச

360. மதுகை யிலாருட லிடித்தறிவ தல்லா
செதுகையிட வாள் பிடித்த தீரா — முதுகை

---

350. சேவித்து — வணங்கி.
353. வரிசை — பரிசு.
நந்தார் — சங்கு.
354. கதிக்கும் — எழும்.
355. அரவின்மணி — நாகரத்தினம்.
357-358. செஞ்சாலி நெல்லில் ஒருவகை.
359. மஞ்சு — மேகம்.
ஆகாரம் — உணவு.
360. செதுகை — தீமை.

361. இடையி லாருட லிடித்தறிவ தல்லால்
அடையலார் போரி லறியாய்—விடையென்று

தலைவிக்காகத் தோழி அனுப்பும் தூது 362—369

362. வஞ்சிக் கொடிப்பெண் வடிவாய் வரும்பொழுதில்
அஞ்சிக் கொடியே னயல்நின்றேன் — கெஞ்சத்

363. துடர்ந்தென் மனைபுகுந்த தோகைக்குத் தூது
நடந்தனையோ ரெல்லாரு நைந்தார் — விடந்தோய்

364. கொலைவேற்கண் ணேழை குவிமுலை வெற்பேற
அலைவேற்கண்ணே யேணி யாவாய் — நிலையாத

365. வன்மோகந் தந்த மடந்தையைப்பெண் மோகம்போல்
உன்மோக மும்போட் டுருக்குமே — பொன்மோக

366. ஆசைக்கூத்தாட்டு மறிவைப் பிடித்திழுக்கும்
வேசைக் கூத்தாட்டை வெளிப்படுத்து — நீசலவை

367. முக்காடு நீக்கி முகங்காட்டி நின்றவுடன்
முக்காடு நீக்கி முகங்காட்டி — அக்காரக்

368. கட்டி யுரைத்தாற்போற் கனிந்துரைப்ப தல்லாமல்
தட்டி யுரைக்கத் தலைபத்தோ — கட்டழகா

369. பொன்னவா தேவா புகழ்வா ரவரகத்து
மன்னவாதூ துரைத்து வா.

[பணவிடுதூது முற்றும்]

திருஞான முத்திரை தரித்த கைத்தாமரைச் செண்பகச்
சடகோபன் றிருவடிகளே சரணம் கருடாயநம.

---

363. துடர்ந்தென் — தொடர்ந்தென்.
367. அக்காரக்கட்டி — கருப்பங்கட்டி.

தூது நூற் தொகுப்பு

எண்.	நூலின் பெயர்	ஆசிரியரின் பெயர்	காலம் (நூற்றாண்டு)
1.	அங்கயற்கண்ணி ஆனை விடுதூது	நெல்லை ஆ. கணபதி	20
2.	அழகர் கமல விடு தூது	வெங்கடகிருஷ்ண பாரதி	19
3.	அழகர் கிள்ளை விடு தூது	பலபட்டடைச் சொக்கநாத கவிராயர்	18
4.	அன்பு விடு தூது	இராசமாணிக்கம பிள்ளை	19
5.	அன்பு விடு தூது	முத்துச்சாமி ஐயர்	20
6.	அன்ன விடு தூது	அல்லி மரக்காயர்	?
√7.	இராமேச்சுரம் இராமலிங்கேசர் பண விடு தூது	அட்டாவதானம் பெரிய சரவணப்பெருமாள் கவிராயர்	18
8.	எம்பெருமான் நெஞ்சு விடு தூது	?	?
9.	கச்சியப்பர் நெஞ்சு விடு தூது	?	19
10.	கச்சி ஆனந்தருத்திரேசா வண்டு விடு தூது	கச்சியப்ப முனிவர்	18
11.	கண்டி அரசன் கிள்ளை விடு தூது	சிற்றம்பலப் புலவர்	18
12.	கந்தசாமி கிள்ளை விடு தூது	சந்திரசேகர பண்டிதர்	19
13.	கழுதை விடு தூது	மிதிலைப்பட்டி கவிராயர்	?
14.	காக்கை விடு தூது	வெண்கோழியார்	20
15.	[1]காத்தான பிள்ளை மதங்கி விடு தூது	மதுரகவிராயர்	?

எண்.	நூலின் பெயர்	ஆசிரியரின் பெயர்	காலம் (நூற்றாண்டு)
16.	காந்தியடிகள் நெஞ்சு விடு தூது	ந. மு. வேங்கடசாமி நாட்டார்	20
17.	குமாரதேவர் நெஞ்சு விடு தூது	சிதம்பரக்கவிராயர்	19
18.	குருநாத சுவாமிகள் கிள்ளை விடு தூது	வரத பண்டிதர்	18
19.	கூளப்பநாயக்கன் விறலி விடு தூது	சுப்ரதீபக்கவிராயர்	18
20.	சங்கரமூர்த்தி விறலிவிடு தூது	?	?
21.	சண்பக நல்லூர்ச் சிவன் வண்டு விடு தூது	பலபட்டடைச் சொக்க நாதப் புலவர்	18
22.	சவ்வாது விடு தூது	?	?
23.	சிதம்பரரேசர் விறலி விடு தூது	தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை	18
24.	சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சு விடு தூது	சிவப்பிரகாசர்	18
25.	[2] சிற்றம்பல சம்பந்தர் கிளிவிடு தூது	அழகிய சிற்றம்பல சுவாமிகள்	?
26.	[3] சின்ன வன்னியனார் பேரில் பணவிடு தூது	?	?
27.	சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடு தூது	மீனாட்சி சுந்தரம் பிள்ளை	19
28.	செங்குந்தர் துகில் விடு தூது	?	?
29.	செண்டலங்காரன் விறலி விடு தூது	?	
30.	செருப்பு விடு தூது	பின்னத்தூர்நாராயணசாமி ஐயர்	19
31.	செந்திகாத்தான்பிள்ளை பாங்கி விடு தூது	திருவேங்கடத்தான் கவிராயர்	?
32.	சேக்கிப்பட்டி முத்து வீரப்பபிள்ளை மான்விடு தூது	?	?
33.	சேதுபதி விறலி விடு தூது	மாசிலாமணி தேசிகர் சரவணப் பெருமாள்கவிராயர்	19

எண்.	நூலின் பெயர்	ஆசிரியரின் பெயர்	காலம் (நூற்றாண்டு)
34.	ஞானப் பிரகாசா நெஞ்சு விடு தூது	மாசிலாமணி தேசிகர்	16
35.	தத்தை விடு தூது	சரவண முத்துப்பிள்ளை	19
36.	தமிழ்விடு தூது	அமிர்தம்பிள்ளை	19
37.	தானப்பாசிரியர் தசவிடு தூது	மீனாட்சி சுந்தரம் பிள்ளை	19
38.	திருநறையூர் நம்பி மேக விடு தூது	பிள்ளைப் பெருமாளையங்கார்	?
39.	திருப்பேரூர் முருகன் கிள்ளை விடு தூது	கந்தசாமி முதலியார்	19
40.	திருவேங்கடநாதர் வண்டு விடு தூது	?	18
41.	துகில் விடு தூது	?	?
42.	தெய்வச்சிலையார் விறலி விடு தூது	குமாரசாமி அவதானி	19
43.	நாதையன் விறலி விடு தூது	?	?
44.	நாராயணசாமி பிள்ளை கிள்ளை விடு தூது	?	?
45.	நெஞ்சுவிடு தூது	உமாபதி சிவாசாரியார்	14
46.	நெஞ்சுவிடு தூது	தத்துவராய அடிகள்	18
47.	நெல் விடு தூது	?	?
48.	பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது	பல பட்டடைச் சொக்கநாதப் புலவர்	18
49.	பழனியாண்டவர் நெஞ்சு விடு தூது	சிவப்பிரகாசம்	20
50.	பழையது விடு தூது	பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்	19
51.	பிள்ளை விடு தூது	(கிறித்துவ ஆசிரியர்)	19

எண்.	நூலின் பெயர்	ஆசிரியரின் பெயர்	காலம் (நூற்றாண்டு)
52.	புகையிலை விடு தூது	சீனி சக்கரைப்புலவர்	19
53.	புகையிலை விடு தூது	சுப்பிரமணிய வேலச் சின்னோவன்	19
54.	புல்லைக் குமரேசர் பணவிடு தூது	?	?
55.	புலவர் விடு தூது	அரங்கசாமி	20
56.	பெரிய தம்பியா பிள்ளை பேரில் மான்விடு தூது	?	?
57.	பெரியன் மான் விடு தூது	?	?
58.	மணவை திருவேங்கட முறையான் மேகவிடு தூது	?	?
59.	மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது	?	?
60.	மறலி விடு தூது	நாகை சதாசிவம் பிள்ளை	20
61.	மாதைத் திருவேங்கட நாதன் பணவிடு தூது	?	?
62.	மாரி வாயில்	சோமசுந்தர பாரதியார்	20
63.	யான்விடு தூது	குழந்தைக் கவிராயர்	18
64.	[5]முத்து விசயரகுநாதர் பணவிடு தூது	பல பட்டடைச் சொக்கநாத கவிராயர்	18
65.	[6]முத்துவீரப்பன் விடு தூது	?	?
66.	[7]மூவரையன் விறலி விடு தூது	மிதிலைப்பட்டி சிற்றம்பலக் கவியார்	19
67.	மேக தூதம்	கனக சபாபதி முதலியார்	20
68.	மேக தூதம்	நாகநாத பண்டிதர்	19
69.	வண்டு விடு தூது	மீனாட்சி சுந்தரக்கவிராயர்	19
70.	வண்டு விடு தூது	அல்லி மரக்காயர்	
71.	வனச விடு தூது	குன்றாப்பூர்க்கவிராயர்	?
72.	வானவன் விடு தூது	ஞானப் பிரகாச முதலியார்	?
73.	வெள்ளைய ராசேந்திரன் துகில் விடு தூது	?	?

1, 2, 3, 4, 5, 6, 7 —— இத்தூது நூற்கள் இன்னும் அச்சானதாகத் தெரியவில்லை.

சொல்லகராதி

(எண் — பக்க எண்)

அக்காரக் கட்டி 103
அக்கா ரெட்டி 75
அகப் பொருள் 7
அகநானூறு 8
அங்கம் 87
அச்சல் 73
அஞ்சையன் 75
அட்டாலைச் செட்டி 57, 75
அடல் மீன் 82
அத்தம் 68
அத்தான் 69
அதரக்கனி 83
அதிச்சம் 57
அதியமான் 9
அந்தகன் 71
அந்தணர் 51
அந்தப்புரம் 69
அபையன் 96
அம்பலம் 98
அம்பலவாணன் 54,98
அம்மான் 70
அமணர் 91
அரக்கு முத்திரை 77
அரச ஆணை 63
அரி 69
அரியலூர் 74, 75
அல்குல் 83
அவதானம் 80
அறந்தாங்கி 37
அன்பு 21
அன்னச் சேவல் 8
அன்னம் 21
அனகன் 96
அனந்தாள்வான் 75
அனபாயன் 96
ஆகமம் 71
ஆடகம் 68
ஆடரவு 82
ஆடுபுலி ஆட்டம் 63
ஆண்டாள் 13
ஆதளி 85
ஆதித்தன் 98
ஆப்பிடுதல் 79
ஆழ்வார் திருநகரி 40
ஆழி 98
ஆற்புறம் 82
ஆறை அழகப்ப முதலியார் 38
ஆனைமுகம் 82
இக்கேரி 74
இக்கேரி நாயக்கர்கள் 56
இரசவாதி 63
இரணியம் 67
இரதி 101
இராசன் 79
இராமாயணம் 16, 49
இராமேஸ்வரம் 56
இராய வேலூர் 35
இருப்பு 88
இருவாட்சி 21
இல் 82
இலங்கை 71
இன எழுத்து 3
ஈகை 68
ஈயமுத்திரை 77
உக்கிரம் 70
உடையதேவர் 33
உடையார் பாளையம் 75
உந்தித்தடம் 65
உப்பனாறு 56
உபாயம் 86
உமறுப் புலவர் 29
உமாபதி சிவாசாரியார் 20
உருக்குமணி 66
உருத்திரன் 66, 99
உரைகல் 77
உழுந்தூர் 75
உளளான் 76
எண்ணை 84
எலும்பு 84
எழுத்தமைப்பு 3
எழுத்தாணி 81
ஏமம் 68

ஏட்டுச்சுவடி 2
ஐங்குறுநூறு 8
ஐம்பெருங்குழு 12
ஒப்பம் 76, 97, 100
ஒழுகு 81
ஒற்று 3
ஒன்னார் 100
ஓடம் 94
ஓரியூர் 37
ஓலை 63, 79, 97
ஓலை அமைப்பு 3
கங்கை குலம் 51, 100
கச்சி 68
கச்சியப்ப முனிவர் 41
கச்சை 85
கடத்துவ சாதி 78
கடப்பங்காடு 67
கடுக்கன் 80
கடிகை முத்துப் புலவர் 29
கடைத் தலை 82
கண்டிக் கோட்டை 57, 75
கண்டை 100
கண்ணபிரான் 49
கத்துகடல் 68
கதம்பதேவர் 33
கந்தபுராணம் 16, 49
கந்தவேள் முன்னவன் 69
கப்பம் 53, 100
கம்பர் 16
கம்பக் களிறு 65
கம்பட்டம் 77
கமுதி 37
கயிலாசம் 79
கர்த்த விசுவாசம் 51, 100
கரடி 82
கரணம் 85
கரந்தை வருக்கக்கோவை 27
கரிக்கட்டை 84
கருப்பம் 84
கரும்பு 92
கருவெருமைநாக்கு 74
கல்யாணம் 68
கல்வெட்டு 81
கலி 70 89
கலை 73
கவசம் 100
கவிகை 101
கவிராசர் 25
கழுதை 25
களைக் கூத்தாடி 63
கற்படகு 82
கறுப்பு 80
காக்கை 14, 21
காசு 83
காடகம் 68
காந்தம் 94
காந்திப் பொருள் 69
காமவலை 83
காமமிக்க கழிபடர் கிளவி 9, 10
காமன் 69, 96
காமுகர் 83
காயம் 83
காரணன் 68
காராளர் 75
காலவெட்டு 81
காலெழுது 79
காவேரிப்பாக்கம் 56, 74
காற்புறம் 82
கிச்சம் 75
கிரந்தம் 86
கிருணி 86
கிழவன் சேதுபதி 31
கிளிவிடுதூது 10
கிறித்தவ சமயம் 51
கீதம் 85
கீழாநெல்லிக் கொட்டை 76
கீற்று 83
குகன் 79
குங்குமம் 80
குட்டம் 86
குடக்கு 96
குடம் 83
குணக்கு 96
குணாசிரியம் 78
குத்தகை 83
குமரி 96
குமரேசன் 67
குமைதல் 97
குயில் 21
குரங்கு 82
குரிசில் 102
குருகு 9
குருக்ஷேத்திரப் போர் 49
குவலயம் 71, 93
குவளை 21, 93
குழந்தை 83
குளம்பு 69
குறடு 82

குறிப்புரை 8
குறுமுனி 91
குறுந்தொகை 8
குனுக்கு 88
கூடலூர் 56, 74
கூடை 91
கூற்றுவன் 87
கெசம் 100
கெடி 97
கெடிலநதி 56
கெலிப்பித்தல் 80
கேதகைவாள் 71
கைப்பு 73
கையெழுது 79
கொங்கு 75
கொங்கை 83
கொண்டல் 13, 90, 99
கொட்டாரம் 82
கொப்பம் 100
கொம்பொழுது 79
கொலு 102
கொழும்பு 75
கொள்ளை 80
கொற்கை வழுதி 68
சோடு 69
கோப்பு 85
கோப்பெருஞ்சோழன் 8
கோல் 85
கோலவெட்டு 81
கோழி விழுங்கல் 44, 76
கௌரவர் 49
சக்கரம் 70, 85
சகடு 79
சகளம் 95
சங்கு 87
சங்கைக் குணம் 78
சண்பு த்தளம் 82
சண்பகம் 21, 101
சத்திமுற்றம் 18
சந்தமிழ்க்காசு 74
சந்திப்பேய் 84
சந்திர குலம் 51
சந்தை 82
சம்பங்கி 73
சமுக்கை 57, 74
சமுத்திரம் 89
சரப்பணி 101
சலம்பன் 75
சவ்வாது 21
சன்னகிரி 57, 74
சன்னகீற்று 44, 74
சனக மகாராசன் 49
சனகன் 95
சனிவாரம் 84
சாகாக்குடி 81
சாகுடி 81
சாட்டை 85
சாணான்காசு 74
சாம்பல் 86, 89
சாம்புநதி 71
சாமந்தன் 75
சாத்திரி 73
சாதத் ரூபம் 68
சாதி 78
சாலி .02
சிங்கமுகம் 82
சிந்தாமணி 86
சிந்துரக் கன்று 69
சிந்தூர சேஷம் 86
சிமையம் 70
சில்லறை 44, 76
சிலம்பு 12
சிவந்தான் மல்லைப் பல்லவன் 28
சிவபுரனாதன் 55, 98
சிலம்பம் 84
சிற்சபை 67
சின்ன மகிபன் குளுவநாடகம் 58
சீர் 2
சீவக சிந்தாமணி 14
சுத்தி 87, 88
சுந்தரர் 15
சுந்தரனார் 67
சுப்ரதீபக் கவிராயர் 26, 29, 34
சுரநதி 91
சூதாட்டம் 63
சூது 97
சூரிய குலம் 51
சூலம் 89
சூளாமணி 15
செகம் 96
செங்குன்றையூரன் 29
செஞ்சி 75
செதுகை 102
செப்பாடல் 76
செம்பு 87, 88
செய்யாறு 75
செயத்தம்பம் 96
செயமடந்தை 95

செருப்பு 21
செம்பியனார் 10
செம்போத்து 14
சென்மித்தவர் 72
சென்ன பட்டினம் 74
செனித்தல் 78
சேதுபதி 50, 51, 95
சேருகான் 57, 74
சேவல் 13
சேற்பனம் 86
சொக்கலிங்கம் பிள்ளை 26
சொலுப்புளி 84
சொன்னகடம் 78
சொன்னத்துவ சாதி 78
சோகை 86
சோடு 80
சோணாடு 92
சோழியன 75
தகழி 95
தங்கம் 87
தசாங்கங்கள் 52
தசாங்கம் 59
தஞ்சாவூர் 75
தஞ்சை 0
தட்டம் 97
தட்டாரம் 77
தட்டாரிநாகன் 75
தடங்கிரி 91
தடி 85
தண்டியலங்காரம் 14
தத்து 85
தந்தி 90
தம்பிசெட்டி 75
தமியன் 66
தமிழ்முத்து 55, 98
தர்க்கவாதி 63
தர்க்கீகர் 77
தரங்கம் 91, 97
தரணி 85
தரளம் 93
தழும்பு 99
தளகர்த்தன் 70
தளை 2
தனம் 67
தனுபரிமாணம் 79
தாட்டன 84
தாட்டாளன் 98
தாதை 98
தாய்க்கிழவி 83
தாய வலந்தீர்த்த கவிராயர் 40
தாயாதி 82
தாயுமானவர் 18, 29
தாராசுரம் 75
தாழை 92
தாளம 85
திம்மானாய்க்கன் 74
திம்மி 57 74
திவ்யப்ரபந்தம் 13
திவசம் 84
திரவியம் 78
திரிகூடராசப்பக் கவிராயர் 29
திருக்குறள் 11
திருஞான பூபாலன் 35, 54,98
திருஞான சம்பந்த தேசிகன் 98
திருஞானப் பிள்ளை 91
திருப்பத்தூர் 37
திருமங்கையாழ்வார் 13
திருநெல்வேலி 75
திருவாங்கோடு 75
திருவாசகம 13
திருவிளையாடற் புராணம் 49
திருவுடையான் 54, 98
திருவையாறு 75
திரோணுவம் 78
திவு 82
துகில் 21
துட்டு 86
துப்புருசுசாமயன் 75
துரங்கம் 71
துரைரத்தனம் 69
துலுக்கன 84
துலை 77
துவசம் 96
துறையூர் 75
தூது முனிவின்மை 7
தூரனாள் 83
தூற்றுக்குடி 75
தெட்டித் திரிதல் 77
தெய்வ கன்னி 28,33,34,54,55,98
தெய்வகன்னிப் பூபாலன் 54, 98
தெருள 95
தெனசளந்தை 30
தென்காசி 75
தேம்பாவணி 16
தேவூர் 98
தேவை உலா 27, 38
தேவை நதி 100
தேவைப்பதி 52,96

தொண்டமான் 9, 75
தொல்காப்பியம் 6
தோடா மொழி 19
தோறகாக 74
நகராச கனனி 51, 95
நகுலன் 49, 93
நட்டார் 77
நண்டு 9
நண்டுக்கால் ஊணையம்
நந்தன் 74
நம்மாழ்வார் 13
நயக்காரர் 77
நரசிங்க நாயகர் 29
நரி 82
நலுங்கிடுதல் 88
நளவெண்பா 17
நற்றிணை 8
நன்னாமியான் 75
நாணயம் 76
நாட்டுப் பாடல்கள் 19
நாட்டெல்லை 53
நாயக்க வமிசம் 58
நாரசிங்கன் வளமடல் 27
நாரை விடுதூது 9
நாவுக்கரசா 13
நாவெழுது 79
நிதானம 95
நிலடபத்திரம் 63
நீர் முளளி 86
நூற்றுவர் 90
நெஞ்சு 83
நெஞ்சுவிடு தூது 11
நெட டூர் 35, 56
நெடுநீர் 96
நெல 21
நெல்வேலி 67
நேசம் 83
நேரிசம 76
பங்கிடல் 83
பச்சிலை 87
பச்சை 80
பசும்பொன் 96
டஞ்சபாண்டவர் 49
பட்சினனகிரி 57, 74
பட்டடைச் சிங்காதனம் 77
படி 2
படிக்கல் 77
படிக்காசுப் புலவர் 29, 30
பதினான்கு வாயில்கள் 7
பந்தளம் 75
பரயிடைப்பு 81
பரஞ்சோதி முனிவர் 28, 29
பரதஞ் செரராயன் 74
பரவை நாச்சியார் 15
பரிமாணம் 79
பருந்து 84
பல்லங்கி 73
பல்லி 14
பவளக்காடு 74
பவானி சங்கரன் 33, 36
பழுவெலும்பு 81
பழையது 21
பற்றடைப்பு 81
பறவை 13
பா 2
பா அமைதி 2
பாங்கி 21
பாட்டியல் 20
பாடகம் 63, 101
பாரிசா வெட்டு 76
பாண்டு 86
பாபநாசம் 56
பாம்பணை 66
பாம்பன் 37
பாரதியார் 18
பாரிசாதம் 21
பாளையங்கள் 53
பாஷாணம் 87
பிச்சி 21
பிடம் 87
பிடரிகுத்து 81
பிடவை 84
பித்தம் 86
பிதா 69
பிதாமகன் 69
பிரதானி 97
பிரதானிமார் 74
பிரபந்தங்கள் 6
பிரமபு 89
பிளளையன் 75
பீனிசம் 86
புசையிலை 21
புடம் 78
புத்தேள் 65, 70
புரம் 66
புலிநாடு 92
புல்முகம் 82
புவனம் 66

புழு 82
புழுகுமெழுகுண்டை 77
புறநானூறு 8
புறப்பொருள் 6
புன்னை 101
பூ 83
பூகம் 101
பூச்சயன் 58, 75
பூச்சி 82
பூமாது 65
பூவணம் 67
பூவுக்கினியான் 54, 98
பூவை 21
பெம்மான் 70
பெரிய சின்னணைஞ்சாத்தேவர் 32
பெரிய புராணம் 15, 49
பெரியாழ்வார் 13
பெருங்கதை 16
பெருங்காசு 44, 74
பெருங்கீற்று 44, 74
பேடை 92
பேயோட்டுபவர் 63
பொங்கல் 83
பொதியப் பொருப்பு 91
பொய்ப் புலவர் 63
பொருப்பு 90
பொழிப்பு மோனை 3
பொற்கடகம் 78
பொற்சிலை 66
பொறை 97
பொன் 21
பொன் மோதிரம் 78
பொன்னம்பலம் பிள்ளை 32
பென்னனையாள் 67
பொன்னி 68, 72
போசராசன் 29
போர்வை 77
மகாபாரதம் 49
மஞ்சள் 92
மஞ்சு 102
மட்டம் 77, 87
மடிச்சீலை 77
மண்வெட்டி 81
மணிப் பந்து 83
மணிய காரர் 75
மத்தளம் 85
மதங்கி 21
மதலை 95
மதுரம் 70
மதுரை 75
மதுரை யமக அந்தாதி 27
மந்திரி 70
மயில் 21
மரகதம் 92
மரணம் 85
மரு 83
மருகர் 98
மருத்தன் 99
மருத்து 73
மருத்துவர்கள் 63
மருப்பு 90
மருள் 79
மரை 82
மலையாளம் 70
மறைப்பேய் 84
மன்மதன் 101
மனு 52, 96
மனு நரம் 79
மனுபரிமாணம் 79
மனோன்மணீயம் 17
மா 67, 69
மாடம் 92
மாடு 69, 85
மாடை 74
மாதுலன் 98
மாமாது 65
மாமுகில் 13
மாயன் 70
மாரன் 97
மால் 71
மால்வரை 71
மாவடு 83
மாவைக் கறுப்பன் 29
மாழை 68
மான் 21
மான் குட்டி 85
மானியம் 81
மின்னனையாள் பாகன் 67
மீன் கொத்தி 85
முட்டை 83
முடக்காறு 80
முண்டித்தல் 82
முத்தம் 82
முத்துரகுநாதன் 50, 100, 102
முத்தொள்ளாயிரம் 17
முந்தானை 83
முறம் 89

மூக்குத்தி 63, 101
மூச்சு 83
மூத்த கொம்பு 81
மெய்ப்பாடு 7
மேகதூதம் 24
மேகலை 12
மேகஸந்தேசம் 24
மேதினி 71
மேலைக்கடவுள் 97
மேன்துரை 70
மேனி 85
மொந்தை 88
மோகரம் 73
மோசம் 83
மோழை 69
மைத்துனன் 98
யாக்கை 81
ரகுநாத சமுத்திரம் 37
ரவிக்கை 83
ரசவாதி 72
ராணிமங்கம்மாள் 31
ராசிபுத்தன் 75
ராமச்சந்திரயன் 75
ராமப்பயன் 57, 75
ராஜசிங்கமங்கலம் 37
ராஜதுறவி 49
ரூபி 83
ரெகுநாதமகிபாலன் 96
ரோமாவலி 01
லச்சை 85
லாகெடுத்து 85
லிங்கம் 87
வச்சிரம் 82
வசனம் 21
வசனன் 99
வடம் 83
வடுகநாத தேவர் 32
வடுகன் 84
வடுகு 80
வண்டு விடு தூது 10
வர்த்தித்தல் 72
வம்பு 72
வராகன் 74
வரிசை நிலம் 80
வல்லைக் காளத்தி 29
வஃவிலங்கு 72
வள்ளன்மை 52, 97
வறடு 82
வஸ்த்து 71
வனப்பு 6
வாச்சீ 82
வாதம் 86
வாரணம் 13
வாரநிலம் 80
வாரம் 97
வாரி 94
வாழை 90
வான் கொத்தி 85
விஞ்சைக் கோவை 27
விஞ்சை நகர் 102
விஞ்சைப் பதி 93
விடை 90
விடைக் குன்றம் 65
வித்தை 84
வித்தகர் 100
விதரணர் 100
விதானம் 101
விரத்தர் 73
விருத்தி 81
விருது 71
வில்லிபாரதம் 15
விலைமகளிர் 63
விறலி 21
விறலியர் 63
விறற்கர்ணன் 75
விஜயரகுநாதத் தொண்டமான் 57
விஜயரகுநாதத்தேவர் 32
வீடகம் 101
வீரமாமுனிவர் 29
வெம்புதல் 72
வெள்ளிவிதியார் 9
வெறுக்கை 68
வெங்கிட்டராயன் 74
வெட்டு 76
வெள்ளி 66
வெள்ளை வெள்ளாளன் 75
வெறுராயன் 74
வேகவதி 92
வேங்கை 68
வேடகம் 91
வேம்பு 86
வேழம் 90
வேளம்பர் 68
வேளாளன் 52, 91
வைகை 102
வையை 91
க்ஷயம் 86

துணை நூற் பட்டியல்

1. கலைக் களஞ்சியம்
2. அகராதிகள்
3. தொல்காப்பியம்
4. நன்னூல்
5. பன்னிரு பாட்டியல்
6 பிரபந்த மரபியல்
7. பிரபந்த தீபிகை
8. சங்க இலக்கியங்கள்
9. திருக்குறள்
10. சிலப்பதிகாரம்
11. மணிமேகலை
12. சீவகசிந்தாமணி
13. பெரிய புராணம்
14. வில்லி பாரதம்
15. இராமாயணம்
16. மூவர் தேவாரம்
17. நாலாயிர திவ்ய பிரபந்தம்
18. திருவிளையாடற் புராணம்
19. தூதுத் திரட்டு
20. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்
21. தனிப்பாடல் திரட்டு 1, 2, 3, 4, 5 தொகுதிகள்
22. கலம்பகக் கொத்து
23. நந்திக்கலம்பகம்

24. பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது
25. சண்பகநல்லூர்ச் சிவன் வண்டு விடு தூது
தேவை உலா
திருப்பூவண நாதருலா
} டாக்டர் உ.வே சாமிநாத அய்யர் பதிப்புக்கள்
26. பெருந்தொகை 1&2 தொகுதிகள் - ரா. ராகவையங்கார்
27. செந்தமிழ் - தொகுதி 7 — (1908-1909)
28. மதுரைத் திருவேங்கடேசர் பணவிடுதூது - 1908 - பதிப்பு
29. இராமலிங்கேசர் பணவிடு தூது - பதிப்பாசிரியர். எஸ். வையாபுரிப்பிள்ளை
30. சேது நாடும், தமிழும் - ரா. ராகவையங்கார்
31. இராமநாதபுர மாவட்டம் - சோமலே
32. ஊரும், பேரும் - ரா. பி. சேதுப்பிள்ளை
33. மதுரை நாயக்கர் வரலாறு - அ. கி. பரந்தாமனார்
34. செந்தமிழ் வளர்த்த தேவர்கள்
35. இராமநாத ஸ்வாமி கும்பாபிஷேக மலர்
36. Gazetteer of Ramnad
37. Gazetteer of India : Ramnad District
38. General History of the Pudukkottai S. Radhakrishna Ayyar - 1916.
39. A History of the Maravas - Dr. s. kadirvel.
40. The Sethupathis of Ramnad - S. Thiruvenkatachari.
41. Ramnad Manual - Madras, 1933.
42. History of the Nayaks of Madura—R. Sathiyanatha Ayyar
43. South Indian Epigraphy.

சுவடிகள்

44. விஜய ரகுநாத சேதுபதி மீது ஐந்திணைக் கோவை.
45. புல்லைக் குமரேசர் பணவிடு தூது.
46. சின்ன வன்னியனார் பேரில் பணவிடு தூது.